
இளையாத்தக்குடி

அருள்மிகு நித்தியகல்யாணி அம்பிகை சமேத கைலாசநாதர் திருக்கோயில்



குடமுழுக்கு விழா மலர் – 1985



இளையாத்தக்குடி
அருள்மிகு நித்தியகல்யாணி
அம்பிகை சமேத கைலாசநாதர்
திருக்கோயில்.

குடமுழுக்கு விழா மலர்

கோடிவரம் தருவார்
நாடி வணங்கிடுவோம்

தமிழக வரலாற்றை ஓர் ஆலயத்திற்கு ஒப்பிட்டால் அதில் நகரத்தார் வரலாறு நானிலம் போற்றும் கோபுரமாக விளங்குகின்றது.

அந்தக் கோபுரத்தின் பொற்கலசமாக விளங்குவது இளையாத்தக்குடிக் கோயில் ஆகும்.

நகரத்தாரின் முதல் கோயிலாக மட்டுமல்லாமல், எழில்கோயிலாக, சோழவள நாட்டிலிருந்து அவர்கள் பாண்டியப் பெருநாட்டிற் வந்த தற்கு அடித்தளமிட்ட அற்புத ஆலயமாக, அருள் ஒளிவீசும் திருத்தல மாக அது விளங்குகிறது.

ஏழுகடல்கள் கொண்ட வையம்போல இளையாத்தக்குடிக் கோயில் ஏழு பிரிவுகளைக் கொண்டதாகத் திகழ்கிறது.

பனிமலை இறைவனும் அவன் தனிப்பெரும் தேவியும் இங்கு கைலாச நாதராகவும், நித்திய கல்யாணியாகவும் வீற்றிருந்து எல்லோர் இளைப்பையும் அகற்றி இன்னருள் புரிகிறார்கள்.

நாடி வருவோருக்குக் கோடிவரம் தரும் அவர்கள் திருக்கோயில் குடமுழுக்குவிழாவின் பொலிவுக்கு ஓர் ஒளிவிளக்காகக், கற்பகமலர் போல இந்த அற்புத மலர் பூத்திருக்கிறது.

இந்தப் பொன்மலருக்கு, நன்மலருக்கு, இலக்கிய இன்மலருக்கு கவிதைகள், கட்டுரைகள் தந்துதவிய பெருமக்களுக்கும், விளம்பரங்கள் தந்துஉதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும், இம்மலர்சிறக்க உதவிய அனைவருக்தும் இம்மலர் உருவாக முற்றிலும் முன்னின்று உதவிய குடமுழுக்கு விழாக் குழுவினருக்கும் எங்கள் இதயம்கனிந்த நன்றி என்றும் உரியது.

டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி
தலைவர்

எம். எஸ். மெய்யப்பன்
செயலாளர்

புலவர் நாகசண்முகம்
ஆசிரியர்

ஏ. ஆர். ராமசாமி
மெ. நா. சித. சிதம்பரம்
மெ. செ. ச. மு. மெ. முத்துராமன்
சி. மு. அரு. நா. அரு. நாராயணன்
செயற்குழுவினர்


குடமுழுக்குவிழா மலர்க் குழு



கைமேல் பலன் தந்து
கலியெல்லாம் நீக்குகின்ற
கைலாசநாதரின்
வண்ணத் திருக்காட்சி



[illegible]
[illegible]
[illegible]
[illegible]



செழித்தோங்கித் தழைத்து வாழ்க

அருளரசு
கிருபானந்தவாரியார்
சுவாமிகள்

கோல இளையாத்தங்
குடியினிது வாழியவே
சீலநகரத்தார்
செழித்தோங்கி—ஞாலமதில்
வேலன் திருவருளால்
வேண்டுவன எய்தியே
சாலவும்
வாழிதழைத்து

ஆன்மீகச்சோலை

அறநிலையத்துறை அமைச்சர்
மாண்புமிகு இராம. வீரப்பன்

உலகத்தில் மிகவும் சிறு தொகையினரான ஒரு மரபினர் மிகப்பெரும் அளவில் திருப்பணிகளையும் அறப்பணிகளையும் செய்துள்ளது பற்றி ஓர் ஆய்வு செய்தால் அதில் முதல் இடத்தை நகரத்தார் சமூகத்தினர்தான் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

அந்த மரபினர் வழிவழியாகத் தொடர்ந்து அந்த நல்ல உணர்வுகளை உடையவர்களாகவே விளங்குகிறார்கள் என்பதைக் கோயில்வழிக் குடிகளாக அவர்கள் வாழ்வதே நன்கு உணர்த்துகிறது.

நகரத்தார்களின் ஒன்பது கோயில்களில் தொன்மையும் முதன்மையும் உடைய இளையாற்றங்குடிக் கோயிலின் குடமுழுக்கு விழா மேத்திங்கள் 2-ஆம் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நானும் அதில் கலந்துகொண்டு மகிழும் வாய்ப்பினைப் பெற்றேன். அன்று அங்கு கூடிய ஆயிரக் கணக்கான மக்களைப் பார்த்த போது, இளையாற்றங்குடி, இறைவன் கொலுவிருக்கும் குடி என்ற எண்ணமே தோன்றியது.

புகழ் மிக்க அந்தக் கோயில் குடமுழுக்கு விழாவை ஒட்டி மலர் ஒன்று வெளிவருவது மிகவும் பொருத்தமுடையது. மலர் இலக்கிய மணமும் பத்தி-மணமும் கொண்டு அழகிய ஆன்மீகச் சோலையாகத் திகழ வாழ்த்துகிறேன்.

தெய்வத்தொண்டு

மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் தலைவர்

இளையாத்தக்குடி அருள்மிகு நித்தியகல்யாணி அம்பிகை சமேத கைலாசநாதர் திருக்கோயில் குடமுழுக்குவிழா, சிறப்புற நடைபெற்றதறிந்து மகிழ்வடைகிறேன்.

இளையாத்தக்குடி நித்தியகல்யாணி அம்பிகையின் பெருமையைப் பற்றி திரு சின்ன அண்ணாமலை சொல்லிக் கேட்டிருக்கிறேன். நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களில் ஒருசாராரின் குலதெய்வம் அருள்மிகு நித்தியகல்யாணி அம்பிகை என நான் அறிந்திருக்கிறேன்.

குடமுழுக்கு விழாவை ஒட்டி வெளிவரும் சிறப்பு மலர் தெய்வ மணமும் தமிழ் மணமும் கமழ அமையும் என்று நம்புகிறேன்.

இந்தத் தெய்வத் தொண்டில் ஈடுபட்டுள்ள எல்லோரையும் பாராட்டு கிறேன். வாழ்த்துகிறேன்.

டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி
தலைவர்
திருப்பணிக்குழு
குடமுழுக்குவிழா மலர்க்குழு

நான் பெற்ற பெரும் பேறு

கோடி செம்பொன்னைக் கொட்டிக் கொடுக்கின்ற பெரும் செல்வந்தர் ஆனாலும், நாடி ஒரு காசாயினும் பெறும் பரம ஏழை ஆனாலும், அவரவர்கள் வாழ்வில் ஏதாவது ஒரு மனக்குறை இருக்கத்தான் செய்யும், அது எவ்வளவு நெருக்கமானவர்களாக இருப்பினும் அவர்களிடம் கூடச் சொல்ல முடியாததாக இருக்கலாம்!

அப்படி ஒரு நிலைமை ஏற்படுகின்றபோது, நம்முடைய குறையையும் நிறையையும் இறைவன் ஒருவனிடம்தான் சொல்ல முடியும்.

அந்த இறைவனை நினைக்கவும், துதிக்கவும், போற்றவும், ஏற்றவும் அதன் மூலம் புனிதம் பெறவும் ஒரே வழி ஆன்மீக நெறிதான்!

ஆன்மீக நெறிக்கு இணையானது உலகில் வேறு எதுவும் இல்லை. அந்த நெறிக்கு நம்மை ஆளாக்குவதற்கு, நிலைக்களன்களாக விளங்குவன ஆலயங்களே.

ஆலயங்கள் தெய்வங்கள் வீற்றிருக்கும் திருப்பதிகளாக விளங்குவதோடு, மன அமைதி தரும் புனிதப் பூந்தோட்டங்களாகவும், புண்ணியத் திருத்தலங்களாகவும் விளங்குகின்றன.

ஆயிரம் ஆயிரம் மாடமாளிகைகளை நிர்மாணித்துப் பார்ப்பதைவிட, ஓர் ஆலயத்தைத் திருப்பணி செய்வது கிடைத்தற்கரிய பெரும் பேறாகும்.

என் பாட்டனார் செட்டிநாட்டரசர் அண்ணாமலை செட்டியார் அவர்களும், என் தந்தையார் செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்களும் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். பல திருப்பணிகளுக்கு மனமுவந்து உதவி இருக்கிறார்கள்.

அவர்கள் வழிவந்த காரணம் என்றே நினைக்கிறேன், ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்பசுவாமி திருக்கோயில் திருப்பணியினைச் செய்யும் பாக்கியத்தைப் பெற்றேன்.

எதிர்பாராத நிலையில், என் தந்தையார் செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்கள் இறைவன் திருவடியை அடைந்ததால் இளையாத்தாக்குடிக்கோயில் திருப்பணிக் குழுத் தலைமைப் பொறுப்பினை, இளையாத்தாக்குடிக் கோயில் நகரத்தார்கள் மனம் உவந்து எனக்குத் தந்தார்கள்.

அதை வாழ்நாளில் நான் பெற்ற பெரும்பேறாகக் கருதுகிறேன்.

நகரத்தார் பெருமக்களின் முதற்கோயிலும் சிறப்புமிக்கத் திருத்தலமுமான இளையாத்தாக்குடிக் கோயில் திருப்பணி, இணையற்ற முறையில் நடந்து, நிறைவுபெற உதவிய திருப்பணிக் குழுவினருக்கும் ஏழுபிரிவினரான இளையாத்தாக்குடி நகரத்தார்கள் அனைவருக்கும் கோயில் நிர்மாணப் பணியில் பங்குகொண்ட அனைவருக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருளும் எழிலும் கொண்ட இளையாத்தாக்குடிக் கோயில் போலவே அதன் குடமுழுக்கு விழா மலரும் போற்றத்தக்க வகையில் மலர்ந்துள்ளது.

மலர்க்குழுவினருக்கு என் நன்றி உரியது. நகரத்தார்கள் அனைவரும் நித்தியகல்யாணி சமேத கைலாசநாதரை வணங்கி எல்லா நன்மைகளையும் நாளும் பெற்று, வளமோடு வாழ அந்த நாயகியையும், நாயகனையும் இருகரம் கூப்பிப் பிரார்த்திக்கிறேன்.

நன்றியும் வணக்கமும் உரியன

எம். எஸ். மெய்யப்பன்
செயலாளர்
குடமுழுக்கு விழா மலர்க்குழு

கடவுளைப் போலவே கவிஞர்களும் படைப்பாளிகளாக இருக்கிறார்கள். அதனால் தானோ என்னவோ அவர்கள் வாக்குக்கும் வன்மை ஏற்பட்டுவிடுகிறது.

நகரத்தார் சமூகத்தில் கவிதைத் துறையில் பலர் முத்திரை பொறித்திருக்கிறார்கள். அவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் பாடுவார் முத்தப்ப செட்டியார் ஆவார்கள்.

அவர்களது கவிதை வயிரங்களில் ஒன்று.

இங்கிலீஷ் கொடி பறக்கவே
இளையாத்தாக்குடி சிறக்கவே

என்பதாகும்.

உலக அரங்கில் எத்தனை எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டாலும் இன்னும் பிரிட்டிஷ் கொடி பறந்துகொண்டுதான் இருக்கிறது.

அதைப் போலவே, இன்னும் சொல்லப்போனால் மேலும் ஒருபடி சிறப்பாகவே இளையாத்தக்குடிக் கோயிலின் புகழ்வானளவும் உயர்ந்து விளங்குகிறது.

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்களின் கவிதை வரிகளில் இடம்பெற்று இளையாத்தாக்குடி இலக்கியமாகவும் வரலாறாகவும் எழில் பெற்றுவிட்டது.

நகரத்தார் கோயில்கள் அனைத்திலும் முதல் மரியாதையாக, விபூதி பிரசாதம் வழங்கும்பொழுது 'இளையாத்தாக்குடி ஒக்கூருடையார்' என்ற குரல் ஒலிப்பதைக் காணலாம்.

நகரத்தார் கோயில் பிரிவின் தோற்றம் இளையாத்தக்குடியிலிருந்தே தோன்றியது என்பதும் பிள்ளையார்பட்டியாரும் இரணிக்கோயிலாரும் இக் கோயிலிலிருந்து சென்றவர்களே என்பதும் வரலாற்று உண்மைகளாக விளங்குகின்றன.

இந்தியாவின் பெருமையைக் காணவேண்டும் என்றால் இந்தியக் கிராமங்களைக் காணுங்கள் என்று காந்தியடிகள் சொன்னார்கள்.

நகரத்தார் பெருமையை, பெருமிதத்தை, வரலாற்றை, வாழ்வின் சிறப்பை காணவேண்டுமென்றால் இளையாத்தக்குடிக்கு வாருங்கள் என்று சொல்லும்வண்ணம் அந்த ஆலயமும் ஊரும் ஊருணிகளும் அமைப்பும் காஞ்சிப் பெரியவர்கள் வந்து களித்துச் சிறந்த, நிலைபெற்ற இடமும் இன்னபிறவும் விளங்குகின்றன.

நித்திய கல்யாணி உடன் உறையும் கைலாசநாதர் ஆலயக் குடமுழுக்கு விழா மலர் அவர்கள் அருளால் அழகும் இலக்கிய மணமும் பெற்று விளங்குகின்றது.

இளையாத்தக்குடி வரலாற்றுக்கு மட்டுமல்லாமல் நகரத்தார் வரலாற்றுக்கும் இது ஒரு எடுத்துக்காட்டாக மலர்ந்துள்ளது. இதற்கு உதவிய அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் உரியன.

சிவன் கழலின் சிறப்பு

பேராசிரியர் - சை. வே. சிட்டிபாபு
துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இறைவனை வணங்குதலே தலையாய கடமையும், கற்ற அறிவின் பயனுமாகும்.

செய்யுள் திகழ் சொற்றெளிவும் செவ்விய நூல் பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே எனத்துணிந்து விளங்கி ஒளிர்
மையணியும் கண்டத்தான் மலரடிக்கே ஆளானார்.

என்று விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் ஆகியவற்றின் உண்மைப் பயன் சிவன் கழல் ஏத்துதலே எனப் பகர்வர் சேக்கிழார்.

கல்வியிலும் செல்வத்திலும் சிறந்து இந்தியா முழுதும் பல அறக்கட்டளைகளை நிறுவி, பல கோயில்களைத் தோற்றுவித்துச் செயற்கரிய தொண்டுகள் பல ஆற்றி வருபவர்கள் நகரத்தார் பெருமக்கள் என்பது நாடறிந்த உண்மை. இளையாத்தக்குடி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவினை நகரத்தார் பெருமக்கள் 2 - 5 - 85-ல் சிறப்பாக நிகழ்த்தியதனை அறிந்து உளம் மகிழ்கிறேன்.

கோயிலைப் பேணினால்தான் நாடு நலம் பெறும் என்பது ஆன்றோர் வாக்கு. இம்முறையில் கோயிலுக்கும் நாட்டிற்கும் தொண்டாற்றி வரும் நகரத்தார் பெருமக்கள் நலம்பெற இறைவனை விழைகிறேன்.

குடமுழுக்கு விழாவை ஒட்டி, பக்தி மணம் கமழும் மலர் ஒன்றினை வெளியிட இருப்பது அறிந்து மகிழ்கிறேன். அம்மலர் சீரோடும் சிறப்போடும் வெளிவரவும் பக்தி மணம் பரப்பி மக்களின் நல்வாழ்வுக்குத் துணை புரியும் வகையில் மலர் அமையவும் என் உளம்கனிந்த நல்வாழ்த்துக்கள் உரியதாகுக.

கைலாசநாதரின் கருணையை வேண்டுகிறேன்

வி. என். சிதம்பரம்
தக்கார்
அருள்மிகு மீனாட்சி
சுந்தரேஸ்வரர் ஆலயம்
மதுரை

இளையாத்தக்குடி அருள்மிகு நித்தியகல்யாணி அம்பிகை சமேத கைலாசநாதர் திருக்கோயில் குடமுழுக்கு விழா நடைபெற உள்ளதை அறிந்து மகிழ்ந்தேன். எண்ணற்ற திருக்கோயில்கள் தமிழகத்தில் உள்ளன. இத்திருக்கோயில்களில் எல்லாம் நகரத்தார் மரபினர் நாள் தோறும் தங்களால் இயன்ற முறையில் அறப்பணிகளைச் செய்து வருகின்றார்கள். கோயில் நலமுற நாள்தோறும் பூசனைகள் தேவை. பூசனைகள் தடைபட்டால் நாடும் அந்நாட்டில் வாழ்கின்ற மக்களும் அல்லலுறுவார்கள் என்பது இந்து சமுதாயத்தினரின் அசைக்க முடியாத நம்பிக்கைகளில் ஒன்று. அந்த முறையிலே தற்பொழுது அருள்மிகு நித்தியகல்யாணி அம்பிகை சமேத கைலாசநாதர் திருக்கோயில் செவ்வனே செப்பனிடப் பட்டு குடமுழுக்கு விழா நிகழ்கிறது. நாடும், மக்களும், சமுதாயமும் நலமுடன் வாழ அருள்மிகு கைலாசநாதரின் கருணையை வணங்கி வேண்டுகிறேன்.



நித்தம் பணிவோர்க்கு
நிம்மதி தருகின்ற
நித்தியகல்யாணித் தாயின்
வண்ணத் திருக்காட்சி



“நகரத்தார் தொண்டு”

மு. வெ. அருணாசலம்

நகரத்தார்களின் ஒன்பது கோவில்களில் மிகப் பழமையானதும், பெருமை வாய்ந்ததுமான இளையாத்தக்குடி அருள்தரு நித்தியகல்யாணி அம்பாள் உடனுய கைலாசநாதர் திருக்கோவில் 46 ஆண்டுகளுக்குப் பிறகு சீரும் சிறப்புமாக, குடமுழுக்கு விழாக் கண்டுள்ளது, நகரத்தார்களின் தொண்டுள்ளத்திற்கும் திருப்பணிச் சிறப்புக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும். எல்லா விதத்திலும் சிறப்பாக இந்தக் குடமுழுக்கு நடைபெற மிகுந்த பொருட் செலவையும் பாராது உழைத்தது நகரத்தார்களின் தனிப்பண்பாகும்.

காலஞ் சென்ற என் மதிப்பிற்குரிய அம்மான் கானாடுகாத்தான் க. வெ. சித. வெ. வெங்கிடாசலம் செட்டியாரவர்கள் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்க் கடல் ராய. சொ. அவர்களோடு தேவார, பிரபந்தத் தலங்கள் உள்பட 456 கோயில்களுக்குப் பயணம் சென்று வந்த பிறகு ஒரு கணக்கு கொடுத்தார்கள். அதன்படி பாடல் பெற்ற தேவார, பிரபந்தத் தலங்களில் நகரத்தார்கள் செய்த கோயில் திருப்பணிச் செலவு மட்டும் ரூபாய் நாலரைக் கோடியாகும். இதில் கோயில் திருப்பணி தவிர, பாடசாலை, நந்தவனத் திருப்பணிகள், பாடல் பெறாத தலங்களில் செய்தவைகள் சேரவில்லை. மேலும் இத்தொகை செலவழித்த காலத்தியதாகும். இன்றையக் கணக்கில் பார்த்தால் இதன் மதிப்பு எத்தனையோ கோடியாகும்.

இன்றைக்கு இது மாதிரியான காரியங்களை ஒரு தனிப்பட்ட குடும்பம் செய்வதென்பது இயலாத காரியம். ஒரு பெரிய அமைப்போ, அரசாங்க இலாக்காக்களோ, மடங்களோ தான் செய்ய முடியும். தமிழ்நாட்டில் எத்தனையோ திருக்கோயில்களைக் கட்டுவித்தும், திருப்பணி செய்வித்தும், மராமத்து செய்வித்தும், நடைமுறைக் காரியங்கள் செய்வித்தும் பாதுகாத்து வந்துள்ளனர் நம் முன்னோர்கள். இப்படிப் பார்க்கும் போது தான் நமக்கு அவர்களைப் பற்றிய ஒரு பேருண்மை புலப்படும்.

அது அவர்களுடைய தரும சிந்தனை, பக்தி நெறி, இறை நம்பிக்கை ஆகும். இவ்வளவு பெரிய காரியங்களை ஒரோரு குடுப்பத்தினர் ஒரு கோவிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செய்து வந்திருப்பது அவர்களுடைய அசைக்க முடியாத

தெய்வ நம்பிக்கையையும், இறைத் தொண்டில் இருந்த நாட்டத்தையும் தெளிவாகக் காட்டும். இது எப்படி சாத்தியமாயிற்று? அதுதான் நம் சமூகத்தினரின் தனிச் சிறப்பான இயற்கையோடியைந்த வாழ்க்கை முறை.

பொதுவாக ஒரு கருத்து இன்றும் நிலவி வருகிறது. அதாவது இந்த மாதிரியான தெய்வத் தொண்டுக் காரியங்கள், தரும கைங்கர்யங்கள் செய்வது துறவிகளாலும் திருமடங்களாலும் தான் முடியும் என்று. ஆனால் நம்மவர்கள் அந்தக் கருத்தைவிட, இயற்கையோடு இணைந்து இல்லறத்திலிருந்து கொண்டே இறைபணியும் செய்வதையே வாழ்க்கை முறையாகவே மாற்றிக் கொண்டு விட்டவர்கள்

ஒருவன் ஒரு குடும்பத்தைத் தாங்கி நடத்துகிறான் என்றாலே அது ஒரு பெரிய நிருவாகம் மட்டுமல்ல, அன்பின் பரிபூரண வெளிப்பாடு. தன் மனைவி, மக்கள் என்று தன்னுடன் ஒட்டியவர்களிடத்தே தன்னலம் கருதாத அன்பு வைக்க வேணும். அவர்கள் மகிழ்ச்சியாக வாழவே இவன் உழைக்கிறான். அவர்கள் எதாவதொன்றை விரும்பினால் அதனை இவன் வாங்கித் தருகிறான். அவர்களுக்கு ஒரு நோய்நொடி வந்தால் இவன் துடித்து விடுகிறான். ஓடிப்போய் வைத்தியம் செய்கிறான்.

குடும்பம் என்கிற களத்தில் இவன் பெறுகிற பயிற்சியே இவனை அநுபவஸ்தனாக ஆக்குகிறது. அமைதியும் பொறுமையும் அடைய வீடே நாம் பயிற்சி பெறும் இடமாகிறது. இதுவே தவம் என்று பெரியவர்கள் கருதினார்கள். தான் என்கிற நிலையைத் தாண்டி, ஒரு மனிதன் தன் மனைவி, தன் மகன், தன் மகள் என்று அடுத்தவருக்காகத் தொண்டு செய்ய, அன்பு செலுத்தக் கற்றுத்தருகிறதே குடும்பம் தான்.

அப்படிக் குடும்பத்திலிருந்து கொண்டே பற்றுக்களை அளவுபடுத்தித் தொண்டு செய்வதென்பது இயற்கையான நடைமுறையாகும். தன் உறவு, தன் சுற்றம் என்ற நிலை விரிவடைந்து தன் நண்பர், தான் அறிந்தோர், தன் பேட்டையார், தன் ஊரார், என்று பயன் பெறுகிறவர்கள் பட்டியல் விரிந்து கொண்டே போகும், மகாத்மா காந்தி அவர்கள் நடந்து காட்டிய வழியும் இதுதான்.

உதாரணத்திற்கு ஒன்று பார்க்கலாம். நமக்கு வாழ்க்கைச் சட்டம் எழுதித் தந்துவிட்டுப் போனவர் திருவள்ளுவர். நம்மை வெறுத்தவர்களை நாமும் வெறுக்க வேண்டும், நம்மைப் புறக்கணித்தவர்களை நாமும் புறக்கணிக்க வேண்டும் என்று

பொதுவாக உலகோர் எண்ணுவார்கள்; ஆனால் புறக்கணித்தவர்களையே மீண்டும் மீண்டும் விரும்பும் உள்ளத்தால் அன்பு வளரும். இதைக் குடும்ப வாழ்க்கையில் பாடமாக அனுபவிக்கிறோம்.

செற்றார் எனக் கைவிடல் உண்டோ? நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர் (1245)

இந்தச் சிறந்த பாடத்தைக் குடும்ப வாழ்க்கையின் மூலம் அறிந்தவர்கள் வெளியுலகிலும் வெறுப்புக்கு வெறுப்பு, புறக்கணிப்புக்குப் புறக்கணிப்பு என்று பாராட்டாமல் பிறரிடம் அன்பு செலுத்தி இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்து வாழ்வது எளிது.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? (987)

இந்த மாதிரியான உயர்ந்த பண்புகளை, அமைதியான ஆனந்தமான குடும்ப வாழ்க்கையின் மூலம் கற்ற பாடத்தின், பயிற்சியின் விளைவாகத்தான் எளிதில் கடைப்பிடிக்க முடியும்.

இதைத் தான் நம் முன்னோர்களும் செய்து வந்தார்கள்.

அது தான் அவர்கள் குடும்பத்தையும் கவனித்துக் கொண்டு, ‘தொலை’க்குப் போய், கொண்டு விற்று வந்ததும், அதற்கிடையே கோயில் திருப்பணிகள், நந்தவனம், பாடசாலைகள் நடத்தியதும் ஆகும். ஒன்றுக்கொன்று முரண்படாமல், எல்லா வற்றையும் அதற்குத் தேவையான சிரத்தையுடன் கவனித்து நடத்திக் கொண்டு வந்தனர். ஆள் துறவாது அவாத் துறப்பதையே உண்மையான துறவு எனக் கருதினார்கள்; ஆம் ஓரளவுக்கு மேல் தன் குடும்பம் என்ற நிலையைத் தாண்டி தருமம் செய்ய, திருப்பணி செய்ய ஆரம்பித்தனர். மனைவி மக்களைத் துறக்காமலேயே, அவர்களுக்கென ஒரு பகுதியும், மற்றவருக்கென ஒரு பகுதியுமாக தான், தன் குடும்பம் என்ற அவாக்களைத் துறந்து கர்ம யோகிகளைப் போல வாழ்க்கைத் தவம் செய்தனர்; வள்ளுவர் சொல்லியபடி ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த''னர்.

கொண்டு விற்கப்போன இடத்தில் தங்கள் பெட்டியடியை மிக சிக்கனமாகவும் தங்களுடைய முதலீடுகளான ரப்பர் தோட்டம், ஈயலும்பனை ஆகியவைகளை மிகச் சிறந்த, திட்டமிட்ட நிர்வாக திறமையுடன் நடத்தி வந்தனர். இந்தச் சிக்கனமும்,

திட்டமிடும் திறமையும் எதையும் ஒரு ஒழுங்கு முறையாக செய்யக் கற்றுக்கொண்ட நிர்வாகப் பாங்கும்—அந்த அத்தனையும் கோவில் நிர்வாகத்திலும் அதனை ஒட்டிய திருப்பணி, மற்ற காரியங்களிலும் பயன்படுத்திக் கை கொடுத்து உதவியது. இந்தத் திறமைகள் அவர்களுடைய தனி வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் செயல்பட ஒன்றுக்கொன்று உதவின.

அப்படிக் கொண்டு விற்கப் போன இடத்தில் கூட தண்டாயுதபாணிக்குக் கோயில் கட்டித் திருப்பணி செய்தனர். எந்த விதத்திலும் இறை பணிக்கு குடும்ப வாழ்க்கை இடையூறு என்று கருதினார்களில்லை. அதோடு தம் தொழில், வாணிகம் எல்லாவற்றின் வருவாயிலும் ஒரு குறிப்பிட்ட பகுதியை இம்மாதிரிக் காரியங்களுக் கெனவே ஒதுக்கி வந்தனர். இதுவே அவர்களின் உண்மையான மனப்பான்மையைக் காட்ட வல்லது. டாக்டர் நார்மன் வின்சென்ட் பீல் என்ற அமெரிக்க தத்துவ வித்தகர் சொல்லுவாரே,

"Even if We owned the entire United States With a hog - tight fence around it, wc Could eat only three Square meals a bay and Sleep in Only one bed at a time" என்று அப்படி தங்கள் தேவையை கட்டுப்படுத்தி, அளவு படுத்தி, அதனால் மிகுந்த வருமானத்தை உண்மையான துறவு மனப்பான்மையுடன் தர்மம் செய்தனர். இதற்காகப் பயிற்சி அளிக்க திருமணமான ஒவ்வொரு செட்டியாரும், ஆச்சியும் பாதரக்குடி, துழாவூர் மடங்களில் குருமார்களிடத்தில் தீட்சை உபதேசம் பெற வேண்டுமென வகுத்தனர். அதையே துஷ்டி நடந்தால் அந்தந்த குரு மடங்களில் கழித்து விடுதல் என்ற சடங்கின் மூலமும் காட்டினார்கள்.

இன்று மனமார தருமம் செய்ய விரும்பாவிட்டால் கூட, வருமான வரிச் சலுகை கருதியாவது சிலர் தருமம் செய்கின்றனர். ஆனால் நம்மவர்கள் அம்மாதிரி யான சலுகையே இல்லாத காலத்திலிருந்து, இதை தரும நாட்டமாகவே விருப்ப மான பணியாகவே, வாழ்க்கை முறையாகவே கைக் கொண்டு செய்து வந்துள்ளனர். இன்றும் நம்மவர்கள் பல நூற்றுக்கணக்கான டிரஸ்ட்கள் அமைத்து, தம் தொழில், வாணிகத்திலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கி, அதன்மூலம் திருப்பணிகள், தர்ம காரியங்கள், காலர்ஷிப்கள், வைத்ய வசதிகள் செய்து வருகின்றனர். இதை இறை பணியாகவே, இல்லறதர்மமாகவே அன்று நம் முன்னோர்கள் செய்து வந்தனர். அதன் விளைவுதான் இத்தனைக் கோடி மதிப்பான திருக்கோயில்களும் என்கிறபோது அவர்களுடைய தீட்சண்யமான அறிவை, தர்ம நாட்டமுள்ள சிந்தனையை நல்ல மனதையெல்லாம் எண்ணி எண்ணி வியக்கத் தோன்றுகிறது.



வண்ண மணிமண்டபத்தில்
வளர் அருள்சேர் நடராஜப் பெருமானும்
திருவருள் சேர் சிவகாமி அம்பிகையும்
அணிசேர் திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமானும்
வீற்றிருக்கும் வெற்றித் திருக்காட்சி.




நல்வாழ்த்துக்கள்

தங்கபாலு
தலைவர்
தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ்

தமிழகத்தில் கல்வித்துறைக்கு அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் கூட செட்டி நாட்டவர்கள் செய்திருக்கின்ற தொண்டு மகத்தானது.

ஆன்மீகத் துறையிலும் பயனுள்ள பணிகளைத் தொடரும் தங்கள் முயற்சிக்கு எனது பாராட்டுகள்

தமிழும் சமயமும் மணக்கும் தங்கள் மலர் சிறக்க என் நல்வாழ்த்துக்கள்.



பெரிய பாக்கியம்

தர்மாத்மா
டாக்டர் வி. வைத்திய
சுப்பிரமணிய ஐயர்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் வரலாறு அறிந்தவர்களுக்கு அவர்கள் காவேரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்து முதலில் இளையாத்தங்குடியில் குடியேறி அதன் பின் ஒவ்வொரு கூட்டமாகப் பாண்டிய மன்னரால் கொடுக்கப்பட்ட ஒன்பது கோவில்களைப் பரிமாரித்து, தனித்தனியே இருந்து வந்தார்கள் என்பது தெரியும். இதில் இளையாத்தங்குடி கோவில் என்பது ரொம்ப ப்ரசித்தமானது. அதில் 7 பிரிவுகள் அதாவது பட்டினச்சாமி, ஒக்கூர் உடையார், கழனிவாசக்குடி, பேரசந்தாருடையார் சிறுசேத்துடையார், கிங்கினிகூருடையார், பெருமருதூரார்.

இந்த இளையாத்தங்குடி கோவில் கும்பாபிஷேகம் 2-5-85ல வெகு விமர்சை யாக நடந்தது. கோவில்களைப் பராமரிப்பதிலும், வேதங்களை ரக்ஷிக்க பாடசாலைகள் அமைப்பதிலும், தேவாரப் பாடசாலைகள் அமைத்து, திருமுறைகளைக் காப்பதும் நகரத்தார்களின் முக்கிய நோக்கமாகும். அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று லேவாதேவி செய்து வந்தாலும் தென்னிந்தியாவில் உள்ள முக்கியமான க்ஷேத்திரங் களில் உள்ள கோவில்களைப் புதுப்பித்தும் ஆங்காங்கே வேத பாடசாலைகள் வைத்தும் அன்ன சத்திரங்கள் வைத்தும் நம்முடைய இந்திய கலாச்சாரம் நிலைத்து வளர எப்பொழுதும் பாடுபடுகிறவர்கள். அதுமட்டுமில்லாமல் காளிதாச மகாகவி சொல்லியது போல

''சரீரம் அத்யங்கறு தர்ம ஸாதனம்'' என்றபடி பொது ஜனங்கள் நன்மைக் காக உயர்நிலைப்பள்ளிகள், கலாசாலைகள், பல்கலைக் கழகங்கள், மருத்துவ மனைகள் இவைகளை, சிறு ஊர்களிலும், பெரு நகரங்களிலும் வைத்துப் பொது ஜனங்களுக்கு எல்லா விதத்திலும் சௌகரியம் ஏற்படுத்தி வருவதே அவர்களுடைய லக்ஷ்யம். காஞ்சி பரமாச்சார்யாள் அவர்கள் அடிக்கடி

''நகரத்தார் இல்லை என்றால், வேதமும் இல்லை கோவிலும் இல்லை'' என்று வற்புறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

இந்த இளையாத்தங்குடிக் கோவில் பட்டினசாமி வகையைச் சேர்ந்த காலஞ் சென்ற ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் நகரத்தார்களில் திலகமாக விளங்கி இளையாத்தங்குடிக் கோவில்களைப் புதுப்பித்து 19 9ல் கும்பாபிஷேகம் நடத் தினார்கள். அதன்பின் வெகு காலஞ்சென்றும் புதுப்பிக்கபடவில்லை. அவருடைய திருக்குமாரர் ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள் கோவிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து ஆரம்பித்தார்கள். ஆனால் அது கைகூடும் முன் அவர்கள் காலஞ்சென்று விட்டார்கள், ஸகர குமாரர்களை உய்விப்பதற்காகக் கங்கையை கொண்டுவர ப்ரயத்தனம் எவ்வளவு செய்தும் அது கைகூடாமல் சென்றதந்தை திலீபரின் சங்கல்பத்தை நிறைவேற்றிய பகீரதன் போல் அரசர் முத்தையா அவர்கள் திருக்குமாரர் டாக்டர் எம். ஏ. எம். ராமசாமி அவர்கள் அந்த பணியை முன்நின்று சிறப்பாக ஏற்பாடு செய்து கும்பாபிஷேகம் 2-5-85ல விமர்சையாக நடத்தப்பட்டது.

இளையாத்தங்குடியின் காஞ்சி காமகோடி 65 வது பீடாதிபதி மகாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் 1890ல் சித்தி அடைந்தார்கள். 1850ல் பீடாதிபத்யம் வகித்த இந்த மகான் தென் தமிழ்நாடு விஜய யாத்ரை செய்து கொண்டு வரும்போது இளையாத்தங்குடியில் தீர்த்த மகிமையைத் தெரிந்தவராகையால் அந்த ஸ்தலத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்து ஒரு சில நாட்களிலேயே அவர்களுக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துகொடுத்து வந்த நகரத்தார்களிடம் அவர்கள் தனக்கு இளையாத்தங்குடியில் சாஸ்வதமாக தங்குவதற்கு ஒரு இடம் வேண்டுமென்று ஒரு இடத்தைச் சுட்டிகாட்டி கேட்டார்களாம்.

அந்த இடம் கல்லும், முள்ளும் புதர்களுமாக இருந்தன. வேறு நல்ல இடம் தருகிறோம் என்று நகரத்தார்கள் சொன்னாலும், ஸ்வாமிகள் அதற்கு இந்த இடமே வேண்டுமென்று சொன்னார்கள்.

இப்படியே சொல்லிய மகான் இரண்டொரு தினங்களில், தாம் ஸ்நானம் செய்து ஆன்னிகம் செய்து கொண்டிருக்கும்போதே சித்தி ஆனார்கள்.

இதை அறிந்த நகரத்தார்கள் அங்கு வந்து ஸ்வாமிகள் சுட்டிக்காட்டிய இடத்தைச் சுத்தம் செய்து அங்கேயே அவர்களுக்குச் சமாதியை இருக்க செய்து அங்கு ஒரு லிங்கம் ப்ரதிஷ்டை செய்து கோவிலும் கட்டினார்கள். அந்த கோவிலில் ஒரு சங்கர பகவத் பாதாள் விக்ரஹமும், ஒரு விநாயகர் விக்ரஹமும், அமைத்துள்ளனர். கோவில் கட்டியது முதல் அதற்கு இளையாத்தங்குடி நகரத்தார்கள் தினப்படி பூஜைக்கு ஏற்பாடு செய்து நடந்து வருகிறது. இதை குருஸ்வாமி கோவில் என்று எல்லோரும் கொண்டாடுவார்கள்.

செட்டிநாட்டரசர் ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள் இந்த அதிஷ்டான கோவிலையும் புனருத்தாரணம் செய்வதாயும், அந்த கும்பாபிஷேகத்துக்கு காஞ்சி பரமாச்சார்யாள் வரவேண்டுமென்று நேரில் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த புனருத்தாரணம் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அது முடிவடைவதற்கு முன்பே அரசர் முத்தையா அவர்கள் காலமாகி விட்டார்கள். அவர்கள் திருக்குமாரர் டாக்டர் எம். ஏ. எம். ராமசாமி அவர்கள் அந்த கைங்கர்யத்தை பூர்த்தி செய்து அதற்கு 2-5-85 ல கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

அந்த கும்பாபிஷேகத்திற்கு பரமாச்சார்யாள் வர வேண்டுமென்று நகரத்தார்களுடன் இந்த கட்டுரை எழுதும் நானும் சென்று கேட்டுக் கொண்டேன். ஆனால் பரமாச்சார்யாளின் தேகநிலை காரணமாக அவர்கள் அங்கு வரமுடியவில்லை. அவருடைய சிஷ்ய ஸ்வாமிகள் (புது பெரியவாள் என்று எல்லோராலும் அழைக்கப்படும்) வரலாமென்றால் அவர்களும் வட இந்தியா யாத்திரை மேற்கொண்டுவிட்டார்கள்.

ஆகையினால் என்னுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி, காஞ்சிப் பரமாச்சார்யாள் அவர்கள் மடத்திலிருந்தே வைதீக காரியங்களுக்குக் புரோகிதர்களை அனுப்பி கும்பாபிஷேகத்தை முறைப்படி செய்து கொடுத்தார்கள். கும்பாபிஷேகம் முடிந்து அன்று அந்த ப்ரசாத தீர்த்தமும், அங்கு சாத்தப்பட்ட சால்வையும் மடத்தில் முக்கிய புரோகிதரான ப்ரும்மஸ்ரீசந்திரமௌளீஸ்வர சாஸ்திரிகள் அவர்கள் நேரேயே ஒரு காரில் கொண்டுபோய் அன்றே பரமாச்சார்யாள் அவர்களிடம் சேர்த்தார்கள். இது ஒரு பெரிய பாக்யம்.

இந்த கும்பாபிஷேக வைபவத்திற்கு நம் கலாச்சாரம் நிலைத்திருப்பதற்காக ராஜ ராஜேஸ்வரி கோவிலும் பெங்களூர் சமீபத்தில் உள்ள இடத்தில் பாடசாலைகள் ஏற்படுத்தி வேதம், ஆகமம், திருமுறை இவைகளை வளர்த்து வருவதுடன் சில இடங்களில் ஏழை மாணவர்களுக்குச் சாப்பாட்டு வசதி செய்து கொடுத்தும் பொதுஜன நன்மைக்கே பாடுபட்டு வரும் திருச்சி ஸ்வாமிகள் என்று அழைக்கப்பட்டு வரும் மகானும், வந்து நடத்தி வைத்தார்கள்.

அத்துடன் நகரத்தார் மரபிலேயே ஆன்மீக வாழ்வு நடத்தி வழிகாட்டியாக சந்நியாஸ ஆச்ரமம் பெற்று பரம்பரை பரம்பரையாக சங்கர பகவத் பாதாள் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் வடமொழி க்ரந்தங்களை தமிழில் பிரசுரித்து ஆன்மீக வாழ்க்கைக்கு பாடுபட்டு வரும் கோவிலூர் மடத்தில் இப்பொழுதிருக்கும் மடாதிபதி அவர்களும் வந்திருந்தார்கள். கோவில்கள் சரிவர நடப்பதற்கும், அறக்கட்டளைகள் நேர்மையுடன் நடப்பதற்கும் அரும்பாடு பட்டுவரும் தமிழக அமைச்சர் மாண்புமிகு வீரப்பன் அவர்களும் வந்திருந்தார்கள்.

கும்பாபிஷேகமும் குழுவினரின் முயற்சியால் அதிலும் முக்கியமாக சிறு வயதிலிருந்தே கும்பாபிஷேகம் செய்வதிலும் பல தர்ம காரியங்கள் செய்வதிலும் ஈடுபட்டு பழக்கமுடைய காரைக்குடி முத்துராமன் செட்டியார் அவர்களும், அவருடன் எம். என். எஸ். டி. சிதம்பரம் செட்டியார் அவர்களும் மற்றும் அநேக நகரப் பொதுமக்களும், செட்டிநாட்டரசர் குடும்பத்தின் திலகமாக விளங்கும் அண்ணாமலை பல்கலை கழகத்தின் இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். ராமசாமி அவர்களின் தலைமையில் வெகு விமர்சையாக நடந்தேறியது.

உ

சிவமயம்

இளையாத்தக்குடிக் கோவில்

நாட்டுக்கோட்டை நகரத்தார் குடமுழுக்கு விழாக்குழு

தலைவர் :-

டாக்டர் மு. அ. மு. ராமசாமி செட்டியார் அவர்கள், கானாடுகாத்தான்

துணைத் தலைவர்கள் :-

அ. மு. மு. அருணாசலம் செட்டியார் அவர்கள், பள்ளத்தூர்
மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள், காரைக்குடி
சி. மு. அரு. நா. அருணாசலம் செட்டியார் அவர்கள், காரைக்குடி
மு. அ. சிதம்பரம் செட்டியார் அவர்கள், கானாடுகாத்தான்
மு. சித. மு. முத்தையா செட்டியார் அவர்கள், கானாடுகாத்தான்
அ. மு. கட. மு. கட. கரு. முத்துக்கருப்பஞ்செட்டியார் அவர்கள், காரைக்குடி
உ. தெ. உ. சா. தேவப்ப செட்டியார் அவர்கள் நா. அளகாபுரி கொல்லங்குடி

செயலாளர்கள் :-

மெ. செ. சு. பு. மெ. முத்துராமன் செட்டியார் அவர்கள் காரைக்குடி
சி. மு. அரு. நா. அரு. நாராயணன் செட்டியார் அவர்கள், காரைக்குடி

பொருளாளர் ;-

மெ. நா. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள், காரைக்குடி

குழு உறுப்பினர்கள் :-

1. சிவ.மெ.வெ.ராம.சிவ.வெ. வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள், காரைக்குடி
2. பழ. சு. ராம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள், ஒ. சிறுவயல்
3. சு. லெ. பழனியப்ப செட்டியார் அவர்கள். தேவகோட்டை
4. சா. அ. அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள், கானாடுகாத்தான்
5. சா. லெ. நா. சாத்தப்ப செட்டியார் அவர்கள், காரைக்குடி
6. சோம. சொ. ராமனாதன் செட்டியார் அவர்கள், நெற்குப்பை
7. மெ. செ. பெய்யப்ப செட்டியார் அவர்கள், காரைக்குடி
8. அள. அ. நா. நாராயணன் செட்டியார், அவர்கள் காரைக்குடி
9. சித. வெ. முரு. சீனிவாசன் செட்டியார், அவர்கள் காரைக்குடி
10. வெ. சி. அ. ராம. அண்ணாமலை செட்டியார் அவர்கள், கோட்டையூர்
11. வடு. மு. ராம. மு. ராமனாதன் செட்டியார் அவர்கள், புதுவயல்
12. ப. லெ. அரு. ராம. பழ. அருணாசலச் செட்டியார் அவர்கள், புதுவயல்
13. ஏஆர். ராமசாமி செட்டியார் அவர்கள் அத்தங்குடி
14. உ. அள. அ. அழகப்ப செட்டியார் அவர்கள் ஆ. முத்துப்பட்டணம்
15. அழ. மு. அழ. முத்துராமன் செட்டியார், அவர்கள் கோ. அளகாபுரி
16. பெ. சித. லெ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் ஆறுவயல்
17. பழ. சோம. கைலாசநாதன் செட்டியார் அவர்கள், தேவக்கோட்டை

18. பழ. செ. கரு. வெ. சந்திரமௌனிஸ்வரன் செட்டியார் அவர்கள்
தேவகோட்டை
19. சொ. மெ. பழ. சோமையா செட்டியார் அவர்கள் தேவக்கோட்டை
20. ஆத. சொ. ஆத. ஆதப்ப செட்டியார் அவர்கள், கல்லல்
21. நா. சி. சொ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள், கண்டவராயன்பட்டி
22. வ. நாச்சியப்ப செட்டியார் அவர்கள், சொக்கநாதபுரம்
23. வீர. நா. சித. கரு. கருப்பஞ் செட்டியார் அவர்கள், பட்டமங்கலம்
24. திரு. சித. நடராசன் செட்டியார் அவர்கள், அ. சிறுவயல்
25. சி. உ. ராம. கணபதி செட்டியார் அவர்கள், கண்டவராயன்பட்டி
26. அ. கரு. து. கரு. மாணிக்கம் செட்டியார் அவர்கள், ஏ. தெக்கூர்
27. வெ. மு. பூ. நா. முத்தப்பழனியப்ப செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி
28. இ. நாகப்பன் அவர்கள், வேந்தன்பட்டி
29. பெரி. ௵. ராம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் ஆவினிப்பட்டி
30. சோம. வேலாயுதம் செட்டியார் அவர்கள், விராமதி
31. உ. நா. ராம, கா. கண்ணப்ப செட்டியார் அவர்கள்,
நா. அளகாபுரி கொல்லங்குடி
32. சித. மு. ராம. மு. சேதுச்செட்டியார் அவர்கள், கிழச்சிவல்பட்டி
33. ராம. வெ. வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள், கல்லுப்பட்டி
34. சு. முரு. லெ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள், அரியக்குடி
35 சா. அ. சா. ராம. சந்திரபவுலி செட்டியார் அவர்கள், கானாடுகாத்தான்
36. பழ. சுப. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள், கண்டனூர்
37. சித. ராம. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள், காரைக்குடி
38. அ. மு. சு. மு. சித. மு. சிதம்பரம் செட்டியார் அவர்கள், காரைக்குடி
39. சி. வ. அ. நாராயணன் செட்டியார் அவர்கள், காரைக்குடி
40. தி. அ. பள. சித. செந்தில்நாதன் செட்டியார் அவர்கள், தேவக்கோட்டை
41. சா. ராம. சா. சாத்தப்ப செட்டியார் அவர்கள், ஆறுவயல்
42. அரு. ச. அ. ராமநாதன் செட்டியார் அவர்கள், நாட்டரசன் கோட்டை
43. வெ. க. அ. கண. சுப. ஆறுமுகம் செட்டியார் அவர்கள், நாட்டரசன் கோட்டை
44. சி. க. ராம. சோம. வெ. வெள்ளையப்ப செட்டியார் அவர்கள், ,,
45. சி. க. பழ. அ. பழ. நாச்சியப்ப செட்டியார் அவர்கள், தேவக்கோட்டை
46. பழ. மு. பழ. வீர. முருகப்ப செட்டியார் அவர்கள், புதுவயல்
47. சுப. சுந்தரகேசரி செட்டியார் அவர்கள், ஆவினிப்பட்டி
48 ஏஆர். மணிச் செட்டியார் அவர்கள், ஆத்தங்குடி
49. மு. அ. அ. அ. முத்தையா செட்டியார் அவர்கள், இராயவரம்
50. பெரி. சித. ராம. ராமசாமி செட்டியார் அவர்கள், புதுவயல்
51. அழ. வெ. அழகப்ப செட்டியார் அவர்கள், கண்டனூர்
52. வி. எஸ்டி. பழனியப்ப செட்டியார் அவர்கள், வலையப்பட்டி
53. நா. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள், கானாடுகாத்தான்
54. எஸ்பி. முத்துராமன் அவர்கள், பிலிம் டைரெக்டர் காரைக்குடி
55. டாக்டர் எம்ஆர். முத்தையா செட்டியார் அவர்கள், கோட்டையூர்
56. சித. அரு. வீரப்ப செட்டியார் அவர்கள், புதுவயல்
57. ஏஎல். எஸ். அளகப்ப செட்டியார் அவர்கள், கண்டவராயன்பட்டி
68. ஆர்எம். சேதுச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி

கடவுள் காட்சிகளைக்
கண்டு களியுங்கள்-என்றும்
கவின் பெற்று வாழுங்கள்

நித்திய கல்யாணித் தாயும்
நிகரற்ற கைலாச நாதரும்
கொலுவிருக்கும் நல் இடமாம்
கோல இளையாத்தக்குடிக் கோயில்
குடமுழுக்குப் பெருவிழாவின்
அற்புதக் காட்சிகளைக் காண
அழைக் கின்றோம் வாருங்கள்
கண்டுகளியுங்கள்-என்றும்
கவின் பெற்று வாழுங்கள்

குடமுழுக்கு விழா
மலர்க் குழுவினர்





நற்காட்சி! பொற்காட்சி!


ஆலயங்கள் தோறும் எழில் பெருக
அரும்பணிகள் ஆற்றிவரும் செம்மனத்தார்
அறநிலையத்துறை போற்றும் நல்அமைச்சர்
மாண்புமிகு ஆர். எம். வி. பெருமகனர்
ஏற்றமிகு இளையாத்தக்குடிக் கோயில்
படித்தர நிரந்தரப் பூசைவைப்பு நிதிக்கு
அறம் போற்றும் நல் அண்ணல்
அரசர் குலத் திருவிளக்கு
குடமுழுக்கு விழாக் குழுத்தலைவர்
கோதில்லா நற்செல்வர்
டாக்டர். எம். ஏ. எம். ராமசாமியிடம்
ஆயிரத்து ஒருரூபாய் தன்னை
அன்புடன் அளித்திடும்
அற்புதநற் காட்சி இது!



அழ. அ: நா; நாராயணன் செட்டியார் முன்னிலையில் ஐயாமணி சிவாச்சாரியார் குடமுழுக்கு விழாப் பூஜைதனைத் தொடங்கிடும் புண்ணியக் காட்சி.



பாகசாலையில் திருமதி குமாரராணி மீனாமுத்தையா அவர்களும் குழுத்தலைவர் M.; A: M: ராமசாமி அவர்களின் துணைவியார் திருமதி சிகப்பி ராமசாமி அவர்களும் மற்றும் சிலரும் வீற்றிருக்கும் காட்சி.



திருச்சி சுவாமிகளையும் கோவிலூர் இராமநாத ஞான தேசிக சுவாமிகளையும் மற்றும் பெருமக்களையும் குழுத்தலைவரும் உறுப்பினர்களும் வரவேற்கும் குதூகலம் 'மிக்கக் காட்சி.




குழுத்தலைவர் டாக்டர் M.A M. ராயசாமி அவர்கள் முன்னிலையில் ஜயாமணி சிவாச்சாரியார் அவர்கள். யாகசாலை பூஜைதனைத் தொடங்கிடும் அற்புதக்காட்சி. உடன் பொருளாளர் M. N. ST. சிதம்பரம் செட்டியார் அவர்களும் செயலாளர் M.S. S. M.M. முத்துராமன் செட்டியார் அவர்களும் பெருமக்களும் வீற்றிருக்கிறார்கள்




குடமுழுக்கு விழா நினைவுக் கல்வெட்டை அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள் திறந்து வைக்கும் எழிற்காட்சி. தெய்வீகப் பெரு மக்களும் குழுத் தலைவரும் மெய்யன்பர்களும் உடன் இருக்கிறார்கள்.




குவலயம் போற்றும் குடமுழுக்கு விழாவில் கலந்துகொள்ள வருகை தந்த அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் தவத்திரு அடிகளார் அவர்களும் குழுத் தலைவரும் ஆணையர் ஆளுடையபிள்ளை அவர்களும் மற்றும் அன்பர்கள் பலரும்




குடமுழுக்கு விழாக்காணச் சிவாச்சாரியர்கள் புனித நீர்கொண்ட குடங்களை எடுத்துவரக் குழுத்தலைவரும் உறுப்பினர்களும் உடன்வரும் ஒப்பற்ற காட்சி.




ஆலயத்திலிருந்து யாகசாலைக்குச் சிவாச்சாரியர்கள் புனித நீர்க் குடங்களை எடுத்துச்செல்லும் புனிதமிகு காட்சி.




வித்தகம்சேர் கும்பங்கள் அணிவகுக்க, வேதமந்திரங்கள்தாம் ஒலிக்க, நித்தியகல்யாணி சமேத கைலாசநாதரின் குடமுழுக்கு விழாவிற்காக எழில்மேவி நிற்கும் யாகசாலையின் அற்புதத் தோற்றம்.



விநாயகர், சோமாஸ்கந்தர் சுப்பிரமணியர் விமானங்களில் குடமுழுக்கு நடைபெறும் கோலாகலக் காட்சி. மக்கள் வெள்ளம் மகிழ்ந்து கண்ட மகிமைமிகு காட்சி.




காண்போர் வினைபோக்கும் அருள்மிகு கைலாசநாத சுவாமி விமானத்திற்கு
கும்பத்திலிருந்து புனிதநீர் சொரியும் புண்ணியக் காட்சி



அருள்மிகு கைலாசநாதசுவாமி கோயில் குடமுழுக்கு விழா
நிறைவெய்தியபின் தீபாராதனை ஆகும் திவ்யமிகு திருக்காட்சி




அருள்மிகு நித்தியகல்யாணி சமேத கைலாசநாதர் ஆலயம், ஒக்கூர் விநயகர் ஆலயம்,
நகரவிடுதி, ஒக்கூரார் ஊருணி ஆகியவை காட்சிதரும் அழகுமிகு மாட்சிஇது!





குடமுழுக்கு விழாக் கலையரங்கில் பாராட்டுவிழா அதனில் வாரியார் சுவாமிகள் வலம் இருந்து ஆசிநல்க, வைத்திய சுப்பிரமணியஐயர் இடம் விளங்க மெய்யப்பர் உடன் இருக்க அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீ. நடுவிருந்து தலைமை ஏற்க நகரத்தார் பெருமக்கள் சூழ்ந்திருக்க குழுத்தலைவர் அண்ணல் ராமசாமி உரையாற்றும் ஆனந்தக் காட்சி.



முன் வரிசை : இ. அ. சு. ராம. சு. சுந்தரேசன் செட்டியார் அறங்காவலர், K. N தேவஸ்தானம் தேவகோட்டை S.M.AR.N.AR. நாராயணன் செட்டியார். அறங்காவலர், குடமுழுக்கு விழாக்குழுச் செயலாளர் காரைக்குடி SA. அண்ணாமலை செட்டியார். அறங்காவலர் செயற்குழு உறுப்பினர் கானாடுகாத்தான் M. S. S. M.M. முத்துராமன் செட்டியார் குடமுழுக்குவிழாக் குழுச் செயலாளர், காரைக்குடி.

பின் வரிசை : சித. நா. கிருஷ்ணன் செட்டியார் அறங்காவலர் K.N. தேவஸ்தானம் காரைக்குடி S. ராமநாதன் செட்டியார் அறங்காவலர் செயற்குழு உறுப்பினர் நெற்குப்பை; PL. S. RM. சுப்பிரமணியன் செட்டியார். செயற்குழு உறுப்பினர் குடமுழுக்கு விழாக்குழு ஒ. சிறுவயல். V. வெங்கட சுப்பிரமணியன். பொறுப்பாளர் K. N. தேவஸ்தானம்.

இளையாற்றக்குடியின் பெருமை

சோமலே

முன்னுரை

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது ஔவை மூதாட்டியின் அணிமொழி.

இந்த அறிவுரையை ஆணையாக ஏற்று சாவகம், சீனம், இந்தோசீனம், ஈழம், பர்மா, மலேசியா, சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா, மொரிசுத் தீவு போன்ற கடல் கடந்த நாடுகளுக்குப் பாய் மரக் கப்பல்களில் சென்று அந்த நாட்டு மொழி தெரியாத நிலையிலும் வாணிபம் செய்த பெருங்குடி நகரத்தார் ஆவர்.

பட்டினப்பாலை முதலிய சங்க நூல்களிலும் சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களிலும் இவ்வினத்தாரின் வணிகச் சிறப்பும் வாழ்க்கை நெறி முறைகளும் நேர்மையும் நாணயமும் பலபடப் பாராட்டப் பெற்றுள்ளன.

நகரக் கோயில் என்ற பெயர்களின் வரலாறு

நகரத்தார் என்ற பெயர் ஏற்பட்டது எவ்வாறு? என்ற வினாவுக்கு விடை கூற, இந்தக் கட்டுரை ஏற்ற இடமாகும்.

பட்டினம் என்ற சொல் காவிரிப்பூம்பட்டினத்தையும் நகரம் என்ற சொல் காஞ்சிபுரத்தையும் குறிப்பன. நகரேஷு காஞ்சி என்பது காளிதாசன் வாக்கு.

நகரத்தாரின் பூர்வீகம் சோழநாடு.

கரிகால் பெருவளத்தான் காலத்தில் சோழ மன்னன் ஒருவன் நாக நாட்டு மங்கை ஒருத்தியைக் காதலித்து அவளுக்குப் பிறந்த தொண்டைமான் இளந்திரையனுக்கு சோழ நாட்டின் வட பகுதியை வழங்கினான்; அன்று முதல் அது தொண்டை நாடு ஆயிற்று.

சோழ நாட்டின் தலைநகர் உறையூரே ஆயினும் காஞ்சி துணைத் தலைநகராக இருந்தது.

அந்நாளில் தனவணிகர்கள் காஞ்சியில் வசித்து வந்தார்கள். மாமல்லைத் துறைமுகத்தின் வாயிலாகவும் அதற்குத் தென்பால் பாலாறு கடலுடன் கூடும் இடத்தில் திகழ்ந்த துறைமுகங்கள் வாயிலாகவும் கடல் வாணிகம் செய்து கொண்டிருந்தனர். உள்நாட்டு வாணிகமும் செழிக்கச் செய்து கொண்டிருந்தனர்.

நாட்டின் வளத்திற்கு வாணிகம் இன்றியமையாதது. எனவே, சோழ மன்னன் வடபகுதியை மைந்தன் இளந்திரையனுக்கு வழங்கிய பின்னர் தனது துறைமுகமாகக் காவிரிப்பூம்பட்டினத்தை வளர்க்க விரும்பினான்.

இக்காலத்தில் இந்திய அரசும் மாநில அரசுகளும் அயல் நாட்டு உள் நாட்டுச் செல்வர்களையும் தொழில் அதிபர்களையும் தொழில் நுட்பம் தெரிந்த

நிறுவனங்களையும் எங்கள் மாநிலத்தில் தொழில் தொடங்க வருக வருக என அறை கூவி இருகரம் கூப்பி அழைக்கின்றனர் அல்லவா? சலுகைகள் வழங்குகின்றனர் அல்லவா? இதுபோல,

அப்பொழுது பல நாட்டு வாணிகமும் பரக்கச் செய்து கொண்டிருந்த தன வணிகர்களையும் தன்னுடன் இடம் பெயர்ந்து காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து குடியேறும்படி சோழ மன்னன் கேட்டுக் கொண்டான்.

தனவணிகரும், மன்னன் கருத்துக்கு இணங்க காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்து சேர்ந்தனர்.

அப்போதுதான் முதல் முறையாக, தனவணிகர் நகரத்தார் என்ற பெயரால் அழைக்கப் பெற்றனர். கச்சியம்பதியிலிருந்து வந்ததால் ஏற்பட்ட பெயர் இது.

பிற்காலத்தில்'நகரம்' என்றசொல் வணிகச்சபையை (Chamber of commerce) குறிப்பதாயிற்று.

இவ்விதம் தங்களுடைய சமூகக் கூட்டங்களை கோவிலிலேயே நடத்துவதால் நகரம் - நகரி என்று சொற்கள் கோவிலையும் குறிக்கின்றன.

காவிரிப்பூம்பட்டினம்

காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்தபின் நகரத்தார்கள் அந்த துறைமுகத்தையும் வளர்ச்சியடையச் செய்தனர்.

இந்த உண்மையை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நூற்றாண்டிலும் நகரத்தார் வாழும் மைய இடங்களாகச் சென்னையில் துறைமுகத்தை அடுத்த பவளக்காரத்தெரு, கல்கத்தாவில் ஆற்றுத் துறைமுகத்துக்கு அருகேயுள்ள எஸ்ரா ஸ்ட்ரீட், கொழும்பு மாநகரில் செட்டித்தெரு ஆகியவற்றின் அமைப்பு உள்ளது.

சில நூறு ஆண்டுகள் தாங்களும் செல்வம் பெருக்கி சோழநாட்டையும் வாணிபத்தால் வளப்படுத்திய பிறகு, நகரத்தார்க்கும் மன்னனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதைப் பற்றிப் பல்வேறு வரலாறுகள் கூறப்படுகின்றன, நகரத்தார்களுடைய செல்வச் செழிப்பால் அரசன் பொறாமைப்பட்டான் என்பது ஒரு கருத்து. அந்த ஆராய்ச்சியில் நாம் இங்கே புகவில்லை.

நகரத்தார் மலை

கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டில் நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வெளியேறினர். திடீரென்று வெளியேறியதால், எங்கே செல்லுவது என்ற திட்டவட்டமான முடிவு இல்லாமல் இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒரு மலைப் பகுதியில் தங்கினர்.

இவர்கள் தங்கிய காரணத்தால் அந்த மலை நகரத்தார் மலை எனப் பெயர் பெற்றது.

இப் பெயர் மருவியும் மாறியும் சிதைந்தும் திரிந்தும் நார்த்தாமலை என்ற பொருளற்ற பெயரால் இந்த மலையும் ஊரும் வழங்கிவருகின்றன.

பாண்டியர் அழைப்பு

நகரத்தார் மலையில் வணிகர்கள் தங்கியிருந்ததை அறிந்த பாண்டிய அரசன் அவர்களைத் தன் நாட்டுக்கு அழைத்தான்.

தாங்கள் குடியிருக்கச் சில ஊர்களையும் தாங்கள் வழிபடுவதற்குச் சில கோயில்களையும் (கோயில் நிர்வாக உரிமையுடன்) நகரத்தார் கேட்டதற்குப் பாண்டிய அரசன் இசைந்தான்.

இவ்வாறு இவர்களுக்கு வழங்கப் பெற்ற முதலாவது ஊர் நாட்டரசன் கோட்டை; முதன்மையான கோயில் இளையாற்றக்குடி.

நாட்டரசன் கோட்டை

நாட்டரசன் கோட்டை நகரத்தின் அமைப்பைக் கூர்ந்து நோக்கினுல் அது காவிரிப்பூம்பட்டினத்தின் தொன்மையான அமைப்பை அடியொற்றியதாக இருப்பது தெரியவரும்.

ஊரின் நடுவண் சதுக்கமும், அந்தச் சதுக்கத்தில் பல திருக்கோயில்களும் அமைக்கப் பெற்றுள்ள அருமை ஒப்பிடத்தக்கது.

கரிகாலச் சோழீசர் கோவில் என்று ஒரு கோவில் இருப்பதும் இது நகரத்தார் ஆட்சியில் இருந்து வருவதும் ஒரு சிறப்பு.

சிலப்பதிகாரத்தில் சதுக்க பூதங்கள் பற்றிய குறிப்புக்கள் இருப்பதற்கு ஏற்ப, இவ்வூரில் பூதகுடித் தெரு இருப்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டரசன் கோட்டைதான் கண்ணகி என்னும் பத்தினிக் கடவுளுக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டு களவேள்வியால் சாந்தி செய்து கொற்கைப் பாண்டியனை இளஞ்செழியன் விழா எடுத்துத் துயர் துடைத்த பகுதி.

இந்நகரில் கோயில் கொண்டுள்ள கண்ணகி தான் கண்ணுத்தாள் ஆக வழிபடப்பட்டு வரும் தெய்வம்.

தமது குலக் கொடியான கண்ணகித் தாய் தன் கற்புத் திறம் காட்டிக் கடவுள் தன்மை எய்திய புனிதமான பகுதிக்கே நகரத்தார்கள் வந்து குடியேறினர் என்பது பெரிதும் பொருத்தமாகத் தோன்றுகிறது என்பார் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள்.

நாட்டரசன் கோட்டையில் சில காலம் தங்கிய பிறகே, இளையாற்றக்குடியில் கோயில் உரிமையைப் பெற்றனர் என்பார் கம்பன் அடிப்பொடி.

இளையாற்றக்குடியில் தங்கி இளைப்பாறிய பிறகே, வாழும் ஊர்களைத் தேர்ந்தெடுத்தனர் என்பார் வேறு சிலர்.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து பாண்டிநாட்டுக்கு வந்த நகரத்தார் எண்ணிக்கை 500 என்று கணக்கிடப் படுகிறது. இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு.

இவ்வாறு வந்தவர்கள் தாங்கள் வரும்போது காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து உவச்சர்களையும் அழைத்துவந்து கண்ணகித் தாய்க்குப் பீடம் அமைத்தனர் என்றும் அறிஞர்கள் எழுதியிருக்கிறுர்கள்.

சோழநாட்டிலிருந்து நகரத்தார் ஆடவர் மட்டுமே வந்தனர் என்பது கர்ண பரம்பரைச் செய்தி. பாண்டிநாட்டுக்கு வந்த பிறகு, நகரத்தார்கள் வேளாளப் பெண்களை மணந்து கொண்டனர் என்ற கொள்கைக்குச் சான்றாக வேளாளர் ஒருவரைத் தலைவராகக் கொண்ட துழாவூர்ச் சைவமடம் இயங்கிவருகிறது.

இளையாற்றக்குடிக் கோவில்

இளையாற்றக்குடி உட்பட நகரக் கோவில்கள் ஒன்பதுமே ஏற்கெனவே இருந்தன; அவை பாண்டிய அரசர்கள் ஆட்சியில் செயல்பட்டன. அப்போது அவை மரத்தின் அடியில் அமைந்திருந்தன அல்லது மண் சுவரால் கட்டப்பட்ட அளவில் எளிய நிலையில் ஆரவார மின்றி இருந்தன. எனினும் அவை பாண்டிய அரசர்களால் பெரிதும் மதிக்கப்பட்டிருந்தன.

நகரத்தார்கள் அவற்றை ஒப்புக் கொண்ட பிறகு, முதலில் செம்பூராங் கல்லால் விரிவாகக் கட்டினார்கள், சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கருங்கல் திருப்பணி ஆக்கி மண்டபங்களையும் சேர்த்தனர்.

பர்மாவில் நகரத்தார்கள் பெரும் பொருள் ஈட்டியபோது கயிலாசநாதர் நித்தியகல்யாணி அம்மன் பெயருக்கு இரங்கூனில் கொடுக்கல் வாங்கல் தொழில் நடத்தி இளையாற்றக்குடிக் கோவிலுக்குப் பொருள் திரட்டியது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

நெல் விலை ஏற ஏற, பர்மாத் தொடர்புடைய நகரத்தார்கள் - இளையாற்றக் குடியின் ஒவ்வொரு பிரிவினரும் போட்டிபோட்டுக் கொண்டு தனித்தனிக் குளங்கள், விடுதிகள், கோயில்கள் என்றெல்லாம் அழகுற அமைக்க பணத்தை வாரி இறைத்தனர்.

கயிலாசநாதருக்கும் நித்தியகல்யாணி அம்மனுக்கும் கற்கோயில் கட்டப் பட்ட காலம் 15ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று இக் கோவிலிலுள்ள கல் வெட்டுக்களிலிருந்து அறிகிறோம்.

இளையாற்றக்குடி தேவஸ்தானத்துக்கு உட்பட்ட கிரணிப்பட்டியில் முத்து மாரியம்மன் கோயில் உள்ளது. இக் கோயிலில் சித்திரைத் திங்களில் சீராக நிகழும் முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழா இளையாற்றக்குடியில் பெருமை சேர்க்கும் பெரு விழா எனலாம்.

தலச்சிறப்பு

வடக்கு இளையாற்றக்குடி, தெற்கு இளையாற்றக்குடி என்ற இரு ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஊராக இது திகழ்கிறது. ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படும் வரை, இளையாற்றக்குடி ஒரு சிற்றரசரின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்து இவற் றையெல்லாம் தொகுத்துப் பார்த்தால் இத்தலத்தின் தொன்மை புலப்படும்.

மூர்த்தியின் சிறப்பு

மூர்த்தியின் சிறப்பை கயிலாசநாதர் என்ற பெயரே உணர்த்தும். காமாட்சி அம்மன் இறைவனைக் கட்டித் தழுவும் காட்சி கல்லில் வடிக்கப் பெற்றிருக்கிறது.

சோழநாட்டில் இளையாற்றக்குடி

இந்த இறைவன் - இறைவி (நித்திய கல்யாணி) புகழை நிலைநாட்ட விரும்பி, கழனிவாசல்குடி பிரிவினரான காரைக்குடி அ. மு. க குடு பத்தார் தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டம் மட்டையந்திடலில் கயிலாச நாதருக்கும் நித்திய கல்யாணிக்கும் 1930 ஆண்டில் கவினுறு கோயில் கருங்கல்லில் கட்டி, அன்றாட பூசை களைக் குறை சிறிதமின்றி நடத்தி வருகின்றனர்.

காமகோடி பீடத் தொடர்பு

இளையாற்றக்குடிக்கு மற்றுமொரு பெருமை, காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியார் மடத்துக்கும் இந்தத் தலத்துக்கும் ஏற்பட்டுள்ள நெருங்கிய உறவு எனலாம்.

1851 முதல் 1890 வரை 39 ஆண்டுகள் காமகோடி பீடத்தில் அமர்ந்திருந்து அருளாட்சி செலுத்திய 65-ஆவது பட்டம் ஸ்ரீ மஹா தேவேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்கள் இளையாற்றக்குடியில் முத்தி அடைந்தார்கள். அவர்களுடைய சமாதி நகரத்தார்களால் கருங்கல் சிவாலயமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இந்த அதிஷ்டானம், இளையாற்றக்குடி தேவஸ்தானத்துடன் இணைந்தது.

2 - 5 - 1985 குடமுழுக்கு விழாவின்போது இக்கோயிலில் பத்ம ஸ்ரீ டாக்டர் வி வைத்தி சுப்பிரமணிய ஐயரவர்கள் முன்னிலையில் இனிது நிகழ்ந்தது.

காஞ்சி காமகோடி பீடத்தின் 68- வது ஆசார்யராய் விளங்கி பீடாதிபதி காரியங்களிலிருந்து விலகிக் கொண்டு மௌனத்தாலும் குளிர்ந்த பார்வையாலும் புன்னகையாலும் ஆசார அநுஷ்டானங்களாலும் எளிமையாலும் அனைவரையும் வசீகரித்து வருபவர்கள் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் எனப்படும். காஞ்சிப் பெரியவர்கள். நடமாடும் தெய்வம் என்ற பெருவாரியான மக்களாலும் அறிஞர்களாலும் வழிபடப்பெறும் இவர்கள் இளையாத்தக்குடித் தலத்தில் தனி அபிமானம் உடையவர்கள். 1961 முதல் 1963 வரை தொடர்ந்து இரண்டரை ஆண்டுகள் இவர்கள் இங்கே தங்கியிருந்தார்கள்.

அப்போது ஆத்திகர்கள் அனைவரும் வியக்கும் வண்ணம் வியாச வித்வத்சதஸ் என்ற பல்கலை மாநாட்டையும் சமயக் கருத்தரங்கையும் 1962 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மிகவும் செம்மையாக நடத்தி அருள் பாலித்தார்கள். பல்வேறு மதங்களையும் சேர்ந்த வெளிநாட்டு அறிஞர்களும் ஏராளமான பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த தத்துவ மேதைகளும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இளையாற்றக்குடி மண்ணுக்குப் புகழ் சேர்த்தனர்.

முதன்மைக் கோயில்

நகரத்தார்கள் தங்களுக்குள் கொள்வினை கொடுப்பினைக்காக கோத்திரப் பிரிவாக ஏழு கோயில்களை அமைத்துக்கொண்டனர்.

ஏழகத்தார், ஏழு வழியினர். என்ற கல்வெட்டுக் குறிப்புக்களும் ஏழு நகரத்தார், ஏழு கோயில் நகரத்தார், ஏழு ஊர் நகரத்தார், ஏழகப் பெருந்தெருவான வீரபாண்டியபுரமுடையார் என்ற சொற்றொடர்களும் ஏழுநகரத்தார் குழுவ நாடகம், ஏழு நகரத்தார் பேரிற் பள்ளு நாடகம் என்ற இலக்கியங்களின் பெயர்களும் இந்த எண்ணிக்கையை வலியுறுத்துகின்றன.

இவையாவன

1. இளையாற்றக்குடி
2. மாற்றூர்
3. வயிரவன் கோயில்
4. நேமம்
5. இலுப்பைக்குடி
6. சூரக்குடி
7. வேலங்குடி

பிள்ளையார்பட்டிக் கோவிலும் இரணியூர்க் கோவிலும் 12-ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டதால் நகரக் கோயில்களின் எண்ணிக்கை 9 ஆயிற்று; இதைப்பற்றிய பிறிதோரிடத்தில் கூறுவோம்.

நகரக்கோவில்கள் அனைத்திலும் முதன்மை பெறுவது இளையாற்றக்குடியே;

இளையாற்றக்குடியார் என்ற பெயர் நகரத்தார் அனைவரையும் சுட்டும்.

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்கள் நேமங்கோயிலைச் சேர்ந்தவர்கள்; எனினும் அவர்கள் இயற்றிய ஒரு பாடலில்

''இங்கிலீஷ் கொடி பறக்கவே
இளையாற்றக்குடி சிறக்கவே''

என்று பாடியிருக்கும் பாங்கு இங்கு சிந்திக்கத்தக்கது.

முதல் அடியில் உள்ள 'இ'-க்கு எதுகை மோனையாக அடுத்த அடியில் 'இ'-யில் தொடங்கும் இளையாற்றக்குடியைச் சொன்னார்கள் என்று விதண்டவாதம் செய்யக்கூடாது. இலுப்பைக்குடி என்று இயம்பியிருக்கலாமே? இரணியூர் என்று சொல்ல இடையூறு என்ன? இறையருளால் அல்லது இலக்குமி அருளால் நகரத்தார் சிறக்கவே என்று பாடியிருக்கலாமே,

காலப்போக்கில் புள்ளிகள் மிகுந்ததால், திருமணங்கள் விரைந்து நடைபெற வழி வகுத்து இளையாற்றக்குடிக் கோவிலின் ஒவ்வொரு பிரிவும் ஒரு கோத்திரமாகக் கொள்ளப்பட்டது. சுவீகாரமும் அந்தந்தப் பிரிவுக்குள்ளேயே செய்துகொள்ள வேண்டும் என்று வரம்பு கோலப்பட்டது. ''பகல் பங்காளிகள்'' என்று இளையாற்றக்குடியாரை ஏக கோத்திரக் கோவில் நகரத்தார்கள் குறிப்பிடும் பழக்கம் நிலவுகிறது.

இளையாற்றக்குடிக் கோவில் பிரிவான திருவேட்பூருடையார் இளையாற்றக்குடிக் கோவிலிலிருந்து விலகி, இரணியூர் பிள்ளையார்பட்டி என்று தங்களுக்குள் இரு பிரிவுகள் ஏற்படுத்திக்கொண்டு பாண்டிய அரசர்களிடம் கோவில்கள் பெற்று அவ்வப் பெயர்களால் தனிக் கோவிலார் ஆனார்கள்.

எனினும் இன்றுங்கூட பிள்ளையார்பட்டிக் கோவிலார் தங்கள் திருமணங்களுக்கு இளையாற்றக்குடியில் பாக்குவைத்து, இளையாற்றக்குடிக் கோவில் மாலையும் வந்த பிறகே திருப்பூட்டுகின்றனர். இரணிக்கோவில் நகரத்தார்களின் திருமண முறையிலும் இந்த நடைமுறை நிலவுகிறது.

இந்தப் பிரிவினைகளுக்குப் பிறகும், நகரக் கோவில்கள் புள்ளிகளின் எண்ணிக்கையில் முதலிடம் வகிப்பது இளையாற்றக்குடியே. இந்த கோவில் புள்ளிகள் 9 ஊர்கள் தவிர ஏனைய ஊர்களிலெல்லாம் வாழ்கின்றனர்.

பிரிவுகள்

இளையாற்றக்குடி நகரத்தவர்கள் ஏழு பிரிவினர் ஆவர். இந்தப் பிரிவுகளில் முதலாவது ஒக்கூர் தியாக வரலாறு படைத்தவர்கள் ஒக்கூரார். இந்த விவரங்களை இக்குடமுழுக்கு மலரில் யாராவது கட்டுரையாகப் படைத்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். இந்தப் பின்னணி காரணமாக ஒக்கூராருக்கே கோவில்களிலும் விழாக்களிலும் முதல் மரியாதை கொடுக்கப்பட்டு வருகிறது.

இரண்டாவது பிரிவு கழனிவாசல் பிரிவு. கழனிவாசல் குடியார் என்றும் இவர்களைச் சொல்லுவது வழக்கம். நான் இந்தப் பிரிவினனே ஆதலால் இப்பிரிவைப் பற்றிச் சிறிது ஆராய்ந்தேன்.

இந்த ஆராய்ச்சிக்குக் காரணம் என்னுடைய குடும்பத்துக்கும் இளையாற்றக்குடிக் கோவிலுக்கும் இருந்து வரும் நெடிய தொடர்பே ஆகும்.

கழனிவாசல் பங்காளிகள் அனைவரும் ஒரு காலத்தில் கழனிவாயில் (என்றும் ஏழகப் பெருந்தெரு என்றும் வழங்கிவந்த) ஊரில் இருந்தனர். இது இன்றைய கோவிலுள் உட்பட்ட பகுதி. பல ஆலயங்களைத் தன்னகத்தே கொண்டது. இவற்றுள் ஒன்று ஏழகப்பெருமாள் விண்ணகரம்.

இதன் விளைவாக, இப்பிரிவினர், இளையாற்றக்குடியில் ஆதிகேசவப்பெருமாள் கோவிலைக் கட்டியிருக்கின்றனர். தசாவதாரம் செதுக்கப் பெற்ற பத்துத் தூண்களும் இந்தக் கோவிலில் அழகான வேலைப்பாடுடன் மிளிர்கின்றன.

※ பெருமாள் கோவில் கட்டப்பட்டபோது கட்டிட வேலைகளை வரையறை செய்வதிலும், நிறைவேற்றுவதிலும், கலையழகுடன் கோவில் அமையச் செய்வதிலும் பெரும் பொறுப்பு ஏற்றுக்கொண்டார். என்னுடைய சிறிய தந்தையார் நெற்குப்பை பழ. பெரி. பெரி. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள் ஆவார் அவர்கள் இப்பணிகளுக்காக ஈராண்டுகள் இளையாற்றக்குடியிலேயே தங்கியிருந்தார்கள்.

கழனிவாசல்குடிப் பிரிவினரின் பிரதிநிதியாக கயிலாசநாதர் நித்தியகல்யாணி திருக்கோவிலில் நியமன டிரஸ்டியாக இப்போது இருப்பவர் என் அண்ணன் மகன், நெற்குப்பை சோம. சொ. இராமநாதன் செட்டியார் ஆவார்.

கழனிவாசல் குடியாருக்குப் பெருமாள்பால் ஏற்பட்ட இந்த ஈடுபாட்டின் வேறு கூறு ஒன்று உண்டு. இராம காதை பாடிய கவிச்சக்ரவர்த்தி கம்பனின் பள்ளிப்படை வீட்டில் (சமாதியில்) நாட்டரசன் கோட்டையில் கழனிவாசல்குடி நகரத்தார் குடும்பம் ஒன்று 200 ஆண்டுகளுக்கு மேலாக பூசை நடத்தி வருகிறது. இக்குடும்பத்தின் வழிவந்த ஆவி. அரு. இராமநாதன் செட்டியார் என்ற கம்பர் இராமநாதன் செட்டியார் இச் சமாதியை எழில்மிக்க சோலையுடன் கூடிய கோவிலாகக் கட்டியிருக்கிறார்.

மூன்றாவது பிரிவினர் பட்டனசாமி எனப்படுவர். இப்பிரிவினர் திருவெண்காடராகிய பட்டினத்தடிகள் வழியினர் என்பது ஒன்றே இவர்கள் அனைவர்க்கும் பெருமை தருவதாகும்,

பட்டனசாமிப் பிரிவைச் சேர்ந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பல்கலைக் கழகம் கண்ட அண்ணாமலை அரசர் குடும்பத்தார்.

சென்னை மாநகர் 17-ஆம் நூற்றாண்டு வரை மீன் பிடிக்கும் சிற்றூராக இருந்தது. பாடல் பெற்ற சைவக் கோயில்களாக ஏழாம் நூற்றாண்டில் புகழ் பெற்றிருந்த பகுதிகள் தென்கோடியில் மயிலாப்பூரும் வடகோடியில் திருவொற்றியூரும் ஆகும்.

திருவொற்றியூர் மூவர் தேவாரம் பெற்றது. இந்தத் தலத்தில், முற்றும் துறந்த பட்டினத்தடிகள் முக்தியடைந்தார். பாடல் பெற்ற இப் பெருங் கோவிலுக்குள் பட்டினத்தடிகளின் தனிக்கோவில் ஒன்று உளது.

பட்டினத்தடிகளுக்குச் செய்யப் பெற்ற இச் சிறப்புக் காரணமாகத் திருவொற்றியூர்ச் சிவன் கோவிலின் அறங்காவலர்களுள் ஒருவராக பட்டினசாமிப் பிரிவைச் சேர்ந்த நகரத்தார்கள் இருந்து வருகின்றனர். பெரிய அளவில் அமைந்த நகரவிடுதியும் பட்டினசாமி பிரிவினரின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

அண்ணாமலை அரசர் குடும்பத்தாரும் அரசரின் முன்னோரும் திருவொற்றியூர்க் கோவில் அறங்காவலராக இருந்திருக்கின்றனர். சென்னை மாநகர் யாருக்கு உரியது என்ற கிளர்ச்சி ஆந்திரருக்கும் தமிழருக்கும் இடையே 1950-இல் மூண்டது. தலைநகர் தமிழருக்கே என்ற வாதத்துக்குச் சான்றாதாரமாக பட்டினசாமி பிரிவினரின் திருவொற்றியூர்க் கோவில் தொடர்பு பயன்பட்டது.

இவ்வாறே பெருமருதூர், கிங்கிணிக்கூரார், பெருசெந்தூர், சிறுசெந்தூர் என்ற ஏனைய பிரிவினர்களுக்கும் பல சிறப்புகள் இருக்கக்கூடும்.

முடிவுரை

46 ஆண்டுகளுக்குமுன் - 1939-இல் குடமுழுக்கு நடைபெற்ற இளையாற்றக்குடிக் கோவிலைப் புதுப்பித்து குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று இக்கோவில் நகரத்தார் பலரும் விரும்பினர். இந்த விருப்பத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க ராஜா. சர் முத்தையா செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு 1982 ஆவணியில் அமைக்கப் பெற்றது.

தந்தையாருக்குப் பிறகு மைந்தர் டாக்டர் எம். ஏ. எம் இராமசாமி அவர்கள் மனமுவந்து இந்தப் பொறுப்பை ஏற்று விரைந்து செயலாற்றும் தங்கள் இயல்புக்கேற்ப, குறுகிய காலத்திலேயே திருப்பணி வேலைகளை இனிது நிறைவேற்றியிருக்கிறார். இச் செயல், எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அண்ணாமலை அரசர் காலத்தில். இளையாற்றக்குடி தேவஸ்தானப் பணிகளில் அரசருக்கு வலது கரமாக விளங்கியவர். கழனிவாசல்குடி பிரிவினரான ஆத்தங்குடி குன்னக்குடியான் செட்டியார் என்ற ஆறுமுகம் செட்டியார் அவர்கள் ஆவார்கள். அவர்தம் வியத்தகு பக்தியும் மற்றும் இடைவிடாத புண்ணியச் செயல்கள் ஆகியவற்றின் பயனாக அவருடைய மூத்தமகன் திரு. ஏ. ஆர். இராமசாமி அவர்களைச் செயலாளராகக் கொண்டு, இளையாற்றக்குடிக் கோவிலின் அன்றாட பூசைகளுக்கான செலவுகளை ஈடுகட்டும் வருவாய் ஈட்டக்கூடிய மூலதனம் திரட்ட ஓர் அறக்கட்டளை இயக்கம் தொடங்கப் பெற்றிருக்கிறது.

திருப்பணியைச் செம்மையாக முடித்த பெருமக்களுக்கும் குடமுழுக்கு இனிது நிறைவேற உறுதுணையாக இருந்த அன்பர்களுக்கும் கற்கோவிலுக்குச் சொற்கோவிலாகிய மலரைப் படைக்கும் குழுவினர்க்கும் வைப்புநிதி வைக்க ஆவன செய்து வரும் பெருந்தகையாளர்க்கும் மற்றும் நகரத்தார்கள் அனைவருக்கும் உலகெங்கும் உள்ள ஆத்திகப் பெருமக்களுக்கும் அருள்மிகு கயிலாசநாதரும் அருள்தரும் அன்னை நித்தியகல்யாணியும் திருவருள் பாலித்து எல்லா நலங்களையும் வளங்களையும் வாரி வழங்குவார்களாக!

நமச்சிவாய வாழ்க!
நாதன்தாள் வாழ்க!
மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்குக!

நன்மணம் வீசட்டும்

முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விஸ்வநாதம்

ஏறத்தாழ ஐயாயிரம் நகரத்தார் குடும்பத்தினர் உரிமையோடு போற்றி வருகின்ற இளையாத்தக்குடி அருள்மிகு நித்தியகல்யாணி அம்மை கைலாசநாதப் பெருமான் திருக்கோவில் குடமுழுக்கு விழா அண்மையில் நடைபெறவிருக்கிறது என்ற செய்தியும், அதன் நினைவாக மலர் ஒன்று வெளிவரவிருக்கிறது என்ற செய்தியும், என்னை மகிழ்விக்கின்றன.

விழா இனிது நடைபெற வேண்டுமெனவும், மலர் நல்லறிஞர் பெருமக்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து நாடு முழுவதும் நன் மணம் வீச வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி முழுமனதுடன் வாழ்த்துகிறேன்.

அறநூல் நெறி

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

நகரத்தார்கள் திருக்கோயிலைச் சுற்றி, சுற்றமாக வாழ்கின்றனர். நகரத்தார்களுக்கு, சிவநெறியும் செந்நெறியும் இரு கண்கள். நகரத்தார்கள் திருக்கோயிலை மையமாகக் கொண்டு வாழ்வதை மற்ற சமுதாயமும் முன்னோடி ஆக எடுத்துக் கொள்ளுமானால் மனித குலத்திற்கு நல்ல எதிர்காலம் உண்டு

மேலும் அவர்கள் எண்ணற்ற திருக்கோயில்களைத் தமிழ் நாட்டில் எழுப்பினர். விண்ணை அளந்து காட்டி வினை மறைக்கும் அழகு பொலிவு உடைய திருக்கோயில்கள் தமிழகத்தில் மட்டும் தான் உண்டு. சித்தாந்த செந்நெறியைச் சார்ந்து, சமயத்தின் திருக்கோயில் வழிபாட்டில் அதிக ஈடுபாடு உண்டு. இறைவன் உயிர்களிடத்தில் ஒன்றி, உடன் ஆகி, வேறாகி நின்று அருள் செய்கிறான். மூவேந்தர்கள் அன்றைக்குத் தமிழ் நாட்டில் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து பாதுகாத்த பெருமை நகரத்தார்களுக்கே உண்டு. அறம் செய்வதைவிட அறம் காத்தலே பேரறம் என்று அற நூல்கள் கூறும். அந்த நெறியில் திருக்கோயில்களை, பேணிப் பாதுகாத்து வரும் நகரத்தார்களுக்கு சைவ முறையில் ஆலயம் என்றும் கடப்பாடு உடையது.

இளையாத்தங்குடி ஓர் சிற்றூர்: ஆனால் பெரிய திருக்கோயில்கள் அமைந்துள்ள ஊர். பெரிய மனம் படைத்த வழிபாடுடையவர்களை கொண்ட நித்திய கல்யாணி உடன் உறை கைலாச நாதர் திருக்கோயில் அருட்பொலிவு மிகு உடையது. இத்திருக்கோயிலை வலிவூட்டி வண்ணத்தில் புதுப்பித்து நிறைகுட நீராட்டுதல் மூலம் எம்பெருமானுக்கும் அம்பிகைக்கும் உள்ள ஈடற்ற உறவு புதுப்பிக்கப்படுகிறது. பொலிவூட்டப்படுகிறது. செட்டி நாட்டு அறக் குடும்பத்தில் வழிதோன்றிய பெருமை உடைய எம். எஸ் மெய்யப்பன் அவர்கள் திருப்பணி குடமுழுக்கு விழா மலருக்கு செயல் பொறுப்பேற்று சீரோடும் சிறப்போடும் செய்து வைக்கிறார்கள். குடமுழுக்கு விழா இனிது நிறைவேறவும் இன்ப அன்பு என்றும் எங்கும் நிறைவு பெறவும் திருவருளை சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

***

கைலாச நாதர்க்குக் கவிதை மடல்

வே. அண்ணாமலை
M.A;A.M.A;
(வலம்புரி அண்ணாமலை)

திருவாரும் தேவர் தினந்தோறும் போற்றும்
மருவார் இளசைநகர் மாண்பார் பதிதன்னில்
நித்திய கல்யாணி நித்தம் இடப்புறத்து
நத்தி உடனுறையும் கைலாச நாதர்க்குப்
பிள்ளையார் பட்டிப் பெருங்கோயில் தானுடையான்
விள்ளும் கவிதைமடல் வேண்டுவது என்னவெனில்,
கண்போன்ற கல்வியைக் கற்பதற்கும், கற்றதற்பின்
உண்ணும் உணவுக் குழைப்பதற்கும் இந்நாள்
இடம்ஒதுக்கும் சட்டத்தால் எங்கள் இனத்தார்க்(கு)
இடம்கிடைக்க வில்லை, இடம்கிடைக்க வில்லையே!
இன்னும் சிலவருடம் இந்தநிலை நீடித்தால்
பின்தள்ளப் பட்டுப்பின் தங்கி விடுவோம்;
குடமுழுக்கால் உள்ளம் குளிர்ந்திருப்பீர் என்று
திடமாக நம்பியதால் தீட்டினேன் இம்மடலை;
பாட்டை விரும்பும் பரம்பொருளே! இந்நாளில்
நாட்டை ஆள்கின்ற நற்றலைவர் தம்மிடத்தே
எங்களுக்காகத் தூதுசென்றே ஏற்ற இடம்ஒதுக்கச்
செங்கருணை செய்வீர் சிறிது.

தாயே சரணம்

கவியோகி மகரிஷி
டாக்டர் சுத்தானந்த பாரதியார்

வெண்பா

காலை யழகோ கலையழகே கண்குளிரும்
மாலை யழகோ மலரழகோ — ஞாலமெலாம்
நேசித்துப் பூசித்து நித்யகல் யாணிசிவன்
ஆசிபெறும் அன்பின் அழகு!

ராகம்-இந்துஸ்தான் பைரவி தாளம்-திஸ்ரஏகம்

தாயே சரணம் சிவசக்தி — யோகத்
தனலைத் தரும் பரதேவி
நீயே தாரகம் என்றறிந்து — நிதம்
நினைந்து நினைந்துருகிப் பணிந்தோம்

மேகக் காரிருளைப் பிளந்தே — விண்ணில்
மின்னிக் கடகடெனச் சிரிப்பாய்
மோகக் காரிருளைப் பிளக்க — உன்
மூலக்குண்டலி சக்தி யளிப்பாய்

வட்டக் குளிர்மதியைப் போலே — என்
வாழ்விற் கமுதநில வளிப்பாய்
பட்டப் பகலொளியைப் போலே — நான்
பார்க்கப் பரிவுடனே வருவாய்

வானத் தமுதரசம் வழங்கி — நர
வாழ்வை வரகவிதை யாக்காய்
ஞானத் திருவருளைப் பயப்பாய் — இந்த
ஞானம் புதுமைபெற நயப்பாய்

எங்கும் உன் குண்டலியின் ஓட்டம் — அதில்
இயங்கும் உலக விளையாட்டம் — அருள்
பொங்கும் புன்னகையின் பொலிவால் — சிவ
போகம் பொலியும் களி காட்டாய்

செல்வத் தொழில் வளரச் செய்வாய் — நாடு
செழிக்க வளங்கொழிக்கத் திகழ்வாய் — வாழ்வில்
வெல்லும் விறு மிகத் தருவாய் — அம்மா
விரும்பும் அன்பர் காணவருவாய்

எடுத்த காரியத்தில் வெற்றி — நிதம்
எண்ணும் புண்ணியத்தில் வெற்றி
அடுத்து முயலும் செயல் வெற்றி — நின்
அன்பர்க் கருள்புரியும் வெற்றி

சொல்லுக் கரிய சிவசக்தி — சுத்த
ஜோதிச் சுடரொளியே வணக்கம்
வெல்லும் இனைசைவளர் தாயே — சரண்
வேத வேதாந்தவுரு நீயே

நெல்லுக் கிறைத்தநல்ல நீர்போல் — வாழ்வு
நிலவித் தழைக்க வளமீவாய்
சொல்லுக் கரிய பரஞ் சுடரே — உன்பேர்
சொன்னால் விலகும் படர்இடரே

பாரில் உன்னையன்றி யாரே — எம்மைப்
பரிந்து தயை புரிந்தாள் வாரே
காரின் கருணை மிகும் அருளே — எம்மைக்
காவாய் வேதாகமப் பொருளே

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்ரீம் ஐம் ஔம்
சுத்தசக்தி சூர்யஜோதி ஓம் சிவம்

பாமணக்கப் பாடுவோம் பண்

கவிஞர்
பூங்கோவன்

பனிமலர்ப் பார்வை படைத்திடும் நன்மை
நனிசிறந்த வாழ்க்கை நிலைக்க — இனித்தருவாள்
நித்தியக் கல்யாணி நீடுபுகழ் அம்பிகையை
சித்தமுடன் போற்றிடுவோம் சேர்ந்து;

சிந்தையில் ஈசனை தெள்ளமுத வாசனை
சந்ததமும் போற்றித் துதித்திட — வந்தால்
இடர்விலகி ஓடும்; இனிமைப் பெருகும்
சுடர்ஒளி எங்கும் தரும்.

உள்ளம் உவப்புடன் ஊரெல்லாம் பாடிடும்
கள்ளமிலா நாதனை கண்டுமனம் — துள்ளும்
அருளின்ப ஓசையில் நெஞ்சமெலாம் அள்ளும்
திருக்கோவில் கண்டாரே! தேன்.

அறத்திலும் அன்பு வளத்திலும் நேர்மை
திறத்திலும் தேர்ந்து தெளிந்த — நிறைமாந்தர்
சீர்சிறக்க வேண்டித் திருக்கோவில் தொண்டுதனை
பார்சிறக்க செய்கின்றார் போற்று!

நகரத்தார் அன்றி நலிந்தோர் வணங்கும்
மகராசி அம்பிகை மேவும் — சுகமளிப்பாள்
நாமணக்கப் பாடும் நமச்சிவாயம் தாள்பணிந்து
பாமணக்கப் பாடுவோம் பண்.



இன்புற்று வாழுங்கள்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்
26ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

இறைவன் திருப்பணிக்கு ஈடான பணி உலகில் வேறு எதுவும் இல்லை. நம் நாட்டு மன்னர்கள் பலரும் இவ்விறைபணிகளில் ஈடுபட்டுத் திருக்கோயில் எடுத்தல், திருவிழாக்கள் நிகழ்த்துதல் முதலான அறப்பணிகள் பலவற்றைச் செய்து வாழ்ந்ததைக் கல்வெட்டுக்கள் பலவும் தெரிவிக்கின்றன. முடிமன்னர்கட்குப்பின் இத்தகைய நற்பணிகளைத் தொடர்ந்து செய்த பெருமை நாட்டுக்கோட்டை நகரத்தார்களையே சாரும்.

தமிழகத்தின் கலை, பண்பாடு, நாகரிகம் முதலியவற்றை இன்றளவும் உலகிற்கு உணர்த்திவரும் இத்தகைய கோயில்களை எடுத்த நகரத்தார்களின் அரிய பணிகளைப் பாராட்டாதவர்கள் இல்லை எனலாம்.

ஆலயம் சிவபிரான் திருமேனிக்கு நிகரானது. ஆலயம் எடுத்தல், அதனைப் பழுதுபார்த்துப் புதுப்பித்தல் ஆகியவற்றைச் செய்வார்க்கு விளையும் பயன்கள் அளவிடற்கரியன.

இறைவன் உறையும் இடத்தில் நீற்று வேய்ந்து நிழல் செய்வோர், மண்ணாலும், செங்கல்லாலும் கட்டிடங்கள் அமைப்போர், எல்லாவற்றுக்கும் மேலாகக் கருங்கல்லால் நிலையான கோயில்கள் அமைப்போர் இவர்கட்கு விளையும் பயன்கள் ஒன்றுக்கொன்று மிகுதியாகும் எனச் சமய நூல்கள் தெரிவிக்கின்றன.

நகரத்தார் எடுத்த கோயில்கள் அனைத்தும் கருங்கல் திருப்பணிகளாகச் செய்யப்பெற்றது, இத்தகையோர், தங்கள் சமூகத்தவர்க்கு, சில கோயில்களில் ஒன்றாக விளங்கும் இளையாத்தக்குடி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலை மீண்டும் புதுப்பித்து மகாகும்பாபிஷேகம் செய்விப்பதை அறிந்து மகிழ்கிறோம்.

ஆலயம் இறைவன் திருமேனிக்கு நிகரானது: இராஜகோபுரம்—பாதங்கள்; ஆஸ்தான மண்டபம்—தொடை; நிருத்த மண்டபம்—தொப்பூழ்; மகாமண்டபம்—மார்பு; அர்த்த மண்டபம்—கழுத்து; கர்ப்பக்கிருகம்—தலை; விமானம்—தலையுச்சி எனப்படும். பிரகாரங்கள்—கோசங்களாகும்.

பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை ஆலயங்களில் ஏற்படும் பழுதுகளை அகற்றி மகாகும்பாபிஷேகம் செய்வித்து வருதல் தெய்வத் திருவருள் அத்திருக்கோயிலில் நிலையாக இருத்தற்கு உதவும்.

இளையாத்தக்குடி நகரப் பெருமக்கள் மிக்க ஈடுபாட்டுடன் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலைப் புதுப்பித்து மகாகும்பாபிஷேகம் செய்விப்பதோடு விழாமலர் ஒன்றையும் அதன் நினைவாக வெளியிடுவது பாராட்டத் தக்கது.

மகாகும்பாபிஷேக விழா இனிது நிகழவும் விழாமலர் அருள்மணம் கமழும் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து பயன்தரவும் நகரத்தார் சமூகத்தினர் முன்போல இறைபணிகள் பலவற்றையும் ஆற்றி இன்புற்று வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
ஸ்ரீ—ல—ஸ்ரீ
சிவப்பிரகாசதேசிக பரமாசாரியசுவாமிகள்
குருமகாசந்நிதானம்
திருவாடுதுறை ஆதீனம்

நடராஜப் பெருமான் நல்அருள் தருக

இளையாத்தக்குடி அருள்மிகு நித்தியகல்யாணி அம்பிகை சமேத கைலாசநாதர் திருக்கோயில் குடமுழுக்கு 2 - 5 - 1985 ல் நடைபெறுவதும், அதன் நினைவாக குடமுழுக்கு விழா மலர் வெளியிட இருப்பதும் அறிந்து மகிழ்கின்றோம்.

குடமுழுக்கு இனிது நிகழவும் விழா மலர் சிவமணம் பரப்பவும் விழாவில் பங்கு பற்றும் அனைவருக்கும் எல்லா நலங்களையும் அருள் செய்யுமாறு ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி களைச் சிந்திக்கின்றோம்.



வணிகர்குலம் ஓங்க வந்துதித்த நல்அரசர்

மன்னர்கள் முடிசூட
    மணிமகுடம் தமைத்தந்து
மன்னர் பின்னோர் என்ற
    மகிமைதனைப் பெற்ற மக்கள்
காவிரிப்பூம்பட்டினம் தனைவிட்டு-தமிழ்ப்
    பூவிரியும் பாண்டிநாடு வந்தவர்கள்
கோயில் வழிவாழும்
    குடிமக்கள் ஆனார்கள்
இளையாத்தக்குடிக் கோயில்
    என்னும் ஏற்றமிகு கோயில்மரபினிலே
அதிசயம் ஒன்று
    அற்புதமாய் நடந்தது!
வணிகர் குலத்திலும் ஓர் அரசர்
    வந்து உதிக்கட்டுமே என்று
நித்தியகல்யாணத் தாயும்
    நிகழ்கருணேசர் கைலாசநாதரும் நினைத்ததனால்
அருட்ஜோதி எனவே
    அண்ணாமலை வள்ளல்அரசராய்த் தாம் உதித்தார்
அவர் முத்தான மகனாக மட்டுமின்றி
    நகரத்தார் பேரொளியாய்
நன்மைகள் அனைத்திற்கும்
    நான்என்று ஓடிவரும் நல்மகனாய்
வருவார் அனைவரையும் வரவேற்கும்
    வள்ளல் பெருமகனாய்
எளியவராய் இனியவராய்
    எந்நாளும் நல்லரசாய்த்
திகழ்ந்த முத்தையவேள் தம்கோயில்
    திருப்பணிக்கு முன்நின்றார், ஆண்டவன்
திருப்பாதம்தமை அடைந்தார்-அவர்
    திருப்புகழைப் போற்றிடுவோம்
தெய்வமாய் ஆனவர்தம்
    திருநெறியில் நாம்நடந்து
இளையாத்தக்குடிக்கோயில் ஏற்றத்திற்கு
    என்றென்றும் நாம் முன்நிற்போம்

பரம்பரைப் புண்ணியம்

அருட்செல்வர்
சி. மு. அரு. நா. அருணாசலம்
செட்டியார்

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நகரத்தார் பெருமக்கள் பாண்டிநாடு வந்த காலந்தொட்டே, பரம்பரையாகவே பக்தி மிக்கவர்கள். ஆகையால்தான் அவர்கள் தொன்றுதொட்டே திருப்பணிகளில் மிகவும் நாட்டம் உடையவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். கோயில்களைக் கட்டுவதும், குடமுழுக்கு விழாக்கள் நடத்துவதும், நடைமுறையில் கோயில் காரியங்களைக் கவனிப்பதும் அவர்கள் இயல்பாகவே வளர்ந்து வந்திருக்கிறது

நகரத்தார்கள் ஒன்பது கோயில் பிரிவினராக வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பிரிவுகளில் இளையாத்தக்குடிக்கோயில் மிகவும் பழமையும் பெருமையும் உடையது.

2 - 5 - 1985 ம் நாள் மிக விமரிசையாகக் குடமுழுக்கு விழாக்கண்ட அந்தக் கோயிலில் எங்கள் குடும்பத்திற்கு உள்ள தொடர்புகளை எண்ணும்போது பெரும் பூரிப்பு ஏற்படுகிறது.

செட்டிநாட்டிற்கே, உலகம் முழுவதும் பெரிய பெருமையை தேடித்தந்தவர்கள் செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள். அந்தப் பெருமகனார் இளையாத்தக்குடிக்கோயிலைச் சேர்ந்தவர்கள்.

அதனால் அவர்கள் காலம் முதல் எங்கள் தந்தையார் காலம் தொடங்கி இந்தக் கோயிலுக்குப் பல பணிகளைச் செய்யும் பாக்கியத்தை நாங்கள் பெற்றோம்.

அண்ணாமலை அரசர் அவர்கள் இளையாத்தக்குடிக் கோயிலுக்கு அறங்காவலராக இருந்தபோது என் தந்தையார் நாராயணன் செட்டியார் அவர்கள் அறங்காவலராக இருந்தார்கள்.

என் தந்தையாருக்குப் பின்னர் நான் தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் அறங்காவலராக இருந்தேன். இப்போது என் மகன் நாராயணன் அறங்காவலராக இருந்து வருகிறார்.

தொடர்ந்து இளையாத்தக்குடிக் கோயிலின் நிர்வாகங்களைக் கவனிக்கும் வாய்ப்பு மூன்று தலைமுறையாக எங்கள் குடும்பத்திற்கு இருந்துவருகிறது.

நகரக்கோயில்களும் மற்றும் பல கோயில்களும் குடமுழுக்கு விழாக்கள் காண்பதைப் பார்த்தபோது எனக்கு நம் கோயிலுக்கு குடமுழுக்குவிழாச் செய்ய வேணும் என்ற எண்ணம் தோன்றியது.

நித்தியகல்யாணி சமேதகைலாசநாதரே அந்த எண்ணத்தை எனக்கு உண்டாக்கினார் என்றே நான் நினைத்தேன்.

உடனே அறங்காவலர்கள் ஏழு பேர்களையும் எம். என். எஸ்டி. சிதம்பரம் செட்டியார் அவர்களையும் எம். எஸ். எஸ். முத்துராமன் செட்டியார் அவர்களையும் சந்தித்து இதுபற்றிக் கூறினேன். அவர்கள் யாவரும் அவசியம் குடமுழுக்கு விழாச் செய்ய வேண்டியதுதான் என்று மிகவும் ஆர்வம் காட்டினார்கள்.

செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்களை இது குறித்து சந்திக்க முடிவுசெய்தேன். அவர்களை நான் சென்னையில் சந்தித்தபோது அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் நாம் எல்லோரும சேர்ந்து நல்ல முறையில் சிறப்பாக கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு விழாச் செய்வோம் என்று சந்தோஷமாகச் சொன்னார்கள். தம்பி எம். ஏ. எம். ராமசாமி அவர்களும் இதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள்.

குடமுழுக்குவிழா தொடர்பான முதல் கூட்டம் இளையாத்தக்குடிக் கோயில் நகரவிடுதியில் நடைபெற்றது. செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு குழுவை அமைத்தோம்.

குடமுழுக்குவிழா நடவடிக்கைகளுக்கு நிர்வாக அலுவலகத்தை என் இல்லத்திலேயே வைத்துக்கொள்வதென முடிவுசெய்தோம். அதுபோல அலுவலகத்தை என் இல்லத்தில் ஏற்படுத்தி அது தொடர்பான எல்லாச் செயல்களையும் மேற்கொண்டோம்.

பின் நடந்த கூட்டங்கள் யாவும் என் இல்லத்தில் நடந்தன.

எதிர்பாராது நம் பெருமைக்குரிய செட்டிநாட்டரசர் அவர்கள் இறைவன் திருவடியை அடைந்தபின் நம் அன்பிற்குரிய தம்பி எம். ஏ. எம். ராமசாமி அவர்களை குடமுழுக்குவிழாக் குழுவிற்குத் தலைவர் ஆக்கினோம்.

அவர்கள் விளம்பரம் மூலமும் நன்கொடைகள் மூலமும் நான்கு லட்ச ருபாய் வரை சேர்த்துத் தருவதாகச் சொல்லி ஆர்வம் தந்தார்கள். அதுபோலவே சேர்த்தும் தந்தார்கள்.

நாங்கள் இளையாத்தக்குடிக்கு அருகாமையில் காரைக்குடியில் இருப்பதாலும், தொடர்ந்து மூன்று தலைமுறையாக அந்தக்கோயிலோடு தொடர்பு கொண்டுள்ளதாலும், எப்படியும் அந்தக்கோயிலின் அன்றாட நடவடிக்கைகளில் நாங்கள் பங்கு கொள்ளும் புண்ணியம் எங்களுக்கு இருந்து வருகிறது.

இந்தக்குடமுழுக்குவிழா இனிது நிறைவேறக் குடமுழுக்குவிழாக் குழுவினரும், நிதி கொடுத்தவர்களும், மற்றும் கோயில் பங்காளிகளும் முன்னின்று பல உதவிகளைச் செய்தார்கள்.

இளையாத்தக்குடி நித்தியகல்யாணி சமேத கைலாசநாதர் கோயிலை நாளும் கண்ணும் கருத்துமாகக் காத்துவருவதிலும் அதற்கான பணிகளில் ஈடுபடுவதிலும் நான் மிகுந்த மனநிறைவை அடைகிறேன்.

அந்த அம்பாள் அருளாலும் சுவாமி அருளாலும் எங்கள் குடும்பத்தார் இன்னும் சில தருமங்களைச் செய்யும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

கானாடுகாத்தான் சா. ராம. சித. சிதம்பர ஐயா குடும்பத்தினர் திருவானைக் கோயில் சம்புகேஸ்வரசுவாமி, அகிலாண்டேஸ்வரி ஆலயத் திருப்பணியைச் செய்தார்கள். அப்பொழுது சிதம்பர ஐயா என் தந்தையார் நாராயணன் செட்டியார் அவர்களிடமும், என் பெரிய தகப்பனார் முத்துராமன் செட்டியார் அவர்களிடமும் திருவானைக்கோயிலில் பசுமடம் ஒன்றை வைத்து நடத்தும்படி சொன்னார்கள்.

அதை என் தந்தையாரும் பெரிய தந்தையாரும் மிகவும் விருப்பமுடன் ஏற்று அங்கு பசுமடம் கட்டினார்கள். அதற்கு கோயிலிலேயே இடம் தந்தார்கள் என்பது பெரிய பெருமையாகும். இந்தத் தருமம் நான் பிறந்தபோது அதாவது எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் உருவானதாகும். தொடர்ந்து சிறந்த பல மாடுகளை வைத்து பராமரித்து இந்தத் தர்மம் மிகச்சிறப்பான முறையில் நடந்துவருகிறது. இப்போதும் ஜாதிமாடுகளை வைத்து, காலையிலும் மாலையிலும் சுவாமிக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம் செய்ய இருகுடம் பால்களை அனுப்பி வருகிறோம்.

சாத்தான் கோயிலில் நந்தவனம் வைத்து அங்குள்ள தெய்வங்களுக்கு மலர் கொடுத்து வருகிறோம்.

காரைக்குடி கொப்புடையம்மன் மிகவும் வரதையான தெய்வமாகும், அந்த அம்மனுக்குத் தமிழ் வருடப்பிறப்பன்று மிகவும் சிறப்பாகத் திருவிழா ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அந்த அம்மனுக்கு அன்றுதினம் முதல் அபிஷேகம் தொடர்ந்து ஆண்டுதோறும் எங்கள் குடும்பத்தார்தான் செய்துவருகிறோம்.

நம் கோயில் புள்ளிகளும், எல்லாக்கோயில் நகரத்தார்களும் மற்றும் எல்லோரும் எல்லா நலன்களும் பெறவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

மேலும் நம் இளையாத்தக்குடி நகரத்தார்கள் நம் கோயில் வளர்ச்சியில் நாளும் கவனம் செலுத்தி நித்தியகல்யாணி சமேத கைலாசநாதர் அருளால் எல்லா நலமும் எல்லா வளமும் பெறவேண்டும் என்று அந்த தெய்வங்களை வணங்குகிறேன்.

குடமுழுக்குவிழாவை ஒட்டி மலர் ஒன்று கொண்டுவருவது எப்போதும் நிலைத்து நிற்கக்கூடிய மிக நல்ல முயற்சி. அந்த மலர் சிறக்கவும் அந்த நற்பணியைச் செய்யும் அன்பர்கள் நலம் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

எங்நாளும் வாழ்க இனிது

டாக்டர் பேராசிரியர்
அர. சிங்கார வடிவேலன்

நாட்டுக்குக் கோட்டை நகரத்தார் நன்மரபாம்
கோட்டைக்குப் பூட்டுகளோ கோயில்களாம் - கோட்டையிலே
ஏற்றும் கொடியாம் இளையாத்த நற்குடிமேல்
ஊற்றுபுனல் கங்கையதன் ஊற்று.

ஆண்டெண்பத் தைந்தில் அமைந்தமதி மேயிரண்டில்
வேண்டு குருவாம் வியாழனன்று - நீண்டகுட
நீராடும் கைலாசர் நித்தியகல் யாணியருள்
நீராலே வாழ்க நிலம்.

உள்ளத் திருக்குடத்தில் ஊறுகிற பக்தியெனும்
வெள்ளத்தால் நீராட்டும் மேன்மக்கள் - எல்லாரும்
கண்ணுன கல்யாணி கைலாசர் நல்லருளால்
எந்நாளும் வாழ்க இனிது.

நாடு போற்றும் நகரத்தார் திருப்பணி

ஆறு. மணி
தலைமை மண்டல மேலாளரின்
தனி உதவிச் செயலர்,
பாரத ஸ்டேட் பாங்க்,
மண்டல அலுவலகம், மதுரை

தமிழ் நாட்டை ஆண்டு வந்த மூவேந்தர் ஆட்சிக்குப் பின்னால் அறப்பணிகளும் ஆலயத்திருப்பணிகளும் போற்றிப் பாதுகாக்கப் பெற்றுவருவதற்கு நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்கள் முக்கிய காரணமானவர்கள் என்பது நினைவு கூறத்தக்கது.

தமிழகத்தில் உள்ள ஆலயங்களில் மட்டுமின்றி வடக்கேயுள்ள ஆலயங்களிலும் வெளிநாடுகளில் உள்ள ஆலயங்களிலும் செய்துள்ள திருப்பணிகள் கணக்கிலடங்காதது மட்டுமல்ல போற்றுதற்குரியது.

நாட்டுக்கோட்டை நகரத்தாரின் இளையாத்தங்குடி பிரிவினருக்கு சொந்தமான ஸ்ரீ கைலாசநாதர் நித்தியகல்யாணி அம்மன் கும்பாபிஷேக விழா இன்று கோலாகலமாய் நடைபெறுகிறது. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புராதனக் கோயிலான இது நகரத்தார்களின் பிரதான கோயிலாகும். இத்திருக் கோயில் 44 வருடங்களுக்கு முன்பு திருப்பணி செய்யப்பெற்று தற்போது மீண்டும் திருப்பணி செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இத்திருப்பணியினை துவக்கிவைத்த பெருமகனார் செட்டிநாட்டரசர் ராஜா சர். முத்தையா செட்டியார் ஆவார்கள். பின்னர் இத்திருப்பணியினை அண்ணாமலை பல்கலைக்கழக இணைவேந்தர், டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களை தலைவராகக் கொண்டு கும்பாபிஷேகக் குழு அமைக்கப்பெற்று இந்நாளில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இளையாற்றங்குடிக்கு என்ன சிறப்பு?

உலகத்திலுள்ள புண்ணிய ஸ்தலங்கள் தோன்றியதற்கு முந்தியே இளையாற்றங்குடி இறைவரால் ஏற்படுத்தப்பெற்றது. அந்நகரம் அமைந்த இடம் புராதன வனம் என்ற பெயருடையதாகும். கிருதயுகத்தில் ஞானமும், திரேதா யுகத்தில் யாகமும், துவாபரயுகத்திலும் கலியுகத்திலும் தானமும், மோக்ஷ சாதனம் என்று நூல்கள் கூறும். ஆனால், எல்லா யுகங்களிலும் சிவபூஜை மிகச்சிறந்த பயனை அளிக்குமென்றும், அதைவிடச் சிறந்த முத்திசாதனம் இல்லை என்றும், பெரியோர் கூறுவர். அத்தகைய சிவபூஜையை இளையாற்றக்குடித் தலத்தில் புரிபவர்கள் அதன் அரும் பயன்களையெல்லாம் மிக விரைவில் அடைவார்கள். இந்த ஸ்தலத்தின் பெயரைக் கேட்பதாலே மக்கள் அறத்தையும், இதனை நினைப்பதால் பொருளையும், தரிசிப்பதால் இன்பத்தையும், இங்கு மூன்று நாட்கள் வசிப்பதால் வீட்டையும் அடைவார்கள் என்பது திண்ணம். இது மகாபாதகங்கள் என்ற பஞ்சுக்குத் தீயாகும். முன்னை வினைகளைத் தீர்த்துக்கொள்ள விரும்புபவர் இந்த ஸ்தலத்தை விரும்பி அடைவார்கள். இங்கு வசித்த ஒரு காரணத்தாலேயே எறும்பு முதல் எல்லா பிராணிகளும் பிறவிக்

கடலைக் கடந்துவிடுகின்றன என்றால் இதன் பெருமையை இன்னும் விளக்க வேண்டுமோ? இங்குச் செய்யப்படும் தானங்கள் யாவும் ஒன்று கோடியாகப் பயனைத் தரும். இதற்குச் சிவபுரம், பூகைலாயம், காமப் பிரபூரணபுரம், சித்தபுரம், புராதனவனம், நித்தியகல்யாணிபுரம், சிரமாபநோதனபுரம் (இளையாற்றங்குடி.) என்று பல பெயர்கள் உண்டு.

இவ்வாலயத்தில் அமைந்துள்ள இறைவனின் திருவருளால் அசுரர்களின் கொடுமைகளுக்கு ஆளான இந்திரன் முதலான தேவர்களின் இளைப்பை (துன்பத்தை) இறைவன் துடைத்திட்ட காரணத்தால் இளையாத்தக்குடி. என்றும் இளசைப்பதி என்றும் பெயர்பெற்றது.

சித்ததீர்த்தம் : இளையாத்தக்குடியிலுள்ள சித்ததீர்த்தத்தில், நீராடினால், நெஞ்சக் கவலைகள் நீங்கும்; நீண்ட நாட்களாய் உள்ள துன்பங்களெல்லாம் சூரியனை கண்ட பனிபோல மறையும். திருப்பணிக் குழுக்களை பெற்ற இவ்வாலயத்தில் கும்பாபிஷேக விழா சிறப்புடன்

காஞ்சிப்பெரியவர் : பூர்வபுண்ணிய ஸ்தலமான இளையாத்தக்குடியில் காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குருவாக விளங்கும் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும், புதுப்பெரியவாள் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் 1961—62 இரண்டு ஆண்டுகள் இத்திருத்தலத்தில் தங்கியிருந்து பூஜைசெய்தது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

திருப்பணிக்குழுத்தலைவர் : டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி.

உதவித்தலைவர்கள் :
மற்றும் திருப்பணிக்குழுவின்
செயலாளர்கள் : திருவாளர்கள் எம். எஸ். எஸ். முத்துராமன்,
எஸ். எம். ஏ. ஆர். நாராயணன்,

பொருளாளர் : என். என். எஸ்டி. சிதம்பரம் செட்டியார்

செட்டிநாட்டரசரின் அறக்கட்டளைச் செயலாளர் ஏ. ஆர். ராமசாமி அவர்கள். மற்றும் நகரத்தார் பெருமக்கள் மற்றும் அனைவரின் பணியும் மகத்தானது. கைலாசநாத நித்தியகல்யாணி அம்மன் திருவருளால் எல்லாரும் எல்லாமும் பெற்று இங்கு இல்லாமை இல்லாத நிலைவேண்டி சீரோடும் சிறப்புடனும் வாழ்ந்திட வணங்கிடுவோமாக.

சீலமுடன் வாழ்க சிறந்து

காப்பியக் கவிஞர்
நா. மீனவன்

நித்தியகல் யாணியுடன் கைலாச நாதரருள்
    சித்த புரமென்னும் சீருடனே - பத்திவளர்
கோலஇளை யாற்றங் குடிக்கோயில் நன்னகரார்
    சீலமுடன் வாழ்க சிறந்து.

கங்கையினைத் தலைசுமந்து பிறைய ணிந்த
    கைலாச நாதருடன் அமர்ந்த தேவி
பொங்குமருள் நித்தியகல் யாணி என்னும்
    புன்னகையாள் இளையாற்றங் குடிசேர் கோயில்
தங்கியருள் செய்யஏழ் பிரிவார் கூடித்
    தகுதிபெற அமைந்ததிருக் கோயி லுக்கே
மங்களமாய்க் குடமுழுக்கும் செய்தோம் இந்நாள்
    மன்னவராம் நகரத்தார் மரபு வாழ்க!

கண்கொள்ளாக் காட்சி

மெ. நா. சித. சிதம்பரம்
பொருளாளர்
குடமுழுக்கு விழாக்குழு

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி

இரத்தின மகுட தனவைசியர்கள் எனப் புகழ்பெற்றவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்:

மன்னவருக்கு, மகுடம் சூட்டும் உரிமையும், இரத்தின வணிகமும், செய்து வந்தமையால், இவர்கள் இரத்தின மகுட தனவைசியர்கள் என்று அழைக்கப்பெற்றனர்:

நகரத்தார் சோறுடைத்தான, சோழநாட்டை விட்டுக் குடிபெயர்ந்து பாண்டி நாட்டுக்கு வந்த பொழுது, மிக்க மரியாதையுடன் வரவேற்று, மகிழ்ந்த பாண்டிய மன்னன் தென்பாண்டி நாட்டிலே ஒன்பது கோவில்களை விட்டுக்கொடுத்து இவற்றைப் பரிபாலனம் செய்து நலமுடன் இருந்து வாருங்கள் என்று அனுப்பிவைத்தான்.

இந்த ஒன்பது கோவில்களிலும், தனியாய சிறப்புடையது இளையாத்தக்குடிக் கோவில், ஒக்கூருடையார், பட்டணசாமி உடையார், கழனிவாசலுடையார், பெருமருதூருடையார் பேர சந்தூருடை யார் கிங்கிணிக்கூருடையார், சிறுசேத்துடையார், என்ற ஏழு பிரிவுகளுடையது இக்கோவில்.

மதிப்பிற்குரிய செட்டிநாட்டரசர்: இராஜா, சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தலைமைப் பொறுப்பின் கீழ் பிரமாதி வருடம் (1939தில்) மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது; இதன்பின் ஒரு கும்பாபிஷேகம் 1958ல் சாதாரண முறையில் நடைபெற்றிருக்கிறது:

இந்த இளையாத்தக்குடிக் கோவிலை மீண்டும் புதுப்பித்துச் சிறப்பான முறையில், கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமெனக் கருதி செட்டிநாட்டரசர், டாக்டர், இராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு குழு நியமிக்கப்பெற்றது:

அதன்படி திருப்பணி வேலைகள் தொடங்கி நடந்து கொண்டிருக்கும் பொழுது, செட்டிநாட்டரசர் அவர்கள் இயற்கை எய்திவிட்டார்கள்: அதன்பின் எல்லோராலும் இனிய முறையில், செல்லமாகத் தம்பி என்று அழைக்கப்பெறும் டாக்டர் M. A. M. இராமசாமி அவர்கள் தலைமையின் கீழ் இக்குழு செயல்படத் தொடங்கிற்று: தம்பி M. A. M. இராமசாமி அவர்கள், மிகவும் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் உற்சாகம் ஊட்டித் திருப்பணி வேலைகளைத் தாமே முன்னின்று, நடத்தி வைத்துக் கும்பாபிஷேகத்திற்கும் நாள் வைக்கப் பெற்றது.

கும்பாபிஷேகத்தை மிகவும் சீரோடும், சிறப்போடும் நடத்த வேண்டுமென்று திட்டமிட்டுத் திருப்பணி வேலைகளை மிகத் துரிதமாக நடத்தி முடிக்கப் பெற்றன:

மிக்க அழகோடு மின் விளக்குகள், கண்கொள்ளாக் காட்சியோடு ஒளிசிந்து மாறு யாகசாலைக் கொட்டகைகள் அமைக்கப் பெற்றன: கைலாசநாதருக்கும், நித்தியகல்யாணிக்கும், தனித்தனியே, நவகுண்டங்கள் அமைக்கப்பெற்றன. மற்ற மூர்த்திகளுக்கு ஏககுண்டம் அமைக்கப் பெற்றது. நூற்றுக்கும் மேலான சிவாச்சாரியார்கள் வேள்வியில் கலந்து கொண்டு, அறுகாலப் பூஜைகளை அழகுற நடத்தினர்

குறித்தபடி குரோதன ஆண்டு சித்திரைத் திங்கள் 20ஆம் நாள் (2-5-85) வியாழக் கிழமைக் காலை 8-00மணி அளவில் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது:

இதே வேளையில் இளையாத்தக்குடிக் கோவில் ஒக்கூர் நகரத்தார்களும் தங்களுடைய கைலாசவிநாயகப் பெருமான் திருக்கோவிலையும் புதுப்பித்துத் தனியே யாகசாலை அமைத்து நவகுண்டம் போட்டு ஆறுகால பூஜை நடத்திக் கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நடத்தினார்கள்:

இக் கும்பாபிஷேக விழாவினைக் காண வெகுதொலைவிலிருந்தெல்லாம் மக்கள் வந்து கூடிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. எல்லா மக்களுக்கும் ஸ்ரீநித்தியகல்யாணி சமேத கைலாச நாதர் திருவருள் புரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பட்டினத்துப் பிள்ளையார்

கவிச்செம்மல்
டாக்டர் ரெ. முத்துக்கணேசன்

தத்துவம் கண்ட சொற்கள்
தான்உணர்வு அழிக்கும் சொற்கள்;
நித்திய பூசைக் காக
நிமலனின் புகழைச் சேர்த்துப்
பத்தியை ஊட்டும் சொற்கள்;
பக்குவம் சேரப் பாடும்
சித்தராம் பட்டினத்தார்
சிந்திய பாக்கள் கோடி!

ஒற்றியூர் அரனைச் சேர்ந்தார்;
ஒளிர்பெரு காத லாலே
வெற்றிசேர் கோவை யோடு
விளங்கு"நான் மணிமா லை"யால்
நெற்றிசேர் கண்ணு டையார்
சிவநெறி நிலைக்கப் பாடும்
பெற்றியார் பட்டி னத்தார்
பெருந்தவக் கொழுந்தே யாவார்.

ஒண்சுடர் ஒளியைப் போல
ஒளிர்கலை அழகைப் போல
மண்தரு நன்மை போல
மாபெரும் ஆக மத்தைப்
பண்மலர் ஞானப் பாவாய்
பாடினார் திருவெண் காடர்!
கண்ணுடைச் சைவம் காக்கும்
கருத்துறை படையே யன்றோ!

கண்ணொளிச் சோதி என்றும்,
கழுமலக் கோவே என்றும்,
எண்ணிநெஞ் சுருகு வார்க்கே
இதயத்தே அமர்ந்து காக்கும்
புண்ணியன் சிவனே என்பார்;
புவியினில் வாழும் நாளில்
பெண்ணினில் பாதி யானைப்
பெரிதும்நீ வழுத்து கென்பார்.

அருத்தனைப் புகலி யானை
அழகனை மருதா ரானை
நிருத்தனைத் தில்லை யானை
நித்தமும் நினைந்து நைந்து
திருத்தலம் பலவும் சுற்றித்
திருவுடைச் சிவமே யான
கருத்துடைப் பட்டி னத்தார்
கழலடி போற்றி செய்வாம்!

அரசரின்நல் மைந்தர்
அன்பினால் தம்பி
ஆற்றலால் நற்தலைவர்

இளையாத்தாக்குடிக் கோயில்
ஏற்றங்கள் கோடி என்றால்—அதில்
நாடிவரும் புகழுக்கு ஒரு
நல்மைந்தர், நம்குலத்து நாயகர்
ஆற்றல்கள்சேர் அண்ணாமலை அரசரின்
ஆற்றல்களால் உருவான நற்பெயரர்
முத்தையவேள் பெற்றெடுத்த
முத்தானமுத்து, முழுமதிபோல் நல்முத்து
அந்தநாள் இராமபிரான் அருளும் உறுதியும்போல்
இந்தநாள் திகழ்கின்ற எழில் ராமசாமி எனும் ஏந்தல்
எண்ணியதை முடிக்கின்ற ஏற்றகுடிப் பெருமகன்
முடிப்பதையே எண்ணுகின்ற முத்தரசர் நல்லமகன்
அருட்பணிகள் செய்வதிலே ஆற்றல்மிக உடையார்
திருப்பணிக்குழுவின் தீரம்மிகு பொற்தலைவர்
கோயில்பணிகள் கோதின்றி நடப்பதற்கும்
குடமுழுக்குவிழா கோலாகலமாய் நிகழ்வதற்கும்
துணைநின்ற பெருமகனார் தூயநற்தலைவர்—என்றும்நம்
இளையத்தாக்குடிக்கோயில் எழில்பெற்றுச் சிறப்பதற்கும்
நகரத்தார் குலம்நாளும் உயர்வதற்கும்
என்றும் துணைநின்று எழில்தலைமை ஏற்றிருக்க
நித்தியகல்யாணி உடன்உறை கைலாசநாதர்
நித்தம் அருள்புரிவார் நமக்கு நிம்மதிதான் தருவார்
பொன்மாலை அவர்க்கணிந்து, போற்றி வணங்கிடுவோம்.



உரிமைத்தலம்

கலைமாமணி
டாக்டர். ஆறு. அழகப்பன்
எம.ஏ.,எம்.லிட்., பி.எச்.டி.,
தமிழ்ப்பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

''இளையாற்றங்குடி சிறக்கவே'' என்பது பாடுவார் முத்தப்பரின் அருள்வாக்கு. இளையாற்றங்குடி சிறந்தால், நகரத்தார் நலம் பெறுவர்; நாட்டார் பயன் பெறுவர்; நாடு வளங்கொழிக்கும்.

இளையாற்றங்குடித் திருக்கோயில் எண்ணூறாண்டுப் பழமையுடையது. பூம்புகாரிலிருந்து பாண்டி நாட்டுக்கு வந்த நகரத்தார் கூடி வாழ்ந்த திருத்தலம் இளையாற்றங்குடி; ஆதலின், இது நகரத்தார்களின் உரிமைத்தலம்.

இத்திருக்கோயில், நகரக் கோயில்கள் ஒன்பதனுள் பழமையான ஒன்று. இக்கோயிலைச் சார்ந்த உட்பிரிவான எழு வகுப்பினர்களும் இரணியூர்க்கோயில், பிள்ளையார்பட்டிக்கோயில் என்ற இரு சகோதரர்களுமான ஒரு வகுப்பினரும் இங்குக் கூடி வாழ்ந்தனர். அப்போது இந்த எட்டுப்பிரிவினருக்கும் தனித்தனியே குளங்களும் பிள்ளையார் கோயில்களும் பெருமாள் ஆலயமும் இருந்திருக்கின்றன என்பதனை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

1927-ல் ஒக்கூர்ப் பிரிவினர், தமக்கு உரிமையுடைய விநாயகர் கோயிலையும் திருக்குளத்தையும் திருப்டணி செய்து திருக்குட நன்னீராட்டு விழா நடத்தினர்.

1939-ல் இத்தலத்தில எழுந்தருளியுள்ள கைலாசநாதர் திருக்கோயில், பெருமாள் கோயில், பசுமடம், ஊருணி, நந்தவனம் ஆகியன 16 இலட்சம் ரூபாய் செலவில், திருப்பணி செய்யப்பெற்றுச் சிறப்பாகத் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது.

ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகள் கழித்து இன்று (2-5-85) மிகப் பெரிய அளவில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறுகின்றது. இளையாற்றங்குடி நகரமே முழுமையாகத் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது என்றால், அது மிகையன்று.

நகரத்தார்கள், தெய்வம் மறவாத உள்ளத்தர்; தமிழ் மறவாத நாவினர்; நாணயம் தவறாத வாழ்க்கையர்; ஈட்டலும் கொடுத்தலும் கொண்ட கொள்கையர்; அயரா உழைப்பினர். அவர்கள் வாழ்வில் ஏற்றங்களும் இறக்கங்களும் சகடக்கால் போல மாறி மாறி வந்தாலும், மனம் தளரா ஊக்கத்தால் குலப்பெருமையை இன்றும் நிலைநாட்டி வருகின்றனர்.

திருப்பணி செய்தல், அவர்களின் பிறப்புரிமை. நகரத்தார்கள், இந்திய விடுதலைக்கு முன்புவரை, கோயில் திருப்பணிகளுக்காகச் செலவிட்ட தொகை, பத்துக் கோடிக்கும் மேற்பட்டது. இன்று அத்தொகையின் மதிப்பை எண்ணிப்பார்ப்பின்!

அயல்நாட்டுக் கொள்கை மாற்றங்களாலும், உள்நாட்டு வணிகப்போக்கின் விளைவாலும் நகரத்தார்கள் இக்காலத்தில் நலிவுற்றிருந்தாலும், அவர்களின் மனம், திருப்பணியில் மெலிவுறவில்லை. 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே' என்பது போல், பொருளால் பிற்பட்டாலும் நெஞ்சம் ஆண்டவன் அருளையே நாடுகின்ற நல்லறப் பண்பினர்.

திருக்கோயில்களில் நாள்தோறும் நடைபெறுவது பூசை. ஆண்டுக்கு ஒரு முறையோ இருமுறையோ நடைபெறுவது, விழா. பல ஆண்டுக்கு ஒருமுறை பழுது பார்த்து இறைவன் இருக்கும் பீடத்திற்கு மருந்து சாத்திக் கோயிலுக்கு வண்ணம் தீட்டி வனப்புச் செய்து புண்ணிய நன்னீராட்டுவது, குடமுழுக்குப் பெருவிழா. இதனைச் செய்வதும் பார்ப்பதும் வாழ்க்கையில் பெறுகின்ற புண்ணியப்பேறுகள்; அப்புண்ணியத்தை இன்று பெறுகின்றோம்.

இப்பெருவிழாவினை முன்னின்று நடத்தும் குழுவிற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள தலைவர். வாழையடி வாழையென அறஞ்செய்தலையே மூச்சாகக் கொண்ட செட்டிநாட்டு அரசர் குடும்பத்தில் தோன்றிய ஆனாசனன் பெருமுயற்சியாலும், திருப்பணிக்குழுவின் ஆக்கபூர்வமான உழைப்பாலும், இளையாற்றங்குடி நகரத்தார்களின் இடையறாச் செயலாலும் இவ்விழா இனிது நடைபெறுகின்றது.

''கூடி வழிபட்டால் கோடி நன்மை''

''ஆலயத் திருப்பணி ஆலமாவின் நற்பணி''

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

சு. வையாபுரி
முன்னாள் இயக்குநர்
தொழிற்கல்வி

அருள்மிகு நித்திய கல்யாணி அம்பிகை சமேத கைலாச நாதர் எழுந்தருளியிருக்கும் இளையாத்தக்குடி கோவில் குடமுழுக்கு விழா 46 ஆண்டுகளுக்கு பிறகு குரோதன ஆண்டு சித்திரை திங்கள் 20 ஆம் நாள் (2 - 5 - 1985) அன்று சீரோடும் சிறப்போடும் நடக்க இருப்பது மிகவும் வரவேற்க வேண்டிய போற்றத்தக்க விஷயம். விஞ்ஞான மும், மெய்ஞ்ஞானமும் மனிதனுடைய முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியம்.

கோயிலில் ஆண்டவனை பிரார்த்தனை செய்யும் போது மன அமைதி கிடைக்கிறது. இறைவனை உணர்வதற்கு மூன்று படிகளை நமது சாஸ்த்திரங்கள் கோடிட்டு காட்டு கின்றன. முதற்படி கர்மங்களை செய்ய வேண்டியது; இரண்டாவது படி தர்மங்களை செய்ய வேண்டியது; மூன்றாவது படி பிருமத்தை உணர வேண்டியது. இந்த மூன்று படிகளின் மகத்துவத்தை நன்கு உணர்ந்து நாட்டுக் கோட்டை நகரத்தார் இத் திருப்பணியை நல்ல சீரிய முறையில் நடத்தித் தந்தமைக்கு அவர்களை நான் மனமார பாராட்டி போற்றுகின்றேன். இது போன்ற திருப்பணிகள் விளைவாகத்தான் நாடும் நலம் பெற்று நாட்டில் உள்ள எல்லா உயிரினங்களும் நலம் பெற்று வாழ முடிகிறது.

இதன் அடிப்படையில் இப் பெருந் திருப்பணியில் ஈடுபட்ட எல்லோருக்கும் எனது உளமார்ந்த பாராட்டு தலையும், போற்றுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

அடுக்குமொழி அரசு
வலையபட்டி சண்முகம்
MA; MISAE; DCE; P.DIP.T & C.P;

இராவணன் பதினாராயிரம் ஆண்டுகள் தவம் இருந்து, அதன் பயனாக, கருடன், நாகன், யட்ஷன், தைத்வான், தானவன், இராஷசன், தேவன், என்ற ஏழு பிரிவினராலும் தனக்கு அழிவு வரக் கூடாது என்ற வரத்தைப் பெற்றான்: அவன் மனிதரை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. ஏனெனில் புலித்தோல் ஆடையணிந்த சிவபெருமானும், பொன்னாடையணிந்த திருமாலும், பூவாடையணிந்த பிரம்மனும் கூட இராவணனை எதிர்க்கவொண்ணா நிலையில் இருக்கும்பொழுது, மனிதர்கள் அவனுக்குத் துரும்பு தானே! புல் தானே! இவ்வாறாக இராவணன் நல்லறிவு, நல்லாற்றல், படைபலம் ஆகிய அனைத்தும் ஒருங்கே பெற்றிருந்தான்.

இருப்பினும், ''பிறன்மனை நோக்காப் பேராண்மை'' அதாவது ''பிறரது மனைவியரை ஏறிட்டுப் பார்க்காத தன்மை'' என்ற அறம் இராவணனிடம் இல்லை; ஒரு குடத்துப் பாலை ஒரு துளி விஷம் எவ்வாறு பயனற்றதாக ஆக்கி விடுகின்றதோ, அது போன்று இராவணனது பல்வேறு வல்லமையை, ''பிறன்மனை நோக்காப் பேராண்மையற்ற தன்மை'' பயனற்றதாக ஆக்கிவிடுகிறது.

ஆனால் இராமனோ மனித அவதாரம், படைபலம் இன்றிக் கால் நடையாய் கானகத்தில் வசிப்பவன். ஏக பத்தினி விரதம் கொண்டு அறத்தின் வழியே, அன்பு கொண்டு ஆன்றாடம் நன்றாக நாளும் ஒழுகுபவன். எனவே தான் அறத்தின் நாயகனான இராமன், தர்ம தேவதையின் உதவியால், சாதாரண குரங்கு, அணில், பறவை மற்றும் கல்வியறிவு, ஆச்சாரம், அனுஷ்ட்டானம் இல்லாத வேடர்கள் பெருந்துணை கொண்டு படைபலத்தில் சிறந்து விளங்கிய இராவணனை வீழ்த்தினான்.

எனவே, அறத்தின் வழி நடப்பவர்களே வல்லவர்கள் என்பதும், அப்படிப் பட்ட வல்லவர்களுக்குப் புல்லும் ஆயுதம் என்பதும் நிரூபணம் ஆகின்றதல்லவா?



இளைப்பாற இடம் தந்த ஈசுவரர்

ஏ. ஆர். ராமசாமி
செயலாளர்
ராஜா அண்ணாமலைபுரம்
ஐயப்பசுவாமி ஆலய அறக்கட்டளை

மனிதனை முழு மனிதனாக்குவது ஆன்மீக உணர்ச்சியே. மனிதன் பகுத்தறிவு உடையவன் என்றாலும் பக்தி உணர்ச்சி மட்டுமில்லை என்றால் அவன் வாழ்க்கை பாலைவனமாகத்தான் போய்விடும்.

மனித குலத்தின் உள்ளங்களைப் பண்படுத்தி துன்பம் வந்தாலும் அதை இன்பமாக எண்ண வைத்து, நம்பிக்கை மலர்களைப் பூக்கவைத்து, பசுஞ் சோலைகளாக விளங்குபவை இந்துமத ஆலயங்களே. அதனால்தான், ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்று நம் முன்னோர்கள் அவற்றின் பெருமையைக் கூறினார்கள். ஆலயங்கள் அனைத்துமே வழிபாட்டிற்கு உரியவைதான் என்றாலும் சில தலங்களுக்கு சில சிறப்புத் தன்மைகள் அமைந்து விடுகின்றன.

சோழ மன்னர்களுக்குப் பிறகு கோயில் திருப்பணிகளைக் குறிப்பிடத்தக்க அளவிற்குச் செய்தவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள். அவர்கள் கோயில்களில் ஒன்றான இளையாத்தக்குடி கோயில் ஒரு தனிப்பெரும் சிறப்புடைய தலமாக விளங்குகிறது. இங்கே வருகிறவர்கள் எத்தனை இளைப்பு உடையவர்களாக இருந்தாலும் அந்த களைப்பு நீங்கி களிப்படைகிறார்கள். வருபவர்கள் இளைப்பாறும் இடமாக இருப்பதால் இந்தத் தலம் காரணப் பெயராக இளையாத்தக்குடி என்ற பெயரைப் பெற்றது.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! என்று ஈசனை, கயிலைவாசனை எளியோர் நேசனை, இமைப் பொழுதும் மறவாத பக்திஉள்ளம் கொண்டவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர். கங்கைக்கரை தொடங்கி காவிரிக்கரை வரையில் அவர்கள் ஏற்படுத்தி உள்ள அற்புதக் கோயில்களும், அறச் சாலைகளும் கடல் கடந்த நாடுகளில் செய்துள்ள திருப்பணிகளும் அதற்கு சாட்சியங்களாகிக் கட்டியங் கூறி நிற்கின்றன.

எண்ணற்ற கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்த நகரத்தார் பின்னர் தங்களை ஒன்பது கோயில் பிரிவினராகப் பகுத்துக் கொண்டு கோயில் வழிக் குடிகளாக வாழும் பெரும் சிறப்புடையவர்கள்.

அந்த நவதிருப்பதிகளில் பழமையும், பெருமையும், முதன்மையும் உடையதாக இளையாத்தக்குடி கோயில் விளங்குகின்றது. கடல் கோளுக்கு அஞ்சி, காவிரிப் பூம்பட்டினம் விட்டு பாண்டிநாட்டை அடைந்த நகரத்தார்கள் இளைப்பாற இடம் தந்து காத்தவர்களாக இந்த ஆலயத்தில் மேவும் அருள்மிகு நித்தியகல்யாணி அம்பிகையும், கைலாசநாதரும் விளங்குகிறார்கள்.

இளையாத்தக்குடி நகரத்தார்கள் ஒக்கூர், கழனிவாசல், பட்டணசாமி, பெருமருதூர், கிங்கிணிக் கூரார், பெறசெந்தூர், சிறுசெந்தூர் என்னும் ஏழு பிரிவினராகவும் ஐயாயிரம் குடும்பங்களைக் கொண்டவராகவும் திகழ்கிறார்கள்.

இளையாத்தக்குடி மிகவும் அழகான ஊர். இந்தக் கோயிலைச் சேர்ந்த நகரத்தார்கள் தங்கள் தங்களுக்கென்று ஒரு விநாயகர் கோயிலையும், ஒரு ஊருணியையும் உண்டாக்கி இருப்பது அவர்கள் ஒற்றுமைக்கும் தர்மசிந்தனைகளுக்கும் எடுத்துக் காட்டாய் விளங்குகிறது. இளையாத்தக்குடி ஆலயம் எழில்மிக்கது. இளையாத்தக்குடி கோயில் ஊர் சிறியதாயினும் சாலைகளும், ஊரமைப்பும் திட்டமிட்டு உருவாக்கப் பட்டிருப்பதால் நாகரிகம் நிறைந்த ஒரு நகரம் போல் விளங்குகிறது.

அந்தக் கோயில் நகரத்தார்களின் நல்ல நிர்வாகத்தில் இருந்து வருகிறது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே இங்கே கோயில் நிர்வாக அலுவலகம், பள்ளி, அஞ்சல் நிலையம், பசுமடம், அர்ச்சகர்கள் பணியாளர்களுக்குத் தங்கும் வீடுகள் உருவாக்கப் பட்டிருப்பது இந்தக்கோயில் நிர்வாகத்தினர் எவ்வளவு தொலைநோக்கு உடையவர்கள் என்பது நன்கு விளங்குகிறது.

காஞ்சி காமகோடி பீடம் 65 வது அதிபதியாக விளங்கிய ஜெகத்குரு ஸ்ரீமகா தேவேந்திரசரஸ்வதி சங்கராச்சாரியார் அவர்கள் 1814-ம் ஆண்டுமுதல் 1851-ம் ஆண்டுவரை இங்கு வாழ்ந்து சிறப்பைத் தந்ததும், 68-வது பீடமாக விளங்கும் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் சிலகாலம் இங்கு தங்கியிருந்ததும் இந்தத் தலத்தின் மகிமையை வானளாவ உயர்த்தி நிற்கிறது. இளையாத்தக்குடி கோயிலுக்கு 46 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு விழா நடைபெற்றது. இப்பொழுது ஆலயத்தைச் சீரும் சிறப்புமாகப் புதுப்பித்து மீண்டும் 2 - 5 - 85-ம் நாள் குடமுழுக்கு விழா நடைபெற இருக்கிறது.

உடலுக்கும், உள்ளத்திற்கும் ஏற்படுகின்ற இளைப்பை ஆற்றுகின்ற தலமாக விளங்குகின்ற இந்த ஊர் ஆலயத்தில் மேவுகின்ற நித்தியகல்யாணியையும் கைலாச நாதரையும் அனைவரும் வழிபட்டு சகல நன்மைகளையும் பெற அந்த இரு தெய்வங்களின் பாதகமலங்களைப் பிரார்த்திக்கிறேன்.

நினைத்ததை நிறைவேற்றும் நித்யகல்யாணி

கவிஞர்
சிவல்புரி சிங்காரம்

நினைத்ததை எல்லாம் நடத்திவைத் திடுவாள்
நித்திய கல்யாணி! — அவள்
தினம்தினம் வரம்தரக் காத்திருக் கின்றாள்
தெரிசிக்கச் செல்வாய்நீ! (நினைத்ததை)

நகரத் தார்களின் கோவில்களில் — அந்த
நாயகி இருப்பது முதற்கோவில்!
நிகரற்ற ஈசர் கைலாசநாதர்
நேசித்து வாழும் எழிற்கோவில்! (நினைத்ததை)

இளையாற் றங்குடி அவள் வாழுமிடம்! — நல்ல
இன்பங்கள் அனைத்தும் சூழுமிடம்!
கலையாத வாழ்வு கிடைக்குமிடம்! — அது
காஞ்சி முனிவரைக் கவர்ந்தயிடம்! (நினைத்ததை)

மாலைகள் இல்லாக் கன்னியர்க்கு — அந்த
மாதங்கி திருமணம் நடத்திவைப்பாள்! — இன்னும்
வேலைகள் இல்லாக் காளையர்க்கு — அந்த
வேல்விழி வேலைகள் கிடைக்கச் செய்வாள் (நினைத்ததை)

இறைவியிடம் போய் நில்லுங்கள்! மனதில்
எதற்கினிக் கவலை தள்ளுங்கள்!
குறைகளை அவளிடம் சொல்லுங்கள்! — தினம்
கும்பிட்டு வாழ்வை வெல்லுங்கள்! (நினைத்ததை)

புதுமையான பழக்கம்

செஞ்சொற் செல்வர்
அ. ச. ஞானசம்பந்தன்

சங்க காலம் தொட்டே தமிழர்கள் இறை வழிபாட்டிலும் திருக்கோயில் கட்டுவதிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதைச் சங்கப் பாடல்கள் மூலம் அறியமுடிகிறது. சோழர், பாண்டியர் என்ற மன்னர்களால் ஆளப் பெற்ற பகுதிகளில் இருந்தவர்கள் சோணாட்டார், பாண்டி நாட்டார், தொண்டை நாட்டார் என்ற பிரிவினை இருந்ததையும் அறிய முடிகிறது. எனினும் இவர்களுள் நூற்றுக் கணக்கான சாதி வேறுபாடுகளும் இருந்ததாகத் தெரிகிறது.

இதனிடையில் மிகப் பெரும்பான்மையானவர்கள் சிவ வழிபாட்டை மேற் கொண்டும் கோயில்களின் வழி ஒன்பது கூட்டத்தாராகவும் வாழ்ந்து வருகின்றவர்கள் நகரத்தார் பெருமக்கள். ஒரு குறிப்பிட்ட கோயிலைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பங்காளிகளாகக் கருதி வாழும் வழக்கம், இந் நகரத்தார் பெருமக்களைத் தவிர வேறு யாரிடமும் காண இயலாது. என்றோ ஒரு காலத்தில் இவர்களிடம் புகுந்த இப் புதுமையான பழக்கம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வருவதும் வியப்பே! நாட்டில் அடித்த எந்தப் புயலாலும் இவர்கள் பழக்க வழக்க மரபுகளை மாற்ற முடியவில்லை!

அக்கோயில்களுள் ஒன்றான இளையாத்தக்குடிக் கோயில் பெருமான் குடமுழுக்கும் பெறுகிறான் என்பதறிந்து மகிழ்கின்றேன். என்றுமுள அப்பெருமான் திருவருளால் நகரத்தார் பெருமக்களும், நாடும், உலகும் நன்கு வாழும் என்னும் உறுதி உடையேன்.

உலகு புகழ் வணிகர்

மு. ராம. சேதுராமன் செட்டியார்
தக்கார்
கொன்னையூர் அருள்மிகு
முத்துமாரிஅம்மன் ஆலயம்

உலகத்தின் எண்ணற்ற நாடுகள் இருக்கின்றன. எல்லா நாடுகளிலுமே வாணிபம் நடக்கிறது. இது நடத்த வணிகர்கள் இருக்கிறார்கள். வாணிபம் என்றாலே அதற்கு அடிப்படை பொருளீட்டுவது தான். செல்வ வளம் பெருகினால் சிறப்பான வாழ்க்கை அமைகிறது. சிறந்த சூழ்நிலை அமைகிறது. நினைத்ததை நடத்துகின்ற ஆற்றல் உண்டாகிறது. சுருக்கமாகச் சொன்னால் சுகமான வாழ்க்கை அமைகிறது.

உலக வணிகர்கள் அனைவருக்கும் இது பொதுவான சூழ்நிலையாகும். ஆனால், வாணிபத்தையே தொழிலாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் மட்டும் இதிலிருந்து மாறுபட்டு வாழ்கிறார்கள். தாங்கள் தேடும் பொருளை தருமத்திற்கு செலவு செய்கிறார்கள். அதுவும் பக்தி வளர்வதற்காகவே செலவு செய்கிறார்கள்.

அந்தச் சமூகத்தார், எந்தச் சமூகத்தார் என்பது நாட்டினர் அனைவரும் அறிந்த ஒன்று; அவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், "திரைகடல் ஓடி திரவியம் தேடினாலும், உள் நாட்டிலேயே தொழில் செய்தாலும்" கோயில் களைக் கட்டுவதற்கும், சமீப காலமாக கல்லூரிகளையும், பள்ளிகளையும் அமைப்ப தற்கும் பெருவாரியாக செலவு செய்கிறார்கள்.

கோயில்கள் பாவத்தைப் போக்கி, புண்ணியத்தை உண்டாக்கும் அறநிலையங் களாகும். ஒருவன் எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும், பண்பில்லாதவனாக இருந்தால் என்ன பயன்? பண்பிற்கு அடிப்படை பக்தி. தெய்வத்தின் மீது நம்பிக்கை ஏற்படுகிற போது பாவபுண்ணியங்களைப் பற்றி சிந்திக்கத் தோன்றுகிறது. நல்லதையே செய்யத் தோன்றுகிறது.

எந்த சமூகத்திலும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் செய்த அளவிற்கு கோயில் திருப்பணிகள் செய்திருக்க மாட்டார்கள். புதிய கோயில்களை கட்டி திருப்பணிகள் செய்வதோடு பழைய கோயில்களை புதுப்பித்து குடமுழுக்கு விழா நடத்துவதிலும் ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். அந்த முறையில் மிகவும் சிறப்புடைய இளையாத்தக்குடி கோயில் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு விழா செய்யப்படுவது மிகவும் சிறப்புடையது, பொருத்தமுடையது.

நகரக் கோயில்களில் இன்னும் புதுபிக்கப் படாதவைகளும் புதுப்பிக்கப்பட்டு அவற்றிற்கு குடமுழுக்கு விழாக்கள் நடைபெற வேண்டும் என விரும்புகிறேன்.

பழனி திருத்தலத்தில் எங்கள் குடும்பத்தவர்கள் இராக்கால மடத்தை உருவாக்கி தருமத்தைச் செய்தவர்கள் இராக்காலம் என்றும், பகல்காலம் என்றும் பாராது எப்போதும் அருளும் பழனித் திருமுருகனை நகரத்தார் சமூகம் மேலும் மேலும் செழிக்க அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

*

இளையாத்தக்குடி கோவில் குடமுழுக்கு விழா வரலாறு

எம். எஸ். எஸ். எம். எம். முத்துராமன்
எஸ். எம் ஏ ஆர். என். ஏ ஆர். நாராயணன்
செயலாளர்கள்
குடமுழுக்கு விழாக்குழு

நகரத்தார்கள் திருப்பணிகள் செய்வதில் சோழமன்னர்களுக்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளார்கள் என்பது உலகம் போற்றும் உண்மையாகும்.

அத்தகைய பெருமையை உடைய நகரத்தார்களின் ஒன்பது திருக்கோவில்களில் முதன்மையும் பெருமையும், பழமையும் உடையது இளையாத்தக்குடிக் கோவிலாகும்.

பெரும் சிறப்புடைய அக்கோவில் குடமுழுக்குவிழாக் குழுவில் நாங்கள் இருவரும் செயலாளர்களாகப் பொறுப் பேற்றுப் பணி புரியும் வாய்ப்புக் கிடைத்தது, நித்தியகல்யாணி சமேத கைலாசநாதர் அருள் என்றே எண்ணுகிறோம்.

இளையாத்தக்குடிக் கோவில் குடமுழுக்கு விழாச் சிறப்புற நடைபெறத் துணை நின்றவர்களைப் பற்றிய எண்ணங்கள் எங்களுக்கு மிகவும் பசுமையாக நினைவிருக்கின்றன.

பெருமைமிக்கத் தலமான இக்கோயிலின் முதல் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் பிரமாதி ஆண்டு வைகாசித் திங்கள் 14-ஆம் நாள் (28-5- 1939) ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது.

பிறகு மருந்து சாத்திய அளவில் விளம்பி ஆண்டு ஆனித்திங்கள் 9 ம் நாள் (3-7-58) குடமுழுக்கு விழா நடந்திருக்கிறது.

இந்நிலையில் முன்னாள் அறங்காவலர் எஸ். எம். ஏ. ஆர். என். அருணாசலம் செட்டியார் அவர்களுக்கும், கோவில் அறங்காவலர்களான காரைக்குடியைச் சேர்ந்த (1) சி. வ. மெ. சித. நா. ராம. நா. கிருஷ்ணன் செட்டியார், (2) சா. லெ. நா. சாத்தப்ப செட்டியார், (3) எஸ். எம். ஏ. ஆர். என். ஏ. ஆர். நாராயணன் செட்டியார், (4) நெற்குப்பை எஸ். ராமநாதன் செட்டியார், (5) கானாடுகாத்தான் எஸ். ஏ. அண்ணாமலை செட்டியார், (6) ஒ. சிறுவயல் பி. எல். எஸ். ஆர். எம். சுப்பிரமணியன் செட்டியார், 7. தேவகோட்டை தி. அ. சு. ராம. சு. சுந்தரேசன் செட்டியார் ஆகிய ஏழு பேர்களுக்கும் இளையாத்தக்குடிக் கோவிலுக்கு மகாகும்பாபிஷேகம் நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே மீண்டும் நல்லமுறையில் திருப்பணி செய்து கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்ற பெருவிருப்பம் ஏற்பட்டது. அதனால் அவர்கள் M. N. S. T. சிதம்பரம் செட்டியார், M. S. S. முத்துராமன் செட்டியார் மற்றும் பல பெரியவர்களையும் இது குறித்து கலந்து பேசினார்கள். அதைத் தொடர்ந்து S. M. AR. N. அருணாசலம் செட்டியார் அவர்கள் தம் குமாரர் நாராயணனுடன் சென்னைக்குச் சென்று செட்டி நாட்டு அரசர் டாக்டர் ராஜா சர்.

முத்தையா செட்டியார் அவர்களை இது பற்றிக் கேட்டபோது அரசர் அவர்களும் மிகுந்த ஆர்வம் காட்டி, நம் கோவில் கும்பாபிஷேகத்தை மிக நல்ல முறையில் செய்வோமென சம்மதம் தெரிவித்தார்கள். பின்னர் இதில் ஈடுபட்டவர்கள் இளையாத்தக்குடி நகர விடுதியில் 15-4-82 ஆம் நாள் இளையாத்தக்குடிக் கோவில் நகரத்தார் கூட்டத்தைக் கூட்டினார்கள்.

அக்கூட்டத்தில் கோவில், விடுதி, அலுவலகம், சிப்பந்திகள் வீடுகள் எல்லாவற்றையும் நல்லமுறையில் மராமத்துப்பார்த்தும், கோவில் கோபுரங்களில் சுதை வேலை செய்து, வர்ணம் வைத்தும், மின்சாரத் தொடர்புகள் முழுவதையும் புதுப்பித்தும் சிறப்பான முறையில் குடமுழுக்குவிழாச் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. குடமுழுக்குவிழாவை முன்னிட்டு நம் கோவில் நகரத்தார்களிடம் புள்ளி ஒன்றுக்கு ரூ. 11/- விதம் புள்ளி வரி வசூல் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. நம் கோவில் புள்ளிகள் 4555 ஆகும். இளையாத்தக்குடிக் கோவிலைச் சேர்ந்த நகரத்தார்கள் ஏழு பிரிவு கொண்டவர்கள் அவை (1) ஒக்கூருடையார் புள்ளி - 948 (2) பட்டணசாமியார் புள்ளி - 1028 (3) கழனிவாசல்குடியார் புள்ளி - 1402 (4) பெருமருதாருடையார் புள்ளி - 719 (5) பேரசெந்தாருடையார் புள்ளி - 98 (6) கிங்கிணிக்கூருடையார் புள்ளி - 352 (7) சிறுசேற்றுடையார் புள்ளி - 8 மேற்கண்ட புள்ளிகள் 4555 பேரும் செட்டி நாட்டைச் சேர்ந்த 63 ஊர்களில் வசிக்கிறார்கள்.

அக்கூட்டத்திலேயே ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்கள் தலைமையில் குடமுழுக்குவிழாக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து புள்ளி வரி வசூல் செய்வதற்காக அறிக்கை ஒன்றை அச்சிட்டு, ஊர் ஊராகச் சென்று அந்தந்த ஊர்களில் உள்ள முக்கியஸ்தர்களிடம் கொடுத்து வசூல் செய்ய ஏற்பாடு செய்தோம்.

இதன்பின் இந்துசமய அறநிலைய ஆட்சித்துணை ஆணையரிடமிருந்து குடமுழுக்கு விழா நடத்த அனுமதி பெற்றோம்.

குடமுழுக்கு விழா நன்கொடை வசூல் செய்வதற்கு வருமான வரியிலிருந்து வரி விலக்குப் பெறுவதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றோம். அதற்கு மதிப்பீட்டை மதுரையிலிருக்கும் இஞ்சினியர் கிருஷ்ணன் அவர்கள் நல்லமுறையில் தயார் செய்து கொடுத்தார். தர்மாத்மா திரு வைத்தியசுப்பிரமணிய அய்யர் அவர்கள் இந்த அனுமதி கிடைப்பதற்குப் பேருதவியாக இருந்தார்கள். அவர்களும் அவர்களது புதல்வர் ஜெயராமன் அவர்களும் பலவகையிலும் பேருதவி புரிந்தார்கள்.

குடமுழுக்கு விழாவிற்கு நன்கொடை வசூல் செய்து நிதி திரட்டுவதற்காக குழு உறுப்பினர்களை ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் சென்னைக்கு வரச்செய்து உறுப்பினர்களுக்குத் தங்குமிடம், உணவு வசதிகளை தங்கள் சொந்தப் பொறுப்பில் செய்து கொடுத்து முதன் முதலில் ராஜாசர் அவர்களே மனமுவந்து ஒரு லட்ச ரூபாய் நன்கொடை கொடுத்ததோடு குழு உறுப்பினர்களைக் கூட்டிக்கொண்டு சென்னையிலுள்ள நம் கோவிலைச் சேர்ந்த திரு. A. M. M. அருணாசலம் செட்டியார், M. C. T. முத்தையா செட்டியார், S. A. P. அண்ணாமலை செட்டியார் முதலிய தலை வணிக பெருமக்களிடம் நேரில் சென்று அதிக அளவில் நிதி திரட்டிக் கொடுத்தார்கள். சென்னையில் திரு. M. A. சிதம்பரம் செட்டியார் அவர்களும் பெரிய அளவில் நிதி தந்து உதவினார்கள். காரைக்குடியிலிருந்து சென்னை சென்ற குழு உறுப்பினர்களோடு சென்னையில் திரு. எம். எஸ். மெய்யப்பன் அவர்களும், திரு. [illegible] ஆர். ராமசாமி அவர்களும், திரு எஸ். எம். ஏ ஆர். என். சுப்பையா செட்டியார் அவர்களும் நிதி வசூல் செய்ய உடன் வந்து உதவினார்கள்.

ஏனைய ஊர்களுக்கு அந்தந்த ஊர்களுக்கு தெரிந்தவர்களைச் சேர்த்துக்கொண்டு குழு உறுப்பினர்கள் காரைக்குடி. எஸ்: எல்: என்: சாத்தப்ப செட்டியார், கானாடு காத்தான் எஸ்: ஏ: அண்ணாமலை செட்டியார், எஸ்: ஏ. எஸ்: ஆர்: எம்: சந்திரமவுளி செட்டியார், ஓ: சிறுவயல் பி: எல். எஸ்: ஆர் எம். சுப்பிரமணியன் செட்டியார், நெற்குப்பை எஸ். ராமனாதன் செட்டியார், காரைக்குடி: அள. அ. நா. நாராயணன் செட்டியார், சிவ. நாராயணன், தேவகோட்டை எஸ். எல்: பழநியப்ப செட்டியார், எஸ்: டி: பி: எல். மாணிக்கம் செட்டியார் ஒய். எஸ்: ஒய். சுப்பிரமணியன் செட்டியார் ஆவினிப்பட்டி சுப்பிரமணியன் செட்டியார், ஆகியோருடன் பொருளாளர் எம். என். எஸ்: டி. சிதம்பரம் செட்டியார் அவர்களும் செயலாளர்களாகிய நாங்களிருவரும் சென்று பெருமளவில் நிதி வசூல் செய்தோம்:

மதுரைக்கு வசூலுக்கு சென்றபோது டாக்டர் முத்தையா அவர்களும், புதுவயலுக்குச் சென்றபோது மிட்லண்ட் ராமனாதன் செட்டியார் அவர்களும் உடன் வந்து நிதிபெற உதவியாக இருந்தார்கள்: சிவகாசியில் விளம்பரம் மூலம் நிதி வசூல் செய்ய உமா பேப்பர் மார்ட் S.P. ராமனாதன் அவர்கள் பெரிதும் உதவியாக இருந்து நிதி திரட்டித் தந்தார்கள். குழு அலுவலகமும் காரைக்குடி 23, வயிரவன் அம்பலம் தெருவிலிருக்கும் எஸ்: எம்: ஏ ஆர்: என்: அருணாசலம் செட்டியார் இல்லத்தில் வைக்கப்பெற்றுத் திருப்பணி வேலைகள் நடந்துவந்தன;

கண்டரமாணிக்கம் நாகலிங்க ஸ்தபதியைத் திருப்பணி வேலைக்கு நியமித்து நன்னாளில் தச்சு செய்தோம். அவரும், அவரது குழுவினரும் மிகச்சிறந்த முறையில் சுதைவேலை, வர்ணம் வைப்பது முதலியவற்றை செய்து தந்தார்கள்:

சென்னையைச்சேர்ந்த ஆர்எம்: வி: எலக்ட்ரிக்கல்ஸ் தேனப்ப செட்டியார் அவர்கள் மகன் முத்து அவர்களிடம் மின்சார தொடர்புகளைப் புதுப்பிக்கும் பணியை ஒப்படைத்தோம்:

சிப்பந்தி வீடுகள் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணியைச் செட்டிநாடு பாலிடெக்னிக் முதல்வர் முத்தையா செட்டியார் பொறுப்பில் ஒப்படைத்தோம். அவருக்கு உதவியாகப் பணிபுரியும் திரு முருகப்பன், திரு சீனிவாசன் ஆகியோரும் இப்பணியில் பங்குகொண்டார்கள்.

திருப்பணி வேலைகளும், பழுதுபார்க்கும் வேலைகளும் முறையாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வந்தன. ராஜாசர் அவர்களும் ஒவ்வொரு பணியிலும் மிக்க ஆர்வம்காட்டி எல்லோரையும் திருப்பணி வேலைகளைச் செவ்வனே செய்வதற்கு உற்சாகப்படுத்தினார்கள்:

இந்த நிலையில் எதிர்பாராதவிதமாக ராஜாசர் அவர்கள் இறைவனடி சேர்ந்ததால் குடமுழுக்கு விழாக் குழுவிற்கு மறு தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு குழு கூட்டத்தைக் கூட்டினோம். அதில் ராஜாசர் அவர்களுடைய புதல்வர் டாக்டர் எம். ஏ. எம். ராமசாமி செட்டியார் அவர்களை தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுத்தார்கள்.

தம் தந்தையாரைப்போல டாக்டர் எம். ஏ. எம்: அவர்களும் மிகுந்த ஆர்வம் காட்டி, திருப்பணி சிறப்பாக நடைபெறுவதற்கு விளம்பரம் மூலமாகப் பல பெரிய கம்பெனிகளிடமிருந்து நிதிபெற, தானே நேரடியாக கடிதங்கள்எழுதி பெருமளவில் நிதி திரட்டிக் கொடுத்தார்கள்: இதற்குச் செட்டிநாடு சிமின்டு நிர்வாக இயக்குனர்கள் திரு எல். சபாரெத்தினம் அவர்களும் திரு தேனப்பன் அவர்களும், விற்பனை பிரிவுப் பொறுப்பாளர் திரு ராமாராவ் அவர்களும் பேருதவியாக இருந்தார்கள்

நாங்களிருவரும் திருப்பணித் தொடர்பான எல்லா வேலைகளையும் சேர்ந்து கவனித்தாலும் எங்களுக்குள் முக்கியமான இன்னென்ன பணிகளை யார்யார் செய்வது என்று திட்டமிட்டுக் கொண்டோம்.

அதில் நிதி வசூல், வரவு செலவுக் கணக்கு, கடிதப்போக்குவரத்து ஆகிய நடைமுறை நிர்வாகங்களை நாராயணனாகிய நான் ஏற்றுக்கொண்டேன். எனக்கு இதற்கு என் சிறிய தகப்பனார் சுப்பையா செட்டியார் அவர்களும், சிவ. நாராயணனும், நா. லெ. வள்ளியப்பனும் என் சகோதரர் வெங்கிடாசலமும் நெற்குப்பை S. RM. நாகப்பன் அவர்களும், எஸ். சீனிவாசனும், ஏ. முத்துமுனிசாமியும் தக்க துணையாக இருந்துவந்தார்கள்.

ஸ்தபதி தொடர்பான வேலைகள், மராமத்து தொடர்பான வேலைகள் ஆகிய நடைமுறை நிர்வாகங்களை முத்துராமனாகிய நான் பார்த்துக்கொண்டேன். எனக்கு திரு. தேனப்பசெட்டியார் அவர்களும், கதிரேசன் செட்டியாரும், ஏகப்பன் அவர்களும் தக்கதுணையாக இருந்துவந்தார்கள். குழுப்பொருளாளர் திரு எம்.என்.எஸ்டி. சிதம்பரம் செட்டியார் அவர்கள் எல்லாப் பணிகளுக்கும் தக்கஉதவியாக இருந்து வந்தார்கள்.

இந்தப்பெரும் பணியில் வேலைக்கு அமர்த்தப்பட்ட காரைக்குடி திரு ராம பழநியப்பன், கல்லல் மாணிக்கம், மானகிரி எம். கே. அழகப்பன், ஆத்தங்குடி சொ. முத்துசெட்டியார், காரைக்குடி வீரப்பன், லெட்சுமணன் முதலியோரும், கோவில் பொறுப்பாளர்கள் வி. வெங்கடசுப்பிரமணியமும், மற்றும் சிப்பந்திகளும் எங்களுக்கு ஒத்துழைப்புத்தந்து தங்கள் பணிகளை சிறப்பாகச் செய்ததோடு, குடமுழுக்கு விழாவிற்கும் உதவியாக இருந்தார்கள்.

நம் கோவிலைச் சேர்ந்தவர்கள் அயலூர்களிலும், வெளிநாடுகளிலும் பணி புரிபவர்களிடம் நிதி வசூல்செய்ய வேண்டுகோள் ஒன்று அச்சிட்டோம். அதை அனுப்புவதற்கு ஊர்ஊராகச்சென்று முகவரிகளை, செட்டிநாடு பாலிடெக்னிக்கில் பணிபுரியும் திரு எஸ். வி. சீனிவாசன் அவர்களும், அவர் உதவியாளர்களும் பெற்றுத் தந்தது மிகவும் உதவியாக இருந்தது.

திருப்பணி அலுவல்கள் தொடர்பாக அவ்வப்பொழுது குழுவில் கூட்டங்கள் குழு அலுவலகமான எஸ். எம். ஏஆர். என். அருணசலம் செட்டியார் இல்லத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்தபோதே குழுவினரைக்கூட்டி குடமுழுக்கு விழாவை 2-5-85ல் நடத்துவதென்று தீர்மானித்து, குடமுழுக்கு விழா வேலைகள் யார் யார் எப்படி பிரித்துக்கொண்டு பார்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதையும் கோவில் பிரிவு வாரியாக இல்லாமல் ஊர்வாரியாகப் பார்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதன் விவரம் வருமாறு ;—

1. யாகசாலை மருந்துசாத்துதல், குடமுழுக்கு விழா, நகர விருந்து (ஆண்கள் விசாரணை) :—	தேவகோட்டை, காரைக்குடி, ஆறுவயல், புதுவயல், ஒ. சிறுவயல், நகரத்தார்கள்.
2. நகரவிருந்து (பெண்கள் விசாரணை):-	கல்லல், சொக்கநாதபுரம், பாகனேரி, நடராஜபுரம், பனங்குடி, பட்டமங்கலம், வெற்றியூர், அ. சிறுவயல், மதகுபட்டி, கீழப்பூங்குடி, சக்கந்தி, நாட்டரசன்

	கோட்டை, ஒக்கூர், காளையார் மங்கலம், நா. அளகாபுரி, கண்டரமாணிக்கம் மற்றும் கருங்குளம்.
3. மகாபிஷேகம், சுவாமி புறப்பாடு, தண்ணீர் வசதி	ஆவினிப்பட்டி, விருமதி. ராங்கியம், கீழச் சிவல்பட்டி, மிதிலைப்பட்டி, குருவிக் கொண்டான்பட்டி, குளிபிறை, நச்சாந்து பட்டி மற்றும் சிறுகூடல்பட்டி,
4. பெரிய உக்ராணம் :—	அரியக்குடி, கோ, அழகாபுரி, கண்டனூர், கடியாபட்டி, ராயவரம், அரிமளம், தேனி பட்டி, கல்லுப்பட்டி, மற்றும் நாச்சியாபுரம்
5. பிராமண போஜனம் :—	ஆத்தங்குடி, ஆ. முத்துப்பட்டிணம், பல வான்குடி, மற்றும் கோனபட்டு.
6. தண்ணீர்பந்தல் & நாட்டார் விருந்து :—	கண்டவராயன்பட்டி, ஆ. தெக்கூர், நெற் குப்பை, பொன்னமராவதி, வலையபட்டி, பொன்புதுப்பட்டி, பூலாங்குறிச்சி, வேந்தன் பட்டி, மேலச்சிவல்புரி, வேகுப்பட்டி, மகிபாலன்பட்டி, கொப்பனபட்டி, உலகம் பட்டி, பனையபட்டி மற்றும் விராச்சிலை.
7. வரவேற்பு, உபசரித்தல் :—	கோட்டையூர், பள்ளத்தூர், கானாடுகாத் தான், மற்றும் நேமத்தான்பட்டி.

குடமுழுக்கு விழா தொடக்க பூஜை காரைக்குடி அள. அ. நா. நாராயணன் செட்டியார் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு யாகசாலை பூஜை குழுத் தலைவர் டாக்டர் எம். ஏ. எம். அவர்கள் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது.

யாகசாலைக்குக் கோவிலின் முன்பாகப் மிகப்பிரம்மாண்டமான அலங்காரக் கொட்டகை அமைக்கப்பட்டு, புண்ணியகும்பங்கள் வைக்கப்பெற்ற, சிவாச்சாரியார் களால் மூன்று நாட்களும் மந்திரங்கள் சொல்லப்பட்டு, யாகசாலை பூஜைகள் முறைப் படி மிகச் சிறப்பாக நடைபெற்றன.

தேவாரம் இசைப்பதற்கு, தக்க ஓதுவார்கள் வந்து மூன்று நாட்களும் பாடி னார்கள். இதற்குப் பாகனேரி முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

இயல் இசை நாடக கலாநிகழ்ச்சிகள் மூன்று நாட்களும் தொடர்ந்து நடை பெற ஏற்பாடு செய்திருந்தோம். வாரியார் சுவாமிகள், சீர்காழி கோவிந்தராஜன், வீரமணி குழுவினர், வாரிபார்தாசன், செல்வி சிகப்பி, ஹெரான் ராமசாமி முதலிய பல கலைஞர்கள் பங்கேற்றார்கள் முத்துப்பேட்டை P. A. சண்முகசுந்தரத்துடன் திருவாரூர் T. N. தக்ஷிணாமூர்த்தி சகோதரர்களும் நாதஸ்வரம் வாசித்து சிறப்பித் தார்கள். கலைநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குக் கண்களையும், கருத்தையும் கவரும் வண்ணம் கலையரங்கம் உருவாக்கப் பட்டிருந்தது. அந்த அரங்கத்தில் பட்டிமன்றங் களும், கவி அரங்கங்களும் சொற்பொழிவுளும் நடைபெற்றன.

நகர விருந்துக்கும், நாட்டார் விருந்துக்கும், பிராமணன் போஜனத்துக்கும் தனித்தனியே பிரம்மாண்டமான கொட்டகைகள் அமைக்கப்பட்டன; மூன்று நாட்களும் எல்லா இடங்களிலும் மின் விளக்கு அலங்காரங்கள் போடப்பட்டு இளையாத்தக்குடி மைசூர் பிருந்தாவனம்போல் காட்சியளித்தது. கரூர் செட்டிநாடு சிமிண்டு தேனப்ப செட்டியார் அவர்களும் மின்சாரம் தடைபட்டால் மின் விளக்கு எரிவதற்கு பெரிய ஜெனரேட்டர்களை கரூரிலிருந்து கொண்டுவரச் செய்ததோடு, கரூரிலிருந்து மின் விளக்குகள், இளையாத்தக்குடி பூராவும் போடுவதற்கு ஆட்களை அனுப்பித் தந்தார்கள். இது தவிர குருவிக்கொண்டான்பட்டியைச் சேர்ந்த சபரி சவுண்டு சர்விஸ் சுப. கருப்பையா செட்டியார் அவர்களும், தேவகோட்டை R. M. S. எலக்ட்ரிக்கல்ஸ், மேச்சிவல்பட்டி R. கிருஷ்ணமூர்த்தியும் மின் விளக்கு அலங்காரம் செய்து தந்தார்கள். குழுத்தலைவரின் ஆணையின்படி கரூர் செட்டிநாடு சிமிண்டி விருந்து ராமனுதன் தலைமையில் 10 நபர்கள் பத்து நாட்களுக்கு முன்னரே வந்திருந்து, திருப்பணி அலுவல்களை மேல்பார்த்து துரிதமாக முடிக்கச் செய்தார்கள்.

குறிப்பிட்ட நன்னாளில் குடமுழுக்குவிழா 2-5-85ல் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் முன்னிலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு பங்களூரிலிருந்து அருள்திரு திருச்சி சுவாமிகளும், கோவிலூர் அருள்திரு இராமனுதேசிக ஸ்வாமிகளும், தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், அறநிலையத்துறை ஆணையர் ஆளுடையாபிள்ளையும், மாவட்ட ஆட்சியாளர் நரேஷ் குப்தாவும் வந்து கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

மாவட்ட ஆட்சியாளர் நரேஷ்குப்தா அவர்கள் இந்த குடமுழுக்குவிழாச் சிறப்பாக நடப்பதற்கு, 10 நாட்களுக்கு முன்னதாகவே பல்துறை அதிகாரிகளையும் அழைத்துக் கூட்டம் நடத்தி, பாதுகாப்பு, சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, குடிதண்ணீர் வசதி முதலிய ஏற்பாடுகளை நன்முறையில் செய்தார்கள். அதிகாரிகளும் மிக நல்ல முறையில் ஒத்துழைப்புத் தந்தார்கள்.

போக்குவரத்துக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக்கழகம் குடமுழுக்கு விழாவிற்கு முதல் நாளிலிருந்து, சிறப்புப் பேருந்துகளை முக்கியமான ஒவ்வொரு இடத்திலிருந்தும் தொடர்ந்து அனுப்பி உதவியது. அது பொதுமக்கள் வந்து விழாவில் கலந்துகொள்வதற்கு பெரிதும் உதவியாக இருந்தது.

குடிதண்ணீர் வசதிக்கு, காரைக்குடி முனிசிபாலிட்டி தண்ணீர் டாங்குகளை தந்ததோடு தண்ணீர்டாங்கு லாரியும் அனுப்பிப் பேருதவி செய்தது.

விழா நடை பெற்ற மூன்று நாட்களும் மின்சாரம் தடைபடாமலிருக்குமாறு மின்சார வாரியத்தினர் தக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

காவல்துறையினர் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறாமல் மிக விழிப்போடு தங்கள் பணியைச் செய்தார்கள்.

சுகாதாரத்துறையினர் தங்கள் பணியினை செவ்வனே செய்தார்கள்.

கோவிலுக்குத் தண்ணீர் தட்டுப்பாடின்றி கிடைக்க ஆள்கிணறு ஒன்று குடமுழுக்குவிழாக் குழுவிலிருந்து அமைக்கப்பட்டு அதைக் குழுத்தலைவர் டாக்டர் எம். ஏ. எம். அவர்கள் திறந்துவைத்தார்கள்: அதிலிருந்து தண்ணீர் அதிக அளவில் கிடைக்கப்பெற்று குடமுழுக்கு விழாவிற்கு உதவியது. இதற்கு முன்னாள் அறங்காவலர் எஸ். எம். ஏ. ஆர். என். அருணாசலம் செட்டியார் அவர்களும், நடப்பு

அறங்காவலர் எஸ். எல். என். சாத்தப்ப செட்டியார் அவர்களும் உறுதுணையாக இருந்து இந்தப் பணி செவ்வனே நடைபெறும்படி பார்த்துக்கொண்டார்கள்.

கருங்குளம் திரு ரெங்கனாதன் செட்டியார் அவர்களும் இந்த ஆழ் கிணற்றை அமைப்பதற்கும், குடமுழுக்கு விழா நல்ல முறையில் நடப்பதற்கும் தக்க துணையாக இருந்தார்கள்.

குடமுழுக்குவிழாக் குழுவினர் அதைச் சிறப்பிக்கும் பொருட்டு மலர் ஒன்று வெளியிடுவது என்று தொடக்கத்திலேயே முடிவு செய்தார்கள். அதற்கு என்று ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்கு குழுத்தலைவர் டாக்டர் எம். ஏ. எம். அவர்கள் தலைவராகவும், திரு எம். எஸ். மெய்யப்பன் அவர்கள் செயலாளராகவும், திரு புலவர் நாகசண்முகம் அவர்கள் ஆசிரியராகவும், திரு ஏஆர். ராமசாமி அவர்கள், எம். என். எஸ். டி. சிதம்பரம் செட்டியார் அவர்கள், திரு எம். என். எஸ். முத்துராமன் அவர்கள், திரு எஸ். எம். ஏஆர். நாராயணன் அவர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

மலரும் தெய்வீகப் பெருமக்கள், அமைச்சர்கள், பல்துறைப் பெருமக்கள், அறிஞர்கள், கவிஞர்கள், மற்றும் நம் கோவில் நகரத்தார் பெருமக்கள் ஆகியோரின் எழுத்தோவியங்களையும் குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகள் கொண்ட புகைப்படங்களையும் தாங்கி நல்ல முறையில் வெளிவருகிறது. இந்த மலர் மிகவும் சிறப்பாக வெளிவருவதற்கு மலர்க்குழுச் செயலாளர் எம். எஸ். மெய்யப்பன் அவர்களும், ஆசிரியர் புலவர் நாகசண்முகம் அவர்களும் சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

குடமுழுக்குவிழா நிறைவேறிய பிறகு அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் கலையரங்கத்தில் குடமுழுக்குவிழா கூட்டத்தினருக்குப் பாராட்டுக் கூட்டம் நடந்தது. அதில் அமைச்சர் அவர்கள் குழுத்தலைவர் டாக்டர் எம். ஏ. எம். அவர்களுக்கு பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். டாக்டர் எம். ஏ. எம். அவர்கள் குழு உறுப்பினர்களுக்கும், அறங்காவலர்களுக்கும் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

அந்த விழாவில் கோவிலுக்கு நிரந்தரமாக வைப்புநிதி வைப்பது என்று தீர்மானிக்கப் பட்டது. ரூ. 1001/- வைப்பு நிதிக்காகக் குழுத்தலைவரிடம் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்துத் துவக்கி வைத்தார்கள். அதைத்தொடர்ந்து தலைவரும் மற்றும் சிலரும் புள்ளி ஒன்றுக்கு ரூ. 500/- வீதம் கொடுத்துள்ளார்கள். நம் கோவில் புள்ளிகள் 4555 இருப்பதால் இதில் அந்தத்தொகையை கொடுக்கக்கூடிய புள்ளிகள் மனமுவந்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதனால் வைப்பு நிதி பெருகிக் கோவில் காரியங்கள் மேலும் சீரோடும் சிறப்போடும் நடக்க பெரும் உதவியாக இருக்கும்.

காஞ்சிகாமகோடி 55வது பீடம் இளையாத்தக்குடியில் சமாதி ஆகி அதில் இளையாத்தக்குடி கோவில் நகரத்தார் பெருமக்களால் கோவில் கட்டப்பட்டுப் பூஜை நடந்து வருகிறது. இந்தக் கோவிலும் குடமுழுக்கு நடந்து நாளாகிவிட்டபடியால் நம் இளையாத்தக்குடிப் பெரியகோவில் கும்பாபிஷேகம் செய்ததோடு இதற்கும் பழுது பார்த்து, சுதைவேலை, பெயிண்டு வேலைகள்செய்து மின்சாரதீபம் போடப்பட்டு அதிஷ்டானம் என்று சொல்லப்படுகிற இந்தக் கோவிலுக்கு மிகச்சிறப்பான முறையில் குடமுழுக்கு விழாச் செய்யப்பட்டது.

கிங்கிணிக்கூர் பிள்ளையார் கோவிலுக்கும் ஷி பிரிவைச் சேர்ந்த கொல்லங்குடி அழகாபுரி திரு ஒ. டி. எஸ். தேனப்ப செட்டியார் அவர்கள் பொருளுதவி செய்து

நம்குழுவின் மேற்பார்வையில் பழுதுபார்த்து, வர்ணம்வைத்து நல்லமுறையில் குடமுழுக்குவிழா இதே தேதியில் செய்யப்பட்டது.

ஒக்கூர்பிரிவு நகரத்தார்கள் அவர்களுடைய ஒக்கூர் பிள்ளையார் கோவிலுக்கு அவர்கள் சொந்தப்பொறுப்பில் வசூல்செய்து கும்பாபிஷேகம் இதே தேதியில் சிறப்பாக நடத்தினார்கள்.

இது தவிர பெரியகோவிலுக்குள்ளே பெருமருதூர் பிள்ளையார், பேரசெந்தூர் பிள்ளையார், சிறுசேற்றுடையார் பிள்ளையார் இருப்பதால் அவைகளுக்கு குடமுழுக்கு விழா 2-5-85ல் நடத்தப்பட்டுவிட்டன. அன்று பஞ்சமூர்த்திகளும் வெள்ளிவாகனங்கள் கண்ணைக்கவரும் வண்ணமலர் அலங்காரங்களோடும் எண்ணற்ற வண்ணவிளக்குகளோடும் நாதஸ்வர இசைமுழங்க கரகஆட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடந்து உலாவந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இளையாத்தக்குடியைப் பொறுத்தவரையில் இங்கு கும்பாபிஷேகம் ஆகவேண்டியது பட்டணசாமி பிரிவு நகரத்தார் சிவன்கோவிலும், கழனிவாசல்குடிப் பிரிவு பெருமாள் கோவிலும்தான். அதையும் விரைவில் நடத்த ஏற்பாடு செய்வார்கள் என எண்ணுகிறோம்.


போட்டோக்களை காரைக்குடி சுந்தரம் ஸ்டுடியோ மீனாட்சிசுந்தரமும் அவரது குழுவினரும் வந்து நல்லமுறையில் எடுத்துத் தந்தார்கள். இதேபோல வீடியோவும் மதுரை பிஎல். ஆர்எம். பழநியப்ப செட்டியார் மகன் செந்தில் வந்து சிறந்த முறையில் எடுத்துக்கொடுத்தார். மதுரை பிஎல். ஆர்எம். பழநியப்ப செட்டியாரும் குடமுழுக்குவிழாச் சிறப்பாக நடைபெற பலவகையிலும் உதவி புரிந்தார்கள்.

திருப்பணி சிறப்பாக நடைபெறவும், குடமுழுக்குவிழா அனைவரும் போற்றும் வண்ணம் நடைபெறவும் துணைநின்ற மேற்கண்ட பெருமக்கள் அனைவருக்கும், குழு உறுப்பினர்களுக்கும், மலரைச் சிறப்பாக உருவாக்கிதந்த மலர்க்குழுவினருக்கும், விளம்பரம் தந்து உதவிய பெருமக்களுக்கும், நிதி உதவி செய்த நம் கோவிலைச் சேர்ந்த நகரத்தார் பெருமக்களுக்கும் இந்தப் புண்ணிய முயற்சியில் உற்ற இடத்தில் எல்லாம் உதவிய அத்தனை பேருக்கும் குழுவின் சார்பாகவும் எங்கள் சார்பாகவும் எங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


பல்வேறு பகுதிகளிலிருந்தும் நம் நகரத்தார் பெருமக்களும், மற்றவர்களும் ஆண்களும் பெண்களுமாக ஆயிரக்கணக்கானபேர் மூன்று நாட்களும் வந்து பல நிகழ்ச்சிகளையும் கண்டுமகிழ்ந்து யாகசாலையினைப்பார்த்து பரவசமடைந்து, குடமுழுக்கு விழாவினை, அந்தக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு நித்தியகல்யாணி சமேத கைலாசநாதர் அருளைப் பெற்றார்கள். குடமுழுக்குவிழா நடைபெற்ற நாற்பத்தெட்டாம் நாள் மண்டலாபிஷேகம் சிவாச்சாரியார்கள் வேதம்ஓதப் பெருவாரியான மக்கள் திரண்டிருக்க மிகவும் சீரோடும் சிறப்போடு நடைபெற்று—அன்று போற்றத் தக்கமுறையில் முக்கனிகளுடன் நகர விருந்து நடைபெற்றது. தொடர்ந்து நம் நகரப் பெருமக்களுக்கும் நாட்டுமக்கள் அனைவருக்கும் நித்தியகல்யாணி உடனுறை கைலாசநாதர் குறைவற்ற வாழ்வினையும், நிறைந்த செல்வத்தினையும், எல்லா நலன்களையும் அருளவேண்டுமென்று மனம்கனிந்து பிரார்த்திக்கிறோம்.



இளையாத்தக்குடிக்
கோயில் சிறக்க
இணை நின்று
பணிபுரியும்
இணையற்ற
அறங்காவலர்கள்.




தி. அ. சு. ராம. சு.
சுந்தரேசன் செட்டியார்
டிரஸ்டு போர்டு சேர்மன்
பரம்பரை அறங்காவலர், தேவகோட்டை



PL. S. RM. சுப்பிரமணியன் செட்டியார்
பரம்பரை அறங்காவலர்
ஓ. சிறுவயல்



சிவ. மெ சித. நா. ராம. நா
கிருஷ்ணன் செட்டியார்
பரம்பரை அறங்காவலர் காரைக்குடி




எஸ். ஏ. அண்ணுமலை செட்டியார்
பரம்பரை அறங்காவலர்
கானுடுகாத்தான்



எஸ். எல். என், சாத்தப்ப செட்டியார்
நியமன அறங்காவலர்
காரைக்குடி



சி.மு.அரு.நா,அரு.
நாராயணன் செட்டியார்
நியமன அறங்காவலர் காரைக்குடி



S. ராமநாதன் செட்டியார்
நியமன அறங்காவலர்
நெற்குப்பை

தவமுனிவர் போற்றிடும் தலத்தின் வரலாறு

புலவர் நாகசண்முகம்
ஆசிரியர்
மலர்க்குழு

உலக வாணிபத்தின் தலைவாயிலாகப் பூம்புகார்ப் பட்டினம் திகழ்ந்தது. அப் பட்டினத்தின் புகழ் வாயிலாக நம் மரபினர் திகழ்ந்தார்கள்.

கொடுப்பது குறைபடாது, எடுப்பது நிறைபடாது, துலாக்கோல் போல் நின்று நம் முன்னோர்கள் வாணிபம் செய்து வரலாறு படைத்தார்கள். அத்தகைய குலத்தில் கண்ணகி தோன்றி, கற்புக்கு இலக்கணம் வகுத்தாள். முத்திரை பதித்தாள். மதுரையை எரித்தாள்.

காலப் போக்கில் சோழ மண்டலத்தை விட்டு வெளியேறும் நிலையை நம் முன்னோர்கள் அடைந்தார்கள்.

நகரத்தார் பெருமக்கள் சோழ மண்டலத்தில் இருந்த காலத்திலேயே தில்லையம்பதியில் வாழ்ந்த அகோர சிவாச்சாரியாரின் அன்பிற்கு இலக்கானார்கள். என்றும் தெய்வபக்தியைத் தம் செல்வமாகக் கொண்ட புகார் வணிகர்களிடம் அகோர சிவாச்சாரியார் நல்லன்புகொண்டு நல்லாசி வழங்கியதில் வியப்பில்லை அல்லவா?

சோழமண்டலத்தை விட்டுப் புறப்பட்ட நம் முன்னோர்கள் திசையறியாக் கப்பல்போலத் தவித்தார்கள். அப்போது கலன்கரை விளக்குப்போல அவர்களுக்கு அகோர சிவாச்சாரியார் நினைவு வந்தது.

அனைவரும் தில்லையம்பலம் வந்து சிவாச்சாரியாரை வணங்கினார்கள். தங்கள் நிலையைக் கூறினார்கள்; "நாங்கள் நிலையாகத் தங்கிவாழ ஓர் இடம் கூறுங்கள்" என்று வேண்டினார்கள்.

அகோர சிவாச்சாரியார் சிந்தித்துப் பார்த்தார்—நகரத்தார் பெருமக்கள் நாடோடிகள் அல்லர். தம் வாணிபச் சிறப்பால் புகார் நகருக்கே பெருமை தேடித் தந்தவர்கள். அத்தகைய உயர்குல மக்களை மிகச்சிறந்த இடத்தில்தான் வாழவைக்க வேண்டும் என்று அந்த மகான் கருதினார்.

அப்போது அவருக்கு இளையாற்றங்குடி நினைவிற்கு வந்தது. இத்திருத்தலத்திற்கு வந்து சுபத்திரர் என்ற அந்தணரும் குரஙல் துன்பத்திற்கு ஆளான தேவர்களும் கன்னுவமுனிவரும் தங்கள் இளைப்பைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பாவம் இந்த வணிகர்களும் இளைத்தும் களைத்தும் தானே வந்திருக்கிறார்கள்? தங்கள் பக்தியாலும் பணிவாலும் அருட்செயல்களாலும் பண்பாலும் அன்பாலும் உயர்ந்த இவர்களை இளையாற்றங்குடியில் குடிபுகுமாறு செய்வதே மிகவும் பொருத்தமுடையது என்று அந்த மகான் நினைத்தார்.

தம் கருத்தை வணிகப் பெருமக்களிடம் கூறினார். அதுகேட்டு அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். ஐயா நாங்கள் "அங்கு சென்றுவாழ விரும்புகிறோம். அதற்கு நீங்கள்தான் உதவி புரிந்தருள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவர் கூறியதைக் கேட்ட மகான் மிகவும் மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அடைந்தார். "அன்புமிக்க வணிகப் பெருமக்களே இளையாற்றங்குடி பாண்டிநாட்டில்

உள்ளது. பாண்டிநாட்டை ஆளும் அரசன் மிகச் சிறந்தவன். அவனுடைய குரு ஈசான சிவாச்சாரியார் என்ற ஞானகுரு. அவர் எனக்கு மிக நெருங்கிய நண்பர். எனவே உங்கள் எண்ணம் முழுமையாக நிறைவேறும்'' என்று அவர் கூறினார்.

வணிகர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். தங்கள் களைப்பை மறந்து குருவைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு பாண்டிநாட்டை அடைந்தார்கள். அதன் தலைநகரான மதுரையம்பதியை அடைந்து ஈசான சிவாச்சாரியார் மடத்தில் தம் குருவோடு தங்கினார்கள். ஈசான சிவாச்சாரியார் அகோர சிவாச்சாரியாரையும் அவருடன் வந்த வணிகர்களையும் அன்புடன் வரவேற்று உபசரித்தார்.

ஈசான சிவாச்சாரியாரிடம் அகோர சிவாச்சாரியார் தாம் வந்த பணிபற்றியும் புகார் வணிகர் பெருமக்களை இளசைப்பதியில் வாழவைக்க விரும்புவதாகவும் கூறினார். அதுகேட்டு ஈசான சிவாச்சாரியார் மகிழ்ந்தார்.

மன்னனிடம் அகோர சிவாச்சாரியாரை அழைத்துக்கொண்டு சென்றார். இரு குருமார்களையும் கண்ட மன்னன் பெரிதும் மகிழ்ந்தான். பின் இளசைப்பதியின் புகார் வணிகர்கள் தங்க முழுமனதுடன் ஒப்புதல் தெரிவித்தான். ''குருமார்களே! என் முன்னோரான நெடுஞ்செழிய மாமன்னர் எதிர்பாராது அளித்த தீர்ப்பால் புகார் நகர வணிகர் குலத்தெய்வமான கண்ணகித் தாய்க்குப் பெரும் கொடுமை நேர்ந்துவிட்டது. அதற்குப் பரிகாரம் தேடும் ஒரு நல்ல வாய்ப்பு உங்களால் ஏற்பட்டுள்ளது. அக்குலத்து வணிகர்களுக்கு உதவும் பெரும்பேற்றை நான் பெற்றுள்ளேன். பெரும் குருமார்களான உங்கள் இருவரோடும் நானும் இளசைப்பதிக்கு வந்து வணிகர்குலப் பெருமக்களைக் குடியமர்த்தி வருகிறேன்'' என்று பாண்டிய மன்னன் கூறினான்.

அதுபோலவே அகோர சிவாச்சாரியார், ஈசான சிவாச்சாரியார், பாண்டிய மன்னன், புகார் நகர வணிகர்கள் எல்லோரும் இளசைப்பதி வந்து சேர்ந்தார்கள்.

அப்பொழுது அங்கு திருவிழா பெருவிழாவாக நடந்து கொண்டிருந்தது. அது கண்ட அகோர சிவாச்சாரியார் ''மிக நன்னிமித்தம் வணிகர்களே! உங்கள் வாழ்வும் வளமும் இனிச் சிறக்கும். வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தோடு கூடிய பௌர்ணமியில் நடக்கும் உற்சவத்தில் கைலாசநாதரின் தரிசனத்தைப் பெற்றோம். இந்த இளசைப்பதி தலத்தாலும், இங்குள்ள மூர்த்தியாலும், தீர்த்தத்தாலும் புகழ்பெற்றது. மூன்று பெருமைகளும் ஓர் இடத்திற்குக் கிடைப்பது மிகவும் அரிது. அத்தகைய சிறந்த பதியில் நீங்கள் குடியேறுகிறீர்கள் என்று கூறியருளினார்.

தேவர்களின் இளைப்பையெல்லாம் போக்கிய கைலாசநாதரின் தலத்தை அடைந்ததும் தங்கள் இளைப்பும் களைப்பும் இனி என்ன செய்யப் போகிறோமோ என்ற கவலையும் அடிக்காற்றில் பஞ்சைப் பறந்ததை வணிகர்கள் உணர்ந்தார்கள். மகிழ்ந்தார்கள். பின் அன்று அதிகாலையிலேயே அவ்வூர்ப் புண்ணிய தீர்த்தத்தில் அனைவரும் நீராடினார்கள். பின் இரு சிவாச்சாரியர்களும் மன்னனும் உடன்வர ஆலயம்சென்று கலிகள் அனைத்தையும் உடன்நீக்கும் கைலாசநாதரையும் நித்தம் மங்கலமே நிகழ உதவும் நித்தியகல்யாணித் தாயையும் பிறதெய்வங்களையும் வணங்கி மகிழ்ந்தார்கள். பரவசமடைந்தார்கள்.

பின் அகோர சிவாச்சாரியாரைப் புகார் வணிகர்கள் தண்டனிட்டு வணங்கினார்கள்.

அகோர சிவாச்சாரியார் வணிகர்களை அருள்நோக்கத்தோடு பார்த்தார். ''வணிகர் குலப் பெருமக்களே! இன்று முதல் உங்கள் குலம் தழைத்து ஓங்கும்.

உங்கள் வாணிபம் உலகம் எங்கும் சிறந்து ஓங்கும். நான் தில்லையம்பலத்தில் கூத்தாடும் நடராஜப் பெருமானை வணங்கிவாழ விரும்புகிறேன். எனவே நீங்கள் ஈசான சிவாச்சாரியாரை உங்கள் குருவாக ஏற்று இப்பதியில் வாழுங்கள்'' என்று கூறியருளினார்.

வணிகர்கள் பாண்டிய மன்னனின் துணைகொண்டு தங்கள் இல்லங்களை அமைத்துக் கொண்டு ஈசான சிவாச்சாரியாருக்கு ஓர் இடத்தில் மடம் அமைத்துக்கொடுத்து வாழ்ந்து வந்தார்கள்.

அப்படி வாழ்ந்த நகரத்தார்கள் பின்னர் 1. இளையாத்தக்குடி 2. மாத்தூர் 3. வைரவன்பட்டி 4. நேமம் 5. இலுப்பைக்குடி 6. சூரைக்குடி 7. வேலங்குடி என்று ஏழு பிரிவினராக வாழ்ந்தார்கள். இப்படி வாழ்ந்தவர்கள் காலப்போக்கில் இளையாத்தங்குடிக்கு அண்மையிலோ அல்லது சற்று தொலைவிலோ தங்களுக்கென்று தனித்தனியே கோயில் அமைத்துக்கொண்டு சென்றார்கள்.

இளையாத்தாக்குடிக் கோயிலில் முன்பு எட்டு உட்பிரிவினர் இருந்தார்கள். 1. ஒக்கூருடையார் 2. பட்டணசாமியார் 3. பெருமருதூருடையார் 4. கழனிவாசற்குடியார் 5. கிங்கிணிக்கூருடையார் 6. பேரசெந்தூருடையார் 7. சிறுசேத்தூருடையார் 8. திருவேட்பூருடையார். இப்பிரிவினரில் (திருவேட்புடையாரில்) மூத்த சகோதரர் இரணியூருக்கும் இளைய சகோதரர் பிள்ளையார்பட்டிக்கும் சென்று தங்களுக்கு உரிய உடைமைகளோடு சீரும் சிறப்புமாக வாழத் தலைப்பட்டார்கள். அவர்கள் அந்தந்த ஊரிலேயே கோயில்களை உருவாக்கிக் கொண்டார்கள். இதனால் இளையாத்தாக்குடிப் பிரிவு எட்டு ஆக இருந்தது ஏழானதுடன் நகரத்தார் கோயில்கள் ஏழாக இருந்தது ஒன்பதாயிற்று.

இளையாத்தக்குடிக் கோயில் எழில்மிக்கது. அக்கோயில் விளங்கும் சூழ்நிலையும் மிக அழகிய தோற்றமுடையது. உண்மையிலேயே இன்றும் அந்தக் கோயிலின் முன் சென்றாலே எத்தகைய இளைப்பும் நீங்கிவிடும் என்று சொல்லலாம்.

கோயிலின் உள்ளே கைலாசநாதர் கொலுவிருக்கிறார். தண்டி முண்டி என்னும் சிற்பங்கள் காவல் தெய்வங்களாக விளங்குகின்றன. சந்நிதியின் இடப்புறத்தில் (நமக்கு வலப்புறத்தில்) கூத்தப்பெருமான், சிவகாமி அம்மையார், காரைக்கால் அம்மையார், மாணிக்கவாசகர் முதலியோரின் உற்சவ மூர்த்தங்கள் ஒளிதந்து நம்மைக் கவர்கின்றன.

இரணிப்பட்டி முத்துமாரி அம்மன் உற்சவ மூர்த்தியும் இங்கு இருக்கிறது.

நித்தியகல்யாணி அம்மனுக்கு எதிரில் வீரசக்தி, விஜயசக்தி இருவரும் துவார பாலகியர்களாக நிற்கின்றார்கள்.

நித்தியபூஜைகள் இங்கு மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. நாள்தோறும் சுவாமி பள்ளியறை போதல் வருதல் போன்ற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

இக்கோயிலில் உள்ள சிற்பங்கள் மனத்தைக் கவர்வன. அவற்றில் கற்சங்கிலி பொற்சங்கிலி போல் அவ்வளவு தெளிவாக உருவாக்கப் பட்டிருப்பது மிகவும் வியக்கத் தக்கதாகும். இக் கோயிலின் திருச் சுற்று முடிந்து முன்புறம் வரும் போது சுவர் ஓரமாக ஏகாம்பரநாதர் காமாட்சி அம்மையைத் தழுவிக் கொண்டிருக்கும் சுதை வடிவம் காணப்படுகிறது. காஞ்சிப்பெரியவர்களில் 65 வது மகாபீடமாக விளங்கிய ஜகத்குரு ஸ்ரீமஹா தேவேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் அவர்கள் இந்தப் பெரும் பதியில் இறைவனோடு இரண்டறக் கலந்து சிறந்தார்கள். 68 வது பீடமாகிய ஆதிசங்கரரின் திருஅவதாரம் என்று உலகமே போற்றும் நம் கண்ட தெய்வமான

பெரிய பெரியவாள் மிகவும் விரும்பி சிலகாலம் தங்கியதும் இத்தலமேயாகும். அந்த மகிமையின் முன்தோற்றமோ என்னவோ காஞ்சிப்பதியில் குடிகொண்டு வாழும் ஏகாம்பரநாதர் காமாட்சி அம்மையுடன் இத்திரு ஆலயத்திலும் குடிகொண்டு விளங்குகிறார்கள்.

கோயிலின் சந்நிதி முன்பாக ஒரு பெரிய சிற்பத் திருஉருவம் உள்ளது. இது இக்கோயிலை நகரத்தார்களுக்கு உதவிய கலால்பேட்டை ஜமீன்தார் பெரியதம்பித் தேவரின் சிலை என்று கூறப்படுகிறது. இக்கோயிலை மதுரைப் பாண்டி முனி, இரவு தோறும் வந்து காவல் காப்பதாக ஒரு ஐதீகம் உள்ளது. அத்தெய்வத்தின் பாதம் இங்கு வைத்துப் பூசிக்கப் படுகிறது. இளையாத்தாக்குடிக் கோயில் ஏழு பிரிவின ராக உள்ளார்கள் என்பதனை முன்பு கண்டோம். அவர்களுக்குத் தனித்தனியே ஒவ்வொரு விநாயகர் ஆலயமும் குளமும் இருப்பதோடு பட்டினசாமியார் பிரிவு நகரத்தார்களுக்குத் தனியே ஒரு சிவாலயமும் கழனிவாசற் குடியார் நகரத்தாருக்கு ஒரு திருமால் ஆலயமும் உள்ளன.

இளையாத்தாக்குடி முழுமுதற் கோயிலான கைலாசநாதர் கோயிற் போலவே இந்தத் திருமால் கோயிலிலும் சிற்பங்கள் நகரத்தாரின் சிற்பக்கலை ஆர்வத்திற்கு அற்புத எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இங்குள்ள தசாவதாரச்சிலைகள் கண்களை யும் கருத்தையும் கவர்வனவாக உள்ளன. நகரத்தார்கள் எதைச் செய்தாலும் செம்மையாகத்தான் செய்வார்கள் என்பதற்கு அவர்களின் முழுமுதற் கோயிலான இளையாத்தாக்குடிக் கோயிலும் ஊரின் அமைப்பும் கட்டியங் கூறுகின்றன.

இங்குள்ள கோயில் நிர்வாக அலுவலகமும், மற்றும் பணியாளர்கள் இருக்கை களும் சிப்பந்திகள் வீடுகளும் பசுமடமும் மிகத் திட்டமிட்டு கட்டப்பட்டுள்ளன.

ஆலயநிர்வாகம் என்றும் நகரத்தார்களிடமே இருந்து வந்ததெனினும் 1 - 12 - 1926 ஆம் நாள் முதல் சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் நிர்வாகங்கள் நடந்து வருகின்றன. அதில் பரம்பரை அறங்காவலர்கள் நான்கு பேர். இவர்களில் தமிழ் ஆண்டுக் கணக்குப்படி ஆண்டிற்கு இருவர் மாறி தர்மகர்த் தாவாக இருந்து வருகிறார்கள். ஆண்டு தோறும் நியமன அறங்காவலர்கள்3 பேர். ஆக ஐந்து பேர் இந்த ஆலயத்தின் நிர்வாகங்களைச் செவ்வனே கவனித்துவருகிறார்கள்.

இளையாத்தாக்குடிக் கோயிலுக்கு உட்பட்டதாகச் சில கோயில்கள் உள்ளன. இளையாத்தாக்குடிக்கு வடக்கே 3 கல் தொலைவில் உள்ள கீரணிப்பட்டி அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயம் அதற்குத் தெற்கே சுமார் ஒரு கல் தொலைவில் உள்ள அருள்மிகு காட்டுச்சுப்பையா கோயில். இளையாத்தாக்குடியிலேயே உள்ள காஞ்சி காமகோடி ஆச்சாரிய சுவாமிகளின் 65 ஆவது பீடத்தை அலங்கரித்த தெய்வத்திரு அவதாரத்தின் திருப்பீடம் முதலியன நகரத்தாரின் நேரடிப் பார்வையிலேயே உள்ளன.

இளையாத்தக்குடி நகரத்தார்களின் சீரிய முயற்சியாலும் குடமுழுக்கு விழாக் குழுவின் அதாவது திருப்பணிக் குழுவின் தலைவராக இருந்து தெய்வமான செட்டி நாட்டரசர் முத்தைய வள்ளலின் பெருமித முயற்சிகளாலும் தலைவராக உள்ள அந்த முத்தையவேள் பெற்றெடுத்த முத்தான முத்து முழுமதிபோல் நல் முத்தான அண்ணல் M. A. M ராமசாமி அவர்களின் பொன் முயற்சியாலும் திருப்பணிக்குழுத் துணைத் தலைவர்கள் செயலாளர்கள் பொருளாளர் முதலியோரின் பெரு முயற்சி யாலும் இளையாத்தாக்குடிக் கோயில் புதிய வலிவும் பொலிவும் புதுமையும் பெற்று 2 - 5 - 85 ல் குடமுழுக்கு விழாக்கண்டது. தேவரையும் மூவரையும் இளைப்பகற்றிக் காத்த நித்தியகல்யாணி உடன்உறை கைலாசநாதர் நித்தம்துணைநின்று நம்மைக் காப்பார் அவர் சேவடி போற்றி வாழ்வோம்.

ஆன்மாவை உயர்த்தும் இறைபணி

சரித்திரக்கதைச் சக்கரவர்த்தி
சாண்டில்யன்

விலங்கு பகையல்லது கலங்குபகை அறியாத புகார் நகரத்தின் கடல் கோபத்திற்கு அஞ்சி பாண்டிய நாட்டிற்கு வந்த நகரத்தார் சமுதாயத்திற்கு இருக்க இடம்தந்து அவர்கள் உலகம் முழுவதும் உயர்ந்தோங்கவும் அருள் பாலித்த இளையாத்தக்குடி நித்தியகல்யாணி அம்பிகை சமேத கைலாச நாதர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவை ஒட்டி மலர் ஒன்று கொண்டு வர இருக்கும் பணி மிகச் சிறந்த ஒன்றாகும்;

இந்த இறைபணியில் எனக்கும் சிலவரிகள் எழுத இடம் கொடுத்து புண்ணியம் தேடித் தந்த விழா மலர்க்குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்;

பணிகள் ஆயிரம் புரிந்தாலும் இறை பணிக்கு இணை எதுவும் இல்லை. மற்ற பணிகளால் புகழ் உயரலாம் உலகாயுத நன்மைகள் கிட்டலாம்.

ஆனால் இறை பணி ஒன்றுதான் மனதுக்கு முழுநிறை வைத்தரும் மூலாதாரம். அதனால் மனம் துயர் அறுத்து உயர்ந்து நிற்கிறது,

துயரது சுடரடி தொழுது எழுஎன் மனனே

என்று நம்மாழ்வாரும் கூறுவார். அப்படி ஆன்மாவை உயர்த்தும் குடமுழுக்கு விழா மலருக்கு, இறை பணியாளர்களுக்கு, எனது பணியாக இந்தச் சில வரிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

சங்கமம் நெஞ்சங்கள்!

C. N. நாச்சியப்பன்

நித்தியத் தத்துவமாய்
நீலாய தாட்சியாய்
சத்தியத் திருவுருவாய்
சக்தியின் பெருவடிவாய்!

கைலாச நாதரின்
கல்யாணப் பெண்ணுருவாய்
கைலாகு கொடுத்திருக்கும்
கற்பகத் தருநிழலாய்!

இளையாத்தக் குடியில்
இடங்கொண்ட இன்னமுதே
வளைகாப்பு ஒலித்திடவே
வாழ்ந்திருக்கும் பூங்கொடியே!

உயிரில் கலந்திருந்து
உயிரோட்டம் ஆனவளே
பயிரில் கலந்திருந்து
பராசக்தி ஆனவளே!

பூமியில் கலந்திருந்து
சாமியாய் நிற்பவளே
ஓமெனும் உட்பொருளில்
ஓங்காரம் இசைப்பவளே!

வானத்தில் வில்லாக
வண்ணங்கள் காட்டுகிறாய்
கானத்தில் இசையாகக்
கற்பனை கூட்டுகிறாய்!

ஞானத்தில் நீஉவந்து
ஞானஒளி பரப்புகிறாய்
மோனத்தில் நீமலர்ந்து
முக்தியும் அளிக்கின்றாய்!

நித்திய கல்யாணி
சத்தியக் கலைவாணி
நித்தியம் அருள்வாய்நீ
நிம்மதி தருவாய் நீ!

ஒன்பது கோவிலிலே
ஓங்கும் புகழுடனே
அன்பரின் இதயத்தில்
ஆட்சி செய்பவளே!

கல்யாணத் திருவுருவம்
காட்சிக்கு உன்னுருவம்
வல்வினை தீர்த்துவிடும்
வாகான பெருவடிவம்!

மஞ்சளும் குங்குமமும்
மங்களத் திருவடிவம்
கொஞ்சிவரும் பேரழகும்
கோடிநலம் சேர்த்திடுமே!

கையெடுக்க அருள்கொடுக்கும்
கைலாச நாதருடன்
மெய்யெடுத்த பெரும்புகழில்
மேன்மையாய் இருப்பவளே!

நகரத்தார் பெருமைகளைப்
பகரத்தான் முடியாது
சிகரத்தில் உனைவைத்துச்
சீராட்டும் குடமுழுக்கில்

மலரும் ஒருமலரில்
மணம் பரப்பும் மாதேவி
பலரும் படித்திடவே
பாவை நீ எழுத்தானாய்!

கும்பிடக் கோவிலிலே
குங்குமச் செல்வியானாய்
நம்பிட நாட்டினிலே
நல்ல கருத்தானாய்!

பக்தி செய்வதுடன்
பாட்டெழுதும் பணிதந்தாய்
சக்தியும் நீ தந்தாய்
சங்கமம் நெஞ்சங்கள்!

நல்வாழ்வை நாம்பெறுவோம்

கவிஞர் சேயோன்

தம் ஊரில் வாழ்ந்தாலும்
　　தமிழகத்தில் பிற இடத்தில் வாழ்ந்தாலும்
எம்மா நிலத் தனிலே
　　எவ்வூரில் வாழ்ந்தாலும்
கடல்கடந்து சென்றாலும்
　　கந்தனையே வழிபட்டுஅவன்
தந்தையும் தாயையும்
　　தவறாமல் போற்றி நின்று
ஆலயங்கள் பல கட்டி
　　அற்புதத் திருப்பணிகள்
அடுக்கடுக்காய்ச் செய்யும்
　　ஓர் இனம் உண்டென்றால் - அது
உலகுபுகழ் நகரத்தார் இனமேயாகும்
　　ஒப்பற்ற இந்த இனத்தார்
நவதிருப் பதிகள் என்று
　　நாடெல்லாம் போற்றுகின்ற
ஒன்பது கோயில் களைத்தம்
　　உயர் கோயில்களாய்க் கொண்டு நாளும்
உன்னமாய் வாழுகின்ற நகரத்தாரின்
　　முதற் கோயில் எழிற் கோயில்
இளையாத்தக்குடி என்னும்
　　எழிற் கோயில் ஆகும்-அங்கு
நித்தியகல்யாணி வந்து நாளும்
　　நிம்மதியைத் தருகின்றாள்.
கைலாசநாதர் உடனிருந்து நம்
　　கவலைகளைப் போக்குகின்றார்
அன்னவர்க்குக் குடமுழுக்கு
　　அற்புதமாய் நடந்தது
மந்திர நீராடி
　　மகிழ்ந்த அவர்கள்
பொங்கிவரும் நல்வாழ்வை நமக்குப்
　　பொலிவோடு தருவார்கள் அவர்களை
நாளும் மிக வணங்கி
　　நல்வாழ்வை நாம்பெறுவோம்

எம் பெருமான் திருக்கருணை

டாக்டர் வெ. பழநியப்பன்
எம். ஏ., எம். லிட்., பி.எச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

உலகில் அன்றுதொட்டு இன்று வரை இறை - இறை மறுப்புக் கொள்கைகள் இருந்து வருவது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் மனித இனம் தமக்குத் துன்பம் நேருங்கால அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு என்று உணர்வதில் வேறுபட வில்லை. இச்சக்தியினை ஒருவர் இறை என்கின்றார். மற்றொருவர் இயற்கை என்கின்றார்; பிறிதொருவர் பிறிதொன்றாகக் கருதுகின்றார்; எது எவ்வாறாயினும் இச்சக்தியின் பொதுப் பெயர் இறைவன் அல்லது கடவுள் என்பதேயாகும்.

கடவுள் நெறி மனித இனத்தை நல்வழிப்படுத்தும் நன்னெறியாகும். இந் நெறியின் மூலவராகிய இறைவனை அடையும் நெறியினைப் பல்வேறு சமயச் சான்றோர்கள் அன்றும் பல்வேறு கருத்துக்களால் எடுத்துரைத்துள்ளனர்; இன்றும் பலர் இந்நெறியினை எடுத்து மொழிகின்றனர்.

இந்நெறியினைச் சிவநெறிச் சீலர்கள் மிகவும் எளிதாக, விளக்கமாக எடுத்துக் கூறி உயிர்களை நல்வழிப்படுத்துகின்றனர். சிவநெறி சான்ற சமயக் குரவர் அறுபத்து மூவருள் தேவாரம் பாடிய மூவரும் தனிச் சிறப்புடன் மதிக்கப் பெறுகின்றனர். ஏனைய பெரியவர்களெல்லாம் சிவநெறி நின்று வழி காட்ட, தேவார மூவர்களோ அந்நெறி நின்று ஒழுகியதோடு, இறைவன் முன்னிலையில் பாடிப் பரவி உயிர்களுக்கு உன்னத நெறியை உணர்த்திய பாங்கே அவர்களுக்குத் தனிச் சிறப்பளிப்பதாகும்.

இறை இன்பம் பயக்கும் தமிழ்ப் பக்திப் பனுவல்கள் பன்னிரு திருமுறை களாகப் பகுத்து மதிக்கப் பெறுகின்றன. இப்பக்திப் பனுவல்களுள் மூவர் பாடிய தேவாரம் முதல் ஏழு திருமுறைகளாகத் தொடுக்கப் பெற்றுள்ளன.

'தேவாரம், என்பதற்கு இருவேறு வகையான பொருள் விளக்கங்கள் கூறப் பெறுகின்றன. தே, வாரம் எனப்பிரித்து தே— இறைவன்; வாரம்— அன்பு எனப் பொருள் கொண்டு தேவனிடத்து அன்பை விளைவிப்பது; அஃதாவது சிவபிரா னிடத்து அதனை ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் அன்பை உண்டு பண்ணுவது என்று பொருள் கூறுவர்.

தே — ஆரம் எனப்பிரித்து சிவபிரானுக்கு ஆரம்போல் அழகு செய்வது என்று பொருளுரைப்பர் பிறிதொரு சாறர். இவ்விரு சாறர் கூறும் பொருளும் ஏற்புடையதே.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் திருவாக்கினையும் 'தேவாரம்' என்ற சொல்லால் குறிக்கும் முறை பல நூற்றாண்டுகளாக இருந்து வந்தது. ஆனால் பிற்காலத்தில் திருநாவுக்கரசர் திருவாக்கு மட்டுமே 'தேவாரம்' என்ற சொல்லாலும், சுந்தரர் திருவாக்குத் 'திருப்பாட்டு' என்ற சொல்லாலும் குறிக்கும் வழக்கு வந்தது என்பதனைச் சிவப்பிரகாசப் பெருந்திரட்டில் வரும் வழக்கினை எடுத்துக்கூறி, பேராசிரியர் டாக்டர் மொ. அ. துரையரங்கனார் நிறுவியுள்ளார்.

வழிபாடு செய்யும் இடத்திற்கு 'தேவாரம்' என்ற சொல்லை ஆளும் நிலையும் உள்ளது என்பது ''தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி'' என்ற கல்வெட்டுத் தொடரால் விளங்குவதனையும் அவர் காட்டியுள்ளார்.

''அத்தாவுன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்
 அருள்நோக்கில் தீர்த்த நீராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
 எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
 பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தாயன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய, ஐயோ!
 எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே''

இத்திருத் தாண்டகம் இறைவன் தம்மை எளி வந்து ஆண்டருளிய பெருங்கருணைத் திறத்தை நினைந்து அப்பரடிகள் மகிழ்ந்து அருளிச் செய்ததாகும். அடிகளார் இறைவனை 'அத்தா!' என விளித்து உனக்குத் தொண்டுபடுதல் அன்பினாலாயினும், அச்சத்தினாலாயினும் ஆகும். ஆனால் அவற்றுள் அடியேனை அன்பினால் தொண்டனாகச் செய்தாய் என்று கூறி மகிழ்கின்றார்.

அன்பனைத் தொண்டனாக்க வேண்டுமெனில் அவன் செய்த குற்றங்களை இறைவன் கழுவ வேண்டும் அல்லவா? இறைவனே அடிகளாரை மந்திர நீரால் ஆட்டித் தூய்மை செய்யாது, திருவருள் நோக்கத்தால் தூய்மை செய்தருளினார் என்று பெருமை கொள்கின்றார் அப்பர். அடிகளார் சமண சமயத்தைச் சார்ந்திருந்தமையால் அச் சமயத்தில் படிந்திருந்த மாசு தீர்தல் பொருட்டு இங்ஙனம் அவரைக் கழுவ வேண்டியதாயிற்று. அவர் இறைவனை அடைய யாதும் செய்யாத போதே, அவர் தம் தமக்கையார் வேண்டிக் கொண்ட துணையினாலே இறைவன் இரங்கியருளினார். சிலர் தாமே பல்காலும் பணிந்து, இரந்து, பல்வகைத் தொண்டுகளைச் செய்து நிற்பவும் இறைவன் அவர்களுக்குத் தன் திருவருளை வழங்கார்; ஆனால் தன் செயல்களையெல்லாம் அவன் செயல்களாக முன்னின்று ஏற்றுக்கொண்ட இறைவனை,

'எத்தனையும் அரியைநீ எளியை யானாய்
 எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்'

என்று கூறி வாழ்த்துகின்றார். இறைவன் பெருமையினை உணராத தம்மைப் பித்தனென்றும், பேதையென்றும், பேயனென்றும், நாயனென்றும் இழிந்துரைத்துக் கொள்கின்றார். வஞ்சகராகிய சமணரது சொல்லின் வஞ்சத்தினை உணரமாட்டாது, அதனை மெய்யென்றே தெளிந்து, நன்னெறியாகிய சிவநெறியைக் கைவிட்டுச் சமண சமயம் சென்றமை கருதியே இவ்வாறு நம்மை இகழ்ந்து கூறிக் கொள்கின்றார். இறைவன் தம் குற்றங்கள் அனைத்தையும் பொறுத்துத் தம்மை ஆட்கொண்டது 'எம்பெருமான் திருக்கருணையே' என விளக்கிக் காட்டுவர்.

மலர்மணம் பரவுக!

கலைமாமணி கவிக்குயில்
கு. மா. பாலசுப்பிரமணியம்

நல்லறம், தெய்வ நம்பிக்கை வலுவால்
அல்லலில் லாமல் அருந்தொழில் வளர்த்தே
செல்வமும் சேர்த்துத் திருப்பணி முடிக்கும்
உள்ளத்தால் உயர்ந்த நாட்டுக்கோட்டையார்
இல்லறம் செழிக்கும் இளையாத்தக் குடிமுதல்
உள்ளனர் ஒன்பது கோவிலின் பிரிவாய்!
வல்லியாம் நித்திய கல்யாணி அம்மையும்
அள்ளி அணைத்திடும் கைலாச நாதரும்
உள்ளுறை ஆலயக் குடமுழுக் கெனவே
சொல்லரும் திருவிழாச் சுடரொளி படர்க!
கல்வியில் வல்லோர் கட்டுரைக் கவிதைகள்
மல்லிகை தொடுக்கும் மலர்மணம் பரவுக!
எல்லையில் வாழும் எழுவகைப் பிரிவினர்
வல்லமையோங்கி வளமுடன் மகிழவே
நல்லருள்பொழியும் நாதன் கருணையால்,
பல்வகை நலமுடன் பல்லாண்டு வாழ்க!

நெஞ்சமெலாம் பெருமகிழ்வு வளரக் கண்டோம்

கவியரசி
சௌந்தராகைலாசம்

நல்லறத்தின் காவலராய் எந்த நாளும்
நானிலத்தில் விளங்குகின்ற நகரத் தாரின்
எல்லையிலாப் பெரும்புகழை எடுத்துச் சொல்ல
எத்தனையோ திருப்பணிகள் இங்கே உண்டு!
சொல்லரிய பாரதத்தில் வடக்கும் தெற்கும்
தொடர்ந்துபல நாடுகளில் உலகம் எங்கும்
கல்உரைக்கும் காவியங்கள் படைத்துத் தந்து
காலத்தை வென்றிருக்கும் காட்சி உண்டு!

செந்தமிழ்த்தாய் பாதத்தில் சிலம்பொ லித்துச்
சீர்த்தியினைக் குவிக்கின்ற இலக்கி யத்தில்
வந்தஒரு கோவலனும், அவனைப் பற்றி
வாழவந்த கண்ணகியும், வைய வாழ்வில்
எந்தஒரு நிலையினிலும் ஐந்த டக்கி
இறைவனருள்த் திருவடியை இதயம் தாங்கி
பந்தமெலாம் அறுத்தெறிந்து பக்தி செய்த
பட்டினத்துச் சாமிகளும் வணிகர் அன்றோ?

காவிரிப்பூம் பட்டினத்தில் ஒருகா லத்தில்
களிப்புற்று வாழ்ந்திருந்த வணிக மக்கள்
மேவியவோர் சூழ்நிலையால் பாண்டி நாட்டில்
விருப்புற்று வாழ்வதற்குச் சென்ற வேளை
ஆவியது சோராமல் அல்லல் இன்றி
அமைதியுடன் இளைப்பாற இடம்கொ டுத்த
தேவியரும் கைலாச நாதர் தாமும்
திகழுமிடம் இளையாற்றங் குடிஎன் பார்கள்!

இளையாற்றங் குடியினிலே இருந்த வண்ணம்
எல்லார்க்கும் அருள்காட்டி இன்பம் யாவும்
அளவதும் இல்லாமல் அளித்துக் காக்கும்
அருள்மிக்க கைலாச நாத ரார்க்கும்
வளையாது வணிகர்குலம் வாழ வைக்கும்
வாழ்வரசி நித்தியகல் யாணித் தாய்க்கும்
உளமீதில் இடம்தந்த நகரத் தார்கள்
ஓங்குமெழிற் கோயிலதும் சமைத்துத் தந்தார்!

ஈசனவன் திருத்தொண்டே வாழ்வின் மூச்சாய்
எண்ணிநிதம் பணிபுரியும் செட்டி மக்கள்
நேசமது பொங்கிவர, உலகோர்க் கெல்லாம்
நிறைவான வளமோங்க வேண்டும் என்னும்
ஆசையுடன் கைலாச நாத ருக்கும்
அன்னைக்கும் மற்றுமுள தெய்வங் கட்கும்
வாசமுற மறுபடியும் குடமு ழுக்கு
வக்கணையாய்ச் செய்தார்கள் வாழ்க! வாழ்க!

சிகரத்தில் ஒளிர்கின்ற தீபம் போலத்
திகழ்அண்ணா மலையரசர் பெற்றெ டுத்த
நகரத்தார் குலதிலகம் ராம சாமி
நல்லமனம் பெற்றுள்ள மற்றை யோர்கள்
பகரத்தான் இயலாத பெருமு யற்சி
பண்ணியதால் இந்நாளில் குடமு ழுக்கு
நிகரற்ற விதமாக நிகழக் கண்டோம்!
நெஞ்சமெலாம் பெருமகிழ்வு வளரக் கண்டோம்!

அழகுடரும் நித்தியகல் யாணி சூழ
அமர்ந்திருக்கும் கைலாச நாத ரின்
விழியினருட் பார்வையினால் நகரத் தார்கள்
மேன்மேலும் திருப்பணிகள் விழைந்து செய்து
தொழில்பெருகி வளம்பெருகி எந்த நாளும்
தொடர்கின்ற புகழ்பெருகி அன்பு மிஞ்சி
எழில்பெருகி வாழியவோ வாழி என்றே
இசைக்கின்றேன்! நகரத்தார் இனிது வாழி!

நாதன்தாள் வாழ்க !

இறைமை உணர்வு

மேன்மைமிகு சு. ஸ்ரீபால்

ஆணையர், காவல்துறை.

நகரத்தார்கள பல ஊர்களில் சொந்தக் கோயில்கள் கட்டி நான்குகால வழிபாடு நாள்தோறும் நடத்தி வருகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் அதிகமான கோயில்கள் கட்டி அவைகளுக்குச் சொத்துக்களும் வழங்கி யிருக்கிறார்கள். காசியில் நகரத்தார் சத்திரம் இருக்கின்றது. இன்றைக்கும் காசி விசுவநாதருக்கு இரவு கால வழிபாடு நடத்தி வருகிறார்கள். செட்டி நாட்டில் மொத்தம் 96 ஊர்கள் இருந்ததாகக் கூறுவார்கள். இன்று இந்தப் பாரம்பரியம் மிக்க சமுகத்தினர், 72 ஊர்களில் வாழ்ந்து வருகிறார்கள். இளையாற்றங்குடி, இரணியூர், மாத்தூர், வயிரவன்கோயில், பிள்ளையார் பட்டி, நேமங்கோயில், இலுப்பைக்குடி போன்ற ஊர்களில் இவர்கள் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஊர்கள் தெற்கு வட்டகை, மேல வட்டகை, கீழவட்டகை என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இச்சமூகத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். கல்கத்தா, கயா, ராமேஸ்வரம், திருச்செந்தூர், மதுரை, பழநி போன்ற தெய்வத்தலங் களில் சத்திரம்கட்டி அன்னதான செய்து வருகிறார்கள். செட்டிநாட்டு அரசர் சிதம்பரத்தில் சத்திரம் அமைத்து நாள்தோறும் அன்னதானம் செய்து வருகிறார்கள். மதுரையில் கருமுத்து குடும்பம், சிதம்பரத்தில் செட்டிநாட்டு அரசினர் குடும்பம், காரைக்குடியில் அழகப்பர் குடும்பம், புதுவயலில் ராமநாதன் செட்டியார் குடும்பம், கோட்டையூரில் சிதம்பரம் மற்றும் அருணாசலம் செட்டியார் குடும்பம், பள்ளத்தூரில் அருணாசலம் செட்டியார் குடும்பம், கானாடுகாத்தானில் எம். சி. டி. எம் குடும்பம். சென்னையில் ஏ. எம். எம் முருகப்பச் செட்டியார் குடும்பம் ஆகியோர் கல்வி நிறுவனங்களை நிறுவி, கல்விப்பணியாற்றி வருகிறார்கள். காரைக்குடி, சண்முகநாதபுரம், தேவகோட்டை, பூலாங்குருச்சி ஆகிய இடங்களிலும் கல்வி நிறுவனங்கள் நிறுவி கல்வித்தொண்டு ஆற்றி வருகிறார்கள்.

கோயில்களில் நடக்கும் திருவிழாக்கள் அகத்தையும் புறத்தையும் தூய்மைப்படுத்தி ஒன்றுக்கி உள்ளத்தைத் தன்னேரில்லா ஒருவனுடன் ஒன்றச் செய்வனவாகும் இறைமை உணர்வை வளர்த்து இறைவனை உணர, அடிசேர, இறைவனுல் ஆட்கொள்ளப்பட வழிகோலுவன ஆகும். டாக்டர். எம் ஏ. எம். ராமசாமி அவர்கள் பல லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்க, இந்தப் பழமையான கோயிலில் திருக்குட முழுக்கு திருவிழா நடைபெறுவதில். நான் அளவில்லா மகிழ்ச்சி அடை கிறேன். இந்த விழா அந்தப் பகுதியில் வாழும் பெருமக்களுக்கு நல்ல வளத்தையும், நிலையான அமைதியையும் தந்து இறைமைப் பற்றை வளர்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நல்வாழ்த்துக்கள்,

* * *

இறை வணக்கம் ஒரு நல்ல பழக்கம்

டாக்டர். மெ. மெய்யப்பன்
இயற்பியல் பேராசிரியர்

இறை வணக்கம் ஒரு நல்ல பழக்கம் என்று சொன்னால் யாரும் மறுப்புக் கூற மாட்டார்கள்; ஆனால் நல்ல பழக்கங்களுக்கு வழக்கப்படுத்தி விட்டு, அதற்கான காரணத்தை இலை மறைவு காய் மறை வாக்கி விட்டுச் சென்றதால் அத்தகைய பழக்கங்களைப் புறக்கணிக்கக் கூடிய சூழ்நிலை இன்று உருவாகியிருக்கின்றது: வழி வழியாகப் பின்பற்றப்பட்டு வரும் பல பழக்க வழக்கங்கள் விஞ்ஞானத்திற்குப் புறம் பானது என்றும், அதை மேலும் பின்பற்றுவது விஞ்ஞானத்தை அவமதிப்பதாகும், என்றும் சிலர் கூறலாம். ஆனால் விஞ்ஞானத்திற்குப் புறம்பானது என்ற ஒரே காரணத்திற்காக, கடைப் பிடித்து வந்த பழக்க வழக்கங்களை உடனடியாக நிறுத்திக் கொள்வது பகுத்தறிவிற்கு ஒவ்வாத செயலேயாகும்.

காரணமின்றி எந்தவொரு பழக்கமும் அன்று சான்றோர்களால் நெறிப்படுத்தப் பட்டிருக்காது என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. அவர்களுடைய நெறிமுறைக்கு சமுதாயத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சியே முக்கியமானதாக இருந்தது. சமுதாயத்தின் பொது வொழுக்கத்தைக் காக்க விஞ்ஞானத்தையும் அஞ்ஞானத்தையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்த்து, எந்தக் கருத்து வேறுபாடுமின்றி அப்படியே ஏற்றும் கொண்டார்கள். பொதுவாகப் பண்டைய பழக்கவழக்கங்களின் பொது நியதி, சமுதாய வளர்ச்சிக்கு அவசியமான ஒருமைப் பாட்டைத் தூண்டும் நல்லெண்ணங் களாகவே இருக்கின்றன. காரணங்கள் வெளிப்படையாகச் சொல்லப்படாது போன தால், நீண்ட காலப் போக்கில் பழக்க வழக்கம் மட்டுமே எஞ்சிப் போனது. காரணம் மட்டும் மடிந்து போனதால் குற்றுயிராய்க் கிடக்கும் பல பழக்க வழக்கங்கள் இன்று சர்ச்சைக்குரியனவாக இருந்து வருகின்றன. சூழ்நிலை மாற்றத்தால் சில பழக்க வழக்கங்கள் அவசியமற்றதாகவோ அல்லது பகுத்தறிவிற்கு ஒவ்வாதது போலவோ தோன்றலாம்; அதனால் அத்தகைய பழக்க வழக்கங்களை வேரோடு களைந்துவிட வேண்டும் என்பதில்லை. அவற்றின் காரணங்களை அலசி அறிந்து இன்றைய சூழ்நிலைக் குத் தக்கவாறு புதுமைப் படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் உண்மையான பகுத்தறிவாக இருக்க முடியும்.

விஞ்ஞானத்திற்கும், அஞ்ஞானத்திற்கும் இடையிலே சிக்கி அல்லல் பட்டுத் தவிப்பதில் இன்று இறைவனும் ஒருவன். இறைவனின் அவசியம் இறை வணக்கம் என்ற பழக்கத்திலே தான் உறைந்திருக்கின்றது. பயமும் பக்தியும் இல்லையென்றால், சமுதாயம் உலகின் அழிவிற்குத் தீப்பொறியாக அமைந்து விடும் என்று எண்ணித் தான் இறைவணக்கம் என்ற பழக்கத்தை அன்று ஏற்படுத்தினார்களோ? அது அப்படி இருக்குமானால், சமுதாய வளர்ச்சியை மேம்படுத்தக் கூடிய ஒருசெயலின் காரணத்தை மூடி மறைக்க வேண்டிய அவசியம் என்ன?

இறை வணக்கம் என்றால் என்ன? ஒவ்வொரு நாளும் ஒரு சில வினாடிகளாவது இதற்காகச் செலவழிக்க வேண்டியதன் அவசியம் தான் என்ன? மரபுவழி எண்ணங்கள் முற்றிலும் திரிவுற்றுப் போன இன்றைய சூழ்நிலையில் சற்று நேரம் இதைப் பற்றி சிந்தித்தால், உள்ளத்தினுள் உறைந்து விட்ட சில உயரிய எண்ணங்கள் மீண்டும் புத்தொளி பெறலாம். அதனால் தேய்ந்து மறைந்து போய்க் கொண்டிருக்கும் சமுதாயக் கட்டுக் கோப்பின் அடிப்படை நியதிகளும், தர்மங்களும் மீண்டும் உள்ளங் களில் உதயமாகலாம். சமுதாய வளர்ச்சிக்கு ஆதாரமான இந்த உணர்வுகளே மனித இனத்தின் ஒருமைப் பாட்டிற்கு அடி கோலுவதாக அமையும்.

இறைவணக்கம் தியானமாகவோ, தொழுகையாகவோ இருக்கலாம்; இதன் அடிப்படை நோக்கமே, மனதைத் தூய்மைப் படுத்துவதும், ஒருமுகப் படுத்துவதும் தான். தூய்மைப் படுத்துவதில் பிறர் நலமும், ஒருமுகப் படுத்துவதில் தன் முன்னேற்றமும் இலை மறைவு, காய் மறைவாக இருக்கின்றன.

இறை வணக்கத்தின் போது நாம் நமக்கே உணர்த்திக் கொள்ளுவதெல்லாம் இதுதான் - எவ்வளவு வலிமையுள்ளவனென்றாலும், ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டவன் தான், எவ்வளவு அறிவு உள்ளவனென்றாலும் பொது ஒழுக்கத்தை மீறிச் செயல் படாதவன் தான், எவ்வளவு செல்வமுள்ளவன் என்றாலும் சத்தியத்தை மதிப்பவன் தான் என்று மீண்டும் மீண்டும் அறிவுறுத்திக் கொள்வதாகும். சொல்லப் போனால் சமுதாயத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியைப் பாதிக்கும் 'நான்' என்ற அகந்தையைக் கிள்ளியெறியத் தூண்டும் ஒரு மூடு மந்திரமே இறைவணக்கம். இதனால் சில சமயங் களில் எல்லை மீறிச் செல்லும் தீய எண்ணங்கள் வலுவிழந்து போக வழி பிறக்கின்றது. இறைவன் என்ற சக்தி அன்று கற்பிக்கப் படாது இருக்குமென்றால், இன்றைக்கு சட்டம், ஒழுங்கு இவற்றை மீறி வாழ்வோர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகிப் போயிருக்கும் அதனால் சமுதாயம் ஒரு சுடுகாடாகத்தான் மாறுமே ஒழிய, செழிப்புற்று மேலோங்குவதற்கில்லை.

சமத்துவத்தைத் தூண்டும் இந்த தெய்வீக உணர்வுகள் இடையில் சீர்குலைந்ததால் விளைந்ததே அரசியல். அரசியல் என்பது வாழ்க்கைக்கு இயற்கை நல்கியிருக்கும் வசதிகளனைத்தும் சமுதாயத்தில் உள்ள அனைவரும் நுகரும் வண்ணம் பங்கீடு செய்யும் ஒரு கூட்டு அமைப்பு. அவ்வளவே! மனம் ஒப்பி, இயற்கையாகவே இந்த பங்கீட்டுத்தனம் நடைபெறாது போனதால்; மனிதர்களால் கண்டு பிடிக்கப்பட்ட செயற்கை நடை முறையே இந்த அரசியல். அரசியலால் சட்டங்களை இயற்றி சமுதாய வளர்ச்சிக்கு தனி ஒருவனால் ஏற்படக் கூடிய தீமைகளைத் தடுக்க முடிந்ததே ஒழிய, அதற்குக் காரணமான வேற்றுமை உணர்வுகள் மெல்ல மெல்ல தழைந்து வருவதை இன்றளவும் ஒடுக்க முடியவில்லையே. சட்டம் கெட்டதைச் செய்யாதே என்று மட்டும்தான் சொல்லும், நல்லதைச் செய் என்று சொல்லாது. ஆனால் இறை வணக்கம் கெட்டதைச் செய்யாதே என்பதோடு நல்லதைச் செய் என்று தூண்டு கின்றது.

சமுதாய வளர்ச்சி என்பது வெறும் பொருளாதார மேம்பாடு மட்டு மல்ல; சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு உயிரினமும் மற்றொரு உயிரினத்தின் வளர்ச்சியையும், வாழ்க்கையையும் பாதுகாக்கக் கூடிய வகையிலான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுவதிலும் இருக்கின்றது. இதற்கு எதிரான எண்ணங்களை நசுக்கிப் பொசுக்கும் தீச்சுடராக இருந்தது இருப்பது இறைவணக்கம் என்ற பழக்கம் தான்.

இறைவன் இல்லையேல் இறைவணக்கம் இல்லை; இறை வணக்கம் இல்லையேல் சமுதாய வளர்ச்சி இல்லை; சமுதாய வளர்ச்சி இல்லையேல் அது தீய சக்திகளின் புனர்ஜென்மம். உலகத்தின் அழிவிற்கு கட்டியம் கூறும் ஆரம்ப காலம். எனவே இறைவணக்கத்தை வெறும் பழக்கத்தினால் வந்த கடமையாகக் கருதாமல், அதன் உட்கருத்தை உணர்ந்து பின் பற்றி வரவேண்டும்.

நகரத்தார்கள் தெய்வப் பணி என்றால், என்றைக்குமே பின் தங்கியதில்லை. அன்று தொடங்கி இன்று வரை, கோயில் திருப்பணிகளாகட்டும், இல்லை கல்விச் சாலைகளாகட்டும், நகரத்தார்கள் ஒவ்வொருவருமே வாரி வாரி வழங்கிய வள்ளல் களாகத்தான் இருந்து வந்திருக்கின்றார்கள். இதனால் தான் அன்றைக்கு வந்த இலக்குமி என்றைக்கும் நீங்காது நம் வீட்டிலேயே தங்கி இருக்கிறாள் போலும்.

வாழ்க நகரத்தார்கள். வளர்க அவர் தம் தெய்வப்பணி.

அருட் கண்ணின் அருமை

கு. ஆளுடையபிள்ளை
ஆணையர், இந்துசமய அறநிலைய
ஆட்சித்துறை

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் பெற விரும்புவது இன்பமே யன்றித் துன்பம் இல்லை. எல்லா உயிர்களும் இன்பத்தையே அவாவுகின்றன. எந்த ஓர் உயிரும் துன்பத்தை விரும்புவது இல்லை. இன்பப் பெருக்கத்திற்காக இடையறாது முயல்வது இயற்கை.

இன்பத்தை எவ்வாறு அடைவது? இவ் வினவுக்கு விடை காண வேண்டுமானால் எதிர்மறை வகையால் முயன்று புரிந்து கொள்ளலாம். துன்பம் என்றால் என்ன? விரும்பியது ஈடேறுவிடின் கிடைப்பது துன்பம். அது மட்டுமா? விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பமேயாகும். துன்பம், உடல்துன்பம் மனத்துன்பம் என இரண்டு வகைப்படும். உடல் துன்பத்தைக் களைந்தெறிய மருத்துவ முறைகளின் வளர்ச்சி மிகப் பெரும் அளவில் உதவுகிறது. எனினும் மருத்துவ நிபுணர்களும் ''கவலைப் படாமல் இருங்கள், அப்போதுதான் நோய் விரைவில் முழுவதுமாகக் குணமாகும்; மேலும் நோய் வராமல் காக்க முடியும்'' என்றெல்லாம் ஆலோசனைகள் வழங்குகின்றனர். உடல் நோய்களுக்கும் மனத் துன்பமே காரணமாகி விடுகிறது. மனத் துன்பத்தை எவ்வாறு போக்குவது?

மனத் துன்பம் ஏன் ஏற்படுகிறது? - இக்கேள்விக்கு விடை கண்டுகொண்டால் மருந்து எது எனத் தெளிவாகவும் எளிதாகவும் தெரிந்து கொள்ள முடியும். நோயைக் குணப்படுத்த நோய் முதல் நாடுவது அல்லவா தகுந்த மருத்துவ முறை!

மனத் துன்பத்துக்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று கிடைக்காததை விரும்புவது. மற்றொன்று கிடைப்பதை விரும்பாதது. முன்னது 'சுகபோகங்களை' வளர்ப்பது. எளிதில் கிடைக்காதது மட்டுமன்று. கிடைப்பினும் 'போதும்' என்ற நிலை ஏற்படாமல், மேலும் மேலும் விருப்பத்தை வளர்க்க வல்லது. அதுமட்டுமா? கிடைத்தவரையில் அனுபவித்ததன் காரணமாக எதிர்விளைவுகள் ஏற்பட்டு மீண்டும் துன்பமே பெருக வழி வகுப்பது, எனவே, எளிதில் கிடைக்கக் கூடியதான 'கிடைப்பதை' விரும்பிவிட்டால் பிரச்சினைகளுக்கே இடமில்லை. எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியது எது? ''அன்பெனும் பிடியினுள் அகப்படும் மலை'' என்றார் சேக்கிழார் பெருமானார். எல்லையில்லாத் திருவருள் சுரக்கும் பரம்பொருளை விரும்பினால் துன்பமேயில்லை. ''வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல'' என்று உலகப் பொது மறையாகிய திருக்குறள் நவில்கின்றது.

பரம்பொருளாகிய இறைவனை எவ்வாறு அறிந்து கொள்வது? அறிந்து கொண்டாலன்றோ விரும்ப முடியும். அறிந்து கொள்வதற்குத் தாயுமானவர் ஓர் எளிய வழிமுறையைக் கூறுகின்றார்.

''அருளாலே யாவையும் பார் என்றான் அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால் கண்ட
என்னையும் கண்டிலேன் என்னடி தோழி!''

இப் பராபரக் கண்ணி உணர்த்துவது யாது? ஆண்டவனை அருட்கண்ணால் பார் தெரிவான். அறிவுக் கண்ணால் பார்த்தால் இருள்தான் தெரியும். அந்த இருட்டில் உன்னால் உன்னையே காண முடியாது- என்பதாகும். அருட்கண்ணோடு பார்த்துத் தெரிந்து கொண்டு, ஆண்டவனை அன்பெனும் பிடியுள் அகப்படுத்தினால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

கண்

செல்வி
மு. நா. பெரி. செந்தாமரை III B.Com
வலையபட்டி.

பாலை அளப்பதற்கு லிட்டர் என்ற அளவையைப் பயன்படுத்துகிறோம்; துணியை அளப்பதற்கு மீட்டர் என்ற அளவைப் பயன்படுத்துகிறோம். நிறுவையை கிராம் என்ற அளவையில் காண்கிறோம்; அப்படியெனில் மனிதனை எதனால் அளக்க வேண்டும்? மனிதனின் கண்களைக் கொண்டுதான், "அவன் எப்படிப் பட்ட இயல்புடையவன்?" என்பதை அளக்க வேண்டும். உதாரணமாக ஒருவன் சாந்தமாக இருக்கிறான், கோபமாக இருக்கிறான், மகிழ்ச்சியாக இருக்கிறான் என்பதை. ஒருவனது கண்களில் இருந்து நாம் அறியலாம். மேலும் மனிதனுக்குரிய ஐம் பொறிகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவதும் "கண்" என்ற பொறியேயாகும்.

"கணவன்" என்ற வார்த்தையும் "கண்" என்ற பொறியை வைத்து வந்ததே யாகும், அதாவது கண் - அவன் கணவன் என்பதாம். "கண்" என்ற இந்த உறுப்பின் முக்கியத்துவத்தைப் பல்வேறு இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன.

காளத்திநாதர் மீது அளவிலா அன்பு கொண்டு, கண்ணீர் மல்கக் கசிந்துருகி நின்ற காளத்தி வேடன், தமது மற்றொரு கண்ணையும் அப்ப ஆயத்தமாகும் பொழுது, "கண்ணப்ப நிறுத்து", என்று எம்பெருமான் சிவனால் தடுத்து ஆட் கொள்ளப்பட்டார். (கண் - அப்பன்); அதாவது தமது கண்ணையே எடுத்து அப்ப வந்த காரணத்தால் அவர் "கண்ணப்பர்" என்று அழைக்கப்பட்டார்.

திருவீழிமிழலையிலே, திருமால் சக்கராயுதத்தைப் பெறும் பொருட்டு. தினமும் ஆயிரம் மலர்களால் அர்ச்சித்து வந்தார். இவ்வாறாக அர்ச்சித்து வரும்பொழுது. ஒரு நாள் சிவபெருமான் ஆயிரம் மலர்களில் ஒரு மலரை எடுத்து ஒளித்துக் கொண்டார். உடனே திருமால் அந்த ஒரு மலருக்காகத் தன் கண் மலரையே அர்ப்பணிக்க முன் வந்தார். எனவே சிவபெருமானால் "கண்ணன்' என்ற பெயரைப் பெற்றார்.

நமது வீடுகளிலும் குழந்தைகளை "என் கண்ணல்ல," என்று கொஞ்சுவோம். தாலாட்டுப் பாடல்களிலும், "கண்ணுக்குக் கண் போன்று, காலகத்து வண்டு போன்று, மல்லிகைப்பூச் செண்டு போன்று, மரிக்கொழுந்து வாசம் போன்று" என்று வரும் அடிகளும் ஈங்கு நோக்கத்தக்கது.

இப்படிப்பட்ட 'கண்ணை' வைத்தே அம்பிகைக்கும் "மீனாட்சி", "காமாட்சி' "விசாலாட்சி" நீலாட்சி" என்ற பெயர்களும் அமைந்தது.

தண்ணீரில் வாழும் மீன், முட்டைகளை இட்டு, அம் முட்டைகளை தனது கண்ணால் கூர்ந்து நோக்க, பின்பு முட்டைகளில் இருந்து குஞ்சுகள் வெளிவரும். மீன் எவ்வாறு தனது பார்வையால் குஞ்சுகளைக் காக்கின்றதோ, அவ்வாறே கயல் போன்ற கண்களையுடைய மீனாட்சியம்மையும், தனது அருட்பார்வையால் ஈரேழு உலகத்திலுமுள்ள நிற்பன, நடப்பன, கத்துவன. தவழ்வன, ஊர்வன, பறப்பன. என்ற எழ்வகை உயிர்களையும் காத்து நிற்கின்றாள்.

இல்லறத்தில் ஒழுகுபவர்களுக்கு, அறத்தின் பால் பட்ட காமம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்; அந்த முறையிலே காமத்தின் பால் ஆட்சி செய்பவள் ''காமாட்சி'' என்றும், விசாலமான அருள் நெஞ்சத்தையும் செல்வத்தையும் அருள்பவள் விசாலாட்சி என்றும் கூறப்பட்டது; பரந்து விரிந்த வானமும், கடலும் வெளியும் நீலமாகக் காட்சி தரும். ஆகவே நீலம் என்றாலே ''பரந்த, விரிந்த'' என்ற ஒரு பொருளையும் கொள்ளலாம்; எனவே நீலமான கண்களால் இப்பரந்த, விரிந்த உலகிலுள்ள உயிரினங்களைக் காப்பவள் நீலாட்சியம்மையாம்;

மேலும் கண்கள் தான் ஒரு மனிதனின் முகத்திற்குக் அழகைக் கொடுப்பது. எனவே தான் இலக்கியங்களிலும், கவிதைகளிலும் பெண்களின் கண்களைக் குறிப்பிடுங்கால், ''கயல் விழியாள்'' என்றும் ''மீன் போன்ற கண்களை உடையவள்'' என்றும் ''கத்தி போன்ற கண்களை பெற்றவள் என்றும்'' செவ்வரியோடிய கண்களிரண்டும் வேலொடு வேலாட என்றும்'', வில்லையும், வேலையும் வெல்லக்கூடிய விழி'' என்றும் பல்வேறாக வர்ணித்தார்கள்.

எனவே, இக் கண்ணின் முக்கியம் கருதியே வள்ளுவப் பெருந்தகையும், கல்லாதவர்களை, ''முகத்திரண்டு புண்ணுடையோர்'' என்றும், பாட்டுக்கொரு புலவன் பாரதியும், ஒளி படைத்த கண்ணினாய் வா, வா'' என்றும், மற்றும் ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்'' என்றெல்லாம் கூறிச் சென்றார்கள்;

இப்படிப்பட்ட இலக்கிய நயங்களையெல்லாம், நம் வாழ்க்கையில் கற்றுணர்ந்து இன்புறுவோமாக;



ஆடையும் போர்வையும்

அரசு மணிமேகலை
எம்.ஏ. எம்.பில்

செம்மையாய்க் கடமைகளைச் சீராக முடித்துவிட்டு,
அம்மையை அப்பனை அன்றாடம் பணிந்துவிட்டு,
உண்மையாம் ஒளிவிளக்கை ஓங்கியே ஒளிரவிட்டு,
தண்மையாம் உள்ளத்திலே தளர்ச்சியினை விலக்கிவிட்டு

உள்ளபடி மனிதர்களாய் உலவுகின்றார் அவர்தமக்கே
நல்லபடி கருணைமழை நானிலத்தில் இறைநல்கும்;
சொல்லும்படி அவர்வாழ்க்கை சுகமுறவே அமைந்திருக்கும்!
வெல்லும்படி வாய்ப்புகளை வெற்றித்திரு அளித்திருக்கும்!

மானிடராய்ப் பிறந்துவிட்ட மாண்புடைய வாழ்க்கையிலே
மதிப்புடைய நற்குணங்கள் மண்மிசைநாம் வளர்க்காமல்
ஊனுடம்பை வளர்ப்பதற்கே உள்ளபடி பாடுபட்டால்
உயிர்பெற்றும் லாபமென்ன? உண்டான நோக்கமென்ன?

போர்வையாக பக்திதன்னைப் போலியாகக் கொள்ளாமல்,
ஆடையாக அணிவதுவே அற்புதநல் ஆன்மீகமாம்!
பார்வையிலே ஏற்றத்தாழ்வு பாகுபாடு கொள்ளாமல்
பாமரர்க்கும் மனிதநேயம் பண்புடனே தரல்வேண்டும்!

ஆரவார சடங்குகளை அன்றாடம் வளர்க்காமல்,
ஆணவப் புயல்நடுவே அழிந்துஅலைக் கழியாமல்,
தன்னைத்தான் இழந்திருக்கும் தனித்துவமே பக்திநிலை;
பொன்னைப்போல் மாற்றுகின்ற புனிதத்துவம் பக்திநிலை!

அன்றாடம் படுக்குமுன்னே அவரவர்தம் உள்ளத்துள்
இந்நாளில் நன்மையென்ன இயற்றினன்நான் எனுங்கேள்வி
எழவேண்டும் நிச்சயமாய்; என்றால்தான் அவன்மனிதன்;
ஏற்றிடுவோம் இச்சபதம் எல்லோரும் இந்நாளில்!

நகரக் கோயில்கள் ஒன்பது

கண்டவராயன்பட்டி
நல்லறக் கவிராயர்
சுப.நா. நாகப்பன்

ஒன்பதுகோ வில்நகரத் தார்இளையாத் தக்குடியாம்
நன்மாற்றார் பேர்வைரவன் கோவிலுடன்—முன் இரணியூர்
பொன்பிள்ளை யார்பட்டி நேமமிலுப் பைகுரை
மூன்றுகுடி வேலன் முதல்

வெண்பாக்கள் பாடுவதற்கு வேண்டும் விவரங்கள்
பண்பாக அய்யனருள்ப் பாஇசைக்கத்—தண்டமிழ்த்தாய்
கண்முன்னே நல்வளமாய்க் கற்கண்டுச் சொல்லினிக்க
வண்டமிழ்த் தாயீந்தாள் வாழ்த்து

அம்மையப்பன் ஆனைமுகன் ஆறுமுகன் அய்யப்பன்
செம்மைசேர் செவ்வழியைச் செப்புகின்றார்—அம்மையுமை
நம்மையெல்லாம் நல்வழியில் நாடுயற வாழ்ந்துயர
தும்பிக்கை யான்துணைக் கொண்டு

பாடுவார் முத்தப்பர் பட்டினத்தார் காளமேகம்
பாடுகின்ற பண்புகளில் பாடுகின்றேன்—நாடுயரக்
கூடும் நகரத்தார் கும்பாபி ஷேகஞ்செய்து
நீடுவாழ வாழ்த்துகிறேன் வாழ்த்து

பேரிளையாத் தக்குடிவாழ் பேர்நகரத் தார்மக்கள்
சீரோங்கச் சிந்தையும் செல்வமோங்கப்—பார்புகழ
பேர்விளங்கப் பல்தொழிலும் பண்புயரத் தோற்றிவைக்கும்
கார்பொழியும் மாமழையார் காண்

தெய்வத் திருப்பணியால் தேச நலமோங்கும்
மெய்யிளையாத் தக்குடி மாநகரம்—மெய்யுலகில்
செய்யுமகா கும்பாபி ஷேகந்தான் மேதினியில்
உய்யவழி காட்டும் உலகு

நாட்டினிலே செட்டிமக்கள் நற்பணிக்கே தொண்டனாகிக்
காட்டும் திருப்பணிக்கே காலமெலாம்—ஊட்டமுடன்
நாட்டுகின்ற பல்தொழிலும் நாட்டமுடன் பேலோங்கிக்
கூட்டமுடன் பேரோங்கும் காண்:

முத்தமிழும் போற்றிகின்ற முத்தையவேள் ஈந்தமைந்தர்
எத்திக்கும் போற்றிவரும் எம்ஏஎம்—சித்தமுடன்
பித்தாய்ப் பிறைசூடும் பெருமான் திருப்பணிக்கே
நித்தம் தலைவரானார் நீடு

எம். ஏ. எம் அன்புடனே ஏற்கின்ற நற்பணியில்
செம்மைமிகும் செல்வமிகும் சேர்ந்துய்ய—நம்மையெலாம்
அம்மையப்பன் ஒன்றுகூட்டி ஆர்வமுடன் செய்யவைப்பார்
இம்மையிலே நாம்காணும் பேறு.

புதியதோர் உலகம் செய்வோம்!

திருமதி சாந்தா வெங்கடாசலம்
காரைக்குடி

முகவை மாவட்டத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார் வசிக்கும் பகுதி ஒரு மூக்குத்தி அளவுதான் என்றாலும் அது வைர மூக்குத்தி அல்லவா! எவ்வளவு பெரிய உண்மை அது! தகதகவென்று ஜொலிக்கின்ற சமூகத்தில்தான் நான் பிறந்து, வளர்ந்து வாழ்க்கைப்பட்டிருக்கின்றேன்!

மாத்தூர் கோவில் மண்ணூர் பிரிவில் கோட்டையூரில் பிறந்தவள் நான்! என் தந்தையார் N மெய்யப்பச் செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தங்க மெடல் பெற்றவர்கள். அவர், தனக்கு நான்கு பெண்குழந்தைகள் பிறந்து விட்டனவே! அதுவும் இந்தச் செட்டியார் சமூகத்தில் கரையேற நிறைய செல்வம் வேண்டுமே! என்றெல்லாம் புலம்பாமல் பெரிய செல்வமாகிய கல்விச் செல்வத்தை எங்கள் அனைவருக்கும் அளித்தார்கள். அவர்கள் மறைவிற்குப் பிறகு எங்கள் தாயார் அதே வழியில் தொடர்ந்து எங்களுக்குக் கல்வி பயில்வித்தார்கள்; நல்ல மணவாழ்க்கையையும் அமைத்துக் கொடுத்தார்கள்;

நகரக்கோவில்கள் அனைத்துமே பொதுவாக இறைவன் பெயரிலேயே அமைந்திருக்கின்றது. ஆனால் தனிமனிதர் பெயரையே தங்கள் பிரிவிற்கு வைத்தவர்கள் இளையாற்றங்குடியினர். அந்தத் தனிமனிதர் பெயர் பட்டினத்தார்; இளையாற்றங்குடி பட்டினசாமி பிரிவுக்கு அவர் பெயரை வைத்திருக்கின்றார்கள். 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அம்மாமேதையை நினைவு கொள்ளும் வண்ணம் அவர் பெயரை வைத்துப் போற்றி வந்திருக்கின்ற பாரம்பரியமிக்க இளையாற்றங்குடி பட்டினசாமி பிரிவினைச் சார்ந்த காரைக்குடியில் உள்ள சி. மு. அரு. நா. அருணாசலம் செட்டியார் அவர்களின் கடைசி மகன் திரு. வெங்கடாசலம் அவர்களை மணந்தேன்! பாரம்பரியம் மிக்க இந்தக் குடும்பம் இளையாற்றங்குடி கோவிலுடன் நிறையத் தொடர்பு கொண்டது. என் மாமனார் மற்றும் அவர்கள் தகப்பனார் ஆகியோர் இக்கோவிலுக்கு கடந்த 20 வருடங்களாகத் தொடர்ந்து Government appointed trustees ஆக இருந்திருக்கின்றார்கள். அப் பணி தொடர்ந்து இளையதலைமுறைவரை வந்திருக்கிறது. தற்போது என் கணவரின் மூத்த சகோதரர் திரு A. R. நாராயணன் அவர்கள் Trustee ஆக இருந்து இறைபணி செய்து வருகின்றார்கள்;

இப்பேர்ப்பட்ட பெருமைமிகு குடும்பத்தில் நான் நுழைந்த போது, நகரத்தார் பழக்க வழக்கங்கள் பற்றி அதிகம் தெரியாமல் இருந்தேன். ஆனால் வாழ்க்கையில் வந்த வசந்தம் (என் கணவர்) புதுப்புது ஜன்னல்களைத் திறந்து விட்டது! நகரத்தார் பழக்க வழக்கங்களை முற்றிலும் தெரிந்து கொண்டவளானேன்! இன்று எங்கள் வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும்போது நான் பம்பரமாய்ச் சுழல்கின்றேன் என்றால் அதற்குக் காரணம் மறைந்த என் மாமியார் காவேரி ஆச்சி அவர்கள் என்னை பழக்கிய விதம் தான்

பொதுவாகவே நகரத்தார் கலாரசனை நிறைந்தவர்கள்! நகைச்சுவையுணர்வு மிக்கவர்கள்! இவை இரண்டிலும் வைரமாக மிளிர்கின்றவர்கள் இளையாற்றங் குடியினர். என் கணவரின் தூண்டுதலின் பேரில்தான் நான் எழுதத் துவங்கினேன்! எப்போதுமே எதைப் படித்தாலும் அதைப்பற்றி விவாதிக்கும் ஆர்வம் எனக்கு நிறைய உண்டு. அந்த ஆர்வத்தைத் தக்க வகையில் வளர்த்தார் அவர்! விளைவு- இன்று ''மதுரை மீனாட்சி ஜேசீஸ்'' என்ற அமைப்பின் உபதலைவியாக சர்வதேச தொடர்புகளை என் பணியாக மேற்கொண்டிருக்கின்றேன். அது மட்டுமல்ல, இருபது வயதில் தொடங்கிய என் வங்கிப் பணியை நான் இன்னும் விட்டுவிடவில்லை. இன்றும் இந்தியன் வங்கியின் மதுரை - புதூர் கிளையின் அக்கௌன்டென்டாகப் பணிபுரிந்து வருகின்றேன்.

நமது சமூகம் ஒப்பற்ற சமூகம் என்பதில் ஐயமில்லை எனக்கு! ஆனால் அதைப் பற்றி என் மனதிலும் சிலகுறைகள்?

நம் இனத்தில் கல்வியும், தொழிற் பயிற்சியும் மிகவும் குறைவு. குறிப்பாகப் பெண்கள் குறிப்பிட்ட வட்டத்தை விட்டுவெளியே வருவதேயில்லை என்ற குறை எனக்கு நிறைய உண்டு! நாம் பழமை விரும்பிகளாக இருப்பதை நானும் மிகவும் விரும்புகின்றேன். ஆனால் நம்மைச் சுற்றி நாம் போட்டிருக்கின்ற சில வேலிகள் நம் இனத்துப் பயிர்களையே மேய்கின்றன! அவற்றை அறவே ஒழிக்க வேண்டும். இந்தக் காலத்து நடைமுறைக்கு ஒத்துவராத பழமைகளை விட்டுவிட வேண்டும்.

குழந்தைகளை நன்றாகப் படிக்க வையுங்கள். பெண்ணுக்குச் சீர் வைக்கச் சேர்க்கின்ற காசில் கொஞ்சத்தை அவள் அறிவை விருத்தியடையச் செலவழியுங்கள்! பையனை பாங்கில் சேர்க்க வேண்டும் என்ற ஊறிப் போன ஒரே லட்சியத்தில் வளர்க்காதீர்கள். இன்று நாட்டில் எத்தனை துறைகள் உள்ளன! அவன் ஒரு சிறு தொழில் தொடங்கிப் பின் பெரிய Industrialist ஆக வேண்டுமென்ற பொறியை அவன் மனதில் விதையுங்கள்.

பத்திரிகைத்துறையில் குமுதம் ஆசிரியருக்கும், லேனாதமிழ்வாணனுக்கும் மடக்கியது போக மீதி எட்டு விரல்கள் கையில் உள்ளனவே! அதற்கு யார் வரப் போகின்றார்கள்?

மறைந்த கவிஞர் கண்ணதாசன் விட்டுப்போன இடத்தை யாரும் நெருங்கக் கூட இல்லையே! நம் இனத்துச் செல்வங்கள் இங்கெல்லாம் வந்து வெற்றி நடை போட வேண்டும்.

எனவே, என் இனிய நகரத்தார் நண்பர்களே! இன்றுமுதல் ''புதியதோர் உலகம் செய்வோமா!''

செய்தி மலர்கள்

நா. மு. நா. பெரி. மீனுச்சி ஆச்சி
வலையபட்டி.

தென் பொதிகைச் சந்தனத்தின் தெய்வ மணம் கமழும் தென்பாண்டி நாட்டதன்கண் வாழ் நகரத்தார்கள் பற்றிய ஒரு சில விவரங்கள்:

நகரத்தார் மொத்தப் புள்ளிகள் : 25,000

மொத்த நகரத்தார் மக்கள் தொகை : 96,000

நகரத்தாரில் முதல் காப்பியம் யாத்தவர் : சீத்தலைச்சாத்தனார்

நகரத்தாரில் முதல் புலவர் : ஒக்கூர் மாசாத்தியார்

நகரத்தாரில் முதல் தத்துவஞானி : பட்டினத்தார்

நகரத்தாரில் திருத்தொண்டர் : ஏலேலசிங்கர்

நகரத்தாரில் காப்பியத் தலைவன் : கோவலன்

" தலைவி : கண்ணகி

நாயன்மார்களில் நகரத்தார்கள் : ஐவர்

(அவர்கள் முறையே இயற்பகை நாயனார், அமர்நீதி நாயனார், மூர்த்தி நாயனார், காரைக்காலம்மையார், கலிக்கலம்பக நாயனார்)

"மன்னவர் பின்னோர்" —என இளங்கோவடிகள் நகரத்தாரைக் குறிப்பிடுகிறார்

புதுக்கோட்டைக்கருகில் உள்ள நார்த்தா மலையின் உண்மையான பெயர் "நகரத்தார் மலை" என்பதேயாகும்.

செட்டிநாட்டின் எல்லை :

"வெள்ளாறு வடக்காம்; மேற்குப்பிரான் மலையாம்;
தெள்ளார்புனல் வைகைத் தெற்காகும் ஒள்ளியசீர்
எட்டிக் கடல் கிழக்காகும்; இஃதன்றோ நாட்டரசன் சேர்
செட்டி நாட்டு எல்லையெனச் செப்பு!"

சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் ஜோதி; மேலும் தாயும் தந்தையும் இல்லாத் தனிப்பெரும் தன்மை படைத்தவன். அப்படிப்பட்ட சிவபிரானுக்கே தாயாகத் திகழ்ந்தவர் நகரத்தார் மரபில் உதித்த 'காரைக் காலம்மையார்". எவ்வாறு? சிவபெருமான் உமையம்மையிடம், எலும்புருவுடன் தன் தலையாலே கைலாய மலையில் நடந்துவரும் காரைக்காலம்மையாரைக் காண்பித்து "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே" என்று கூறுவதிலிருந்து அறியலாம். அவ்வாறே நகரத்தார் மரபைச் சேர்ந்த திருவெண் காடர் என்ற பட்டினத்தாருக்குச் சிவபெருமான் குழந்தையாக அவதரித்ததால் பட்டினத்தார் சிவனுக்கே தகப்பனாராகத் திகழ்ந்தவராவார்.

எல்லாம் வல்லவனை
இளையாற்ருங்குடியானை
பணிந்தால் பலனுண்டு
பக்தி செய்தால் நலமுண்டு
வையமெல்லாம் சிறந்தோங்க
அவனை
வணங்கி வாழ்த்திடுவோம்
வரங்கள் பல பெற்றிடுவோம்

கயிலாசநாதர் பதிகம்

கவிஞர் சொ. தேவராஜன்
காரைக்குடி.

நீராரும் பொன்னி வளநாடு தன்னில் நெடுநாள் இருந்த வணிகர்
பேராரும் பாண்டித் திருநாடு வந்து பீடாரும் இளைசை நகரில்
சீரோடு வாழ நலம்யாவும் அருள்வாய் சிறையாரும் வண்டு முரலும்
காராரும் குழலி கலியாணி மருவும் கயிலாய நாத பரனே

மானத்தைக் காக்கத் தலைவெட்டு நல்க வழிகாணக் கூடும் அவையில்
தானுள்ளம் ஆரத் தலையொன்று கூடத் தரவந்த ஒக்கூர் உடையார்
வானுற்ற புகழ்சேர் வகைமக்கள் பரவ வளம்யாவும் அருள்வாய் இனிதே
கானத்தினாலே பாணற்கின் னருள்கூர் கயிலாய நாத பரனே

உலகெல்லாம் போற்று துறவுற்ற ஞானி உயர்பட்டி னத்துச் சாமி
நலங்கொண்ட பெயரில் குலங்கொண்ட செல்வர் நாள்தோறும் பரவ அருள்வாய்
சலங்கொண்ட கங்கை நதியோடு கொன்றை சடைசூடி உள்ளம் மகிழக்
கலந்தன்னை உமையை இடங்கொண்டிருக்கும் கயிலாய நாத பரனே௩

தமிழோடு சைவம் தழைத்தோங்கு வண்ணம் தரமான பணிகள் புரிவார்
அமுதான பண்பர் பெரிதான மருதூர் உடையார்கள் பரவ அருள்வாய்
உமையான நித்ய கலியாணி அம்மை உடனுறைக் காட்சி தருவாய்
கமுகோடு தென்னை வளர்சோலை இளைசை கயிலாய நாத பரனே௪

சமயங்கள் யாவும் சார்கின்ற தெய்வம் தானென்றே என்னும் நினைவில்
அமைகின்ற கழனி வாசற்பே ராளர் அரிகோவில் கண்டுன் பதமாம்
கமலங்கள் தொழவும் நலம்யாவும் அருள்வாய் ககனத்தில் திங்கள் வரவும்
குமுதங்கள் மலரக் குளம் பல்கும் இளைசை குடிகொண்ட கயிலை பரனே௫

நிகழுங்கின் இனிக்கூர் புகழ்பேர செந்தூர் சிறுசேத்தூர் உடையார் எனவே
வகையான மும்மை வழிவந்த மக்கள் மறவாதுன் பாதம் தினமே
சிகைமீது சூடிக் குணங்கூரப் பாடச் செகமீது தருவாய் நலமே
மகதேவி நித்ய கலியாணி உடனே மகிழ்கூரும் கயிலை பரனே

பிரிவேழில் வந்த பெருமக்கள் இளைசைப் பீடாரும் நகரில் தமதாய்ச்
சரியேழும் குளமும் கரிமா முகத்தன் தனியேழும் நிறுவி நிதமே
அறுகோடு தும்பை மலர்சூடும் நின்னை அன்போடு பரவ அருள்வாய்
கரிபோர்வை யோடு புலியாடை கொண்ட கயிலாய நாத பரனே;

நிதிவேண்டும் நல்ல கதிவேண்டும் வாழ்வில் நிறை ஆயுள் வேண்டும் எனவே
துதிபாடி நின்பால் முறையீடு பலவும் சொலவேண்டு மோசொல் எளியேற்
கெதுவேண்டு மென்பதறியாயோ அகலா தெனதுள்ளம் உறையும் சிவனே
நதிபூண்ட வேணி வளமாரும் இளைசை நகர்மேவும் கயிலை பரனே.

கோடானு கோடி உயிரைப் புரக்கும் கோமான் உன் பெருமை தனையே
பாடாத வாயும் நினையாத மனமும் பணியாத தலையும் உடையேற்
கேடாக யாரும் உளரோயிப் பாவி ஈடேறக் கருணை புரிவாய்
காடாடி உள்ளம் கனிந்தாட அருள்கூர் கயிலாய நாத பரனே;

தவமாரு முனிவர் பலரோடு வானத் தலமேவு சுரரும் செழுமி
சிவலோக மென்னத் திகழ்கின்ற இளைசைத் திருவோங்கு நகரில் புனிதச்
சிவதீர்த்த மாட வினையாவும் ஓட அருள்கூரும் சிவனே சிறியேன்
கவிபத்தும் ஏற்றுக் களி வாழ்வு தருவாய் கயிலாய நாத பரனே.

அருளே நிரந்தரம்

கவிஞர் ஏர்வாடி
எஸ். இராதாகிருஷ்ணன்

கோவிலில் கூடிய கூட்டம் பார்த்து
கடவுள் மனம்குளிர்ந்தான்
தேவையைக் கேட்டுத் தருவதற்காக
தேவன் தலம்புகுந்தான்;

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தேவையை
உரைத்தனர் அவனிடமே
எவ்விதம் எவரெவர் கேட்டதை அருளிட
இருந்தான் அவ்விடமே!

பொருளைத் தாவெனக் கேட்டொரு பக்தன்
பரமனின் தாள்விழுந்தான்
பொருளைப் பிறிதொரு பேர்வழி விழுங்க
பாவம் பின் அழுதான்;

உடலில் ஒருவன் உறுபிணி அணுகா
உயர்நிலை தருகயென்றான்
கடவுளும் அருளினன் காலனே தீயினிற்
கருகிட வருகயென்றான்;

அழகியைத் துணையாய் அடைவதற்காக
அடுத்தவன் வரம்கேட்டான்
கிழவியாய்ப் போனதும் கடவுளை மீண்டும்
கிழவன் தான்நினைத்தான்;

பதவியைப் பெரிதெனப் போற்றிய ஒருவன்
பேறதை அருள்கவென்றான்
இதுவரை இருந்தது போதுமென்றேகுடி.
மக்களோ மாற்றிவிட்டார்;

வேறொரு மாந்தன் ""வள்ளலே உன்னருள்
வேண்டுமே"" எனவுரைத்தான்.
பேறது என்றவன் பெற்றது நிலைத்தது
பரமனும் மனம்மகிழ்ந்தான்.

கொடுப்பதைக் கொடுப்பதும் கிடைத்ததைப் பறிப்பதும்
கடவுளின் லீலையன்றோ!
அடுத்தது சொர்க்கம் அதனில் உய்ப்பது
அவனருட் சோலையன்றோ;

நிலையா உலகினில் நிலைப்பது எதுவெனில்
நாதனின் திருவருளே
நிலைமையை உணர்ந்தே நிதமவன் பாதம்
நினைந்தால் வரும்சுகமே!

காலையும் மாலையும்
கடவுளை வணங்கினால்
நாடுவதனைத்தும்
நன்மையாய் நடந்திடும்
கூடுங்கள் இளையாற்றங்குடிக்
கோயில் சந்நிதியில்
நித்தியகல்யாணி அம்பிகையும்
கைலாசநாதரும்
நினைத்ததெல்லாம் தருவார்கள்
நிம்மதியை அருள்வார்கள்